# காதல் வாழ்க்கை



கவிநாயகர் வி. கந்தவனம்

# காதல்



# வாழ்க்கை

கவிநாயகர் வி. கந்தவனம்

காந்தளகம்

4, முதல் மாடி, இரகிசா கட்டடம்,
68, அண்ணா சாலை, சென்னை - 600 002.
தொ.பே. : 044 - 2841 4505
மின்னஞ்சல் : tamilnool@tamilnool.com
மின்னம்பலம் : www.tamilnool.com, www.thevaaram.org

முதற்பதிப்பு : திருவள்ளுவர் ஆண்டு 2045 (2014)

உரிமை : ஆசிரியருக்கு

ஓவியங்கள் : ஓவியர் ராஜே

வடிவமைப்பு : சசிரேகா பாலசுப்பிரமணியன்

அபுதஎ ISBN : 978 - 81 - 89708 - 49 - 8

விலை : அமெரிக்க $25

**அச்சிடல் தயாரிப்பு:**

காந்தளகம்

4, முதல் மாடி, இரகிசா கட்டடம்,
68, அண்ணா சாலை,
சென்னை - 600 002.
தொ.பே. : 0091 - 44 - 2841 4505
மின்னஞ்சல் : tamilnool@tamilnool.com
மின்னம்பலம் : www.tamilnool.com, www.thevaaram.org

# உள்ளடக்கம்


| | | |
|---|---|---|
| | பதிப்புரை | 5 |
| | அணிந்துரை | 7 |
| | முன்னுரை | 20 |
| 1. | திருமணம் | 26 |
| 2. | அன்புடைமை | 30 |
| 3. | பண்புடைமை | 34 |
| 4. | இரு நோக்கு | 38 |
| 5. | கள்வன் மகன் | 42 |
| 6. | உடன்போக்கு | 46 |
| 7. | அண்ணலும் நோக்கினான் அவளும் நோக்கினாள் | 50 |
| 8. | சீதா கல்யாணம் | 54 |
| 9. | பூம்புகார்த் திருமணம் | 58 |
| 10. | மாசறு பொன்னே | 62 |
| 11. | கற்பு வாழ்க்கை | 66 |
| 12. | கணவனைப் பேணும் மனைவி | 71 |

| | | |
|---|---|---|
| 13. | மனைவியைப் பிரியாத கணவன் | 75 |
| 14. | விருந்தோம்பல் | 79 |
| 15. | வறுமை வரினும் வற்றாது அன்பு | 83 |
| 16. | சுற்றம் ஓம்பிய கற்றவர் குடும்பம் | 87 |
| 17. | இயற்கையைப் பேணிய இதயங்கள் | 91 |
| 18. | மயக்குறு மக்கள் | 95 |
| 19. | அன்னப் பறவை வளர்த்த அற்புதக் காதல் | 99 |
| 20. | வனத்தின் வனப்பு | 103 |
| 21. | புணர்ச்சி இன்பம் | 107 |
| 22. | இரவில் வரவேண்டாம் | 112 |
| 23. | மணம் செய்வதே மருந்து | 116 |
| 24. | மணக்க வருகிறான் தலைவன் | 120 |
| 25. | முதலிரவு | 124 |
| 26. | மனைவியை வணங்கிய கணவன் | 129 |
| 27. | கணவனைத் தண்டித்த கற்பரசி | 133 |
| 28. | வருந்தியும் விருந்தோம்பும் வாழ்வு | 138 |
| 29. | காரைக்கால் அம்மையாரின் காதல் வாழ்க்கை | 143 |
| 30. | திருமண வாழ்த்து | 148 |



# பதிப்புரை

## மறவன்புலவு க. சச்சிதானந்தன்

உயிரில் உணர்வு உள்ளகம். உணர்வில் அன்பு முதனிலை. அன்பில் முதனிலை தாயன்பு. அன்பின் அடுத்த நிலை காதல்.

உயிருக்குக் காதல் இயல்பு. காமத்தின் திறவுகோல் காதல். உயிர்த் தொடர்ச்சிக்கு உந்துதல் காமம்.

காலத்தின் கொடுமை உடல் அழிதல். உடல் அழிந்தாலும் உயிர் அழியாமல் தொடரவே உயிரின் உள்ளடக்கமாக இனப்பெருக்கம்.

உயிர்கள் அனைத்தும் இனப்பெருக்குவன. எனவே காமம் உயிரின் வல்லியல்பு, காமத்தின் திறவுகோலான காதல் உயிரின் மெல்லியல்பு.

ஓரறிவு உயிர் முதலாக, ஆறறிவு மனிதன் ஈறாகக் காதலின்பம் உந்தும் காம இன்பத்தை இயல்பாகக் கொண்டன. இதுவே உயிரியலார் கூற்றாகப் பாடநூல்களில் வரும் செய்தி.

காம உணர்வு பிறர் சொல்லியோ தூண்டியோ வருவதன்று. உயிர்மேல் அமர்ந்து வருவது. இயல்பாக வருவது. உயிர்களின் மரபணுக்களில் புதைந்துள்ளது.

இச் செய்தியைத் தொல்காப்பியர், தமது பொருளதிகாரம், பொருளியல் 27ஆம் நூற்பாவில், ‘எல்லா உயிர்க்கும் இன்பம் என்பது, தான் அமர்ந்து வரூஉம் மேவற்று ஆகும்’ என்பர்.

அவ்வாறே காமத்தை உந்தும் காதலுணர்வு இயற்கையின் கொடை. உணர்வுப்

புணர்ச்சி காதல், அதுவழி உடற் புணர்ச்சி காமம்.

ஓரறிவுக் காதலுக்கு மொழி உண்டா? மூவறிவு, நான்கறிவு, ஐயறிவு, ஆறறிவுக் காதலுக்கு மொழிகள் உள. வண்டுக்கு ரீங்காரம், தவளையின் விளரி, மனிதனுக்கு இசை கலந்த காதற் பாடல்கள்.

தமிழரின் காதல் வாழ்க்கைக்குக் கவிதை உணர்வு கவின்தளம். கவிநாயகர் கந்தவனம் 30 தலைப்புகளில் காதல் வாழ்க்கையின் கூறுகளைத் தருகிறார்.

அன்பின் புணர்ச்சி செம்புலப் பெயல்நீர் என்ற கற்பனை சங்கப் புலவருடையது. மருவக் காதல் கொள்ளலாம், காதலினால் சாகாமலிருத்தல் கூடும் என்றவர் பாரதியார்.

கவிநாயகர் கந்தவனம் அவர்களின் நூல்களைத் தமிழகத்தில் தயாரித்துப் பதிப்பிக்கும் சீரிய பணியில், சென்னையில் காந்தளகம் தொடங்கிய நாள்களில் இருந்தே ஈடுபட்டு வருகிறோம். தமிழுக்கு முகவரியானவர், தமிழருக்குச் செல்நெறி காட்டுபவர், அவரின் நூல்கள் தமிழ்க் களஞ்சியங்கள்.

அன்னாரின் *காதல் வாழ்க்கையும்* அத்தகையதே.

அன்புடன்,

சச்சிதானந்தன்



# அணிந்துரை

## முனைவர் சிலம்பொலி சு. செல்லப்பன், எம்.ஏ., பி.டி., பி.எல்., பிஎச்.டி.

### ஈழம் தந்த தமிழ்க் கொடை

ஈழம் தமிழுக்கு அளித்துள்ள நன்கொடை அளப்பரிது. தமிழில் புதுமைப் போக்குகளை உருவாக்கித் தமிழுக்கு வளம் சேர்த்தவர் தமிழ் ஈழத்தார். அ. சந்திரசேகர பண்டிதர், யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த உடுவில் என்னும் ஊரினர். தமிழில் முதன்முதலில் தோன்றிய அகராதி, 'யாழ்ப்பாண அகராதி' எனப்படும் மானிப்பாய் அகராதி. இந்த அகராதியை இவர் கி. பி. 1842இல் தொகுத்து வெளியிட்டார்.

யாழ்ப்பாணம், சுன்னாகம் என்னும் ஊரில் பிறந்தவர் குமாரசாமிப் பிள்ளை (1855 - 1922). 'இரகுவம்சம்', 'சாகுந்தலம்' ஆகிய நூல்களைச் சமஸ்கிருதத்திலிருந்து இவர் தமிழில் மொழிபெயர்த்துள்ளார். இவர் இயற்றிய 'தமிழ்ப் புலவர் சரிதம்' தனிச் சிறப்பு வாய்ந்தது. தமிழில் இலக்கியச் சொல்லகராதியை முதன்முதலில் உருவாக்கியவரும் இவரே.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த மானிப்பாய் என்னும் ஊரில் தோன்றிய ஆ. முத்துசாமிப் பிள்ளை (1858 - 1917) நான்காம் தமிழ்ச் சங்கத்தைத் தோற்றுவிக்கப் பாண்டித்துரைத் தேவருக்குத் துணை நின்றவர். 'வைத்திய விசாரணி' என்னும் மருத்துவ இதழை அக்காலத்தில் நடத்தியிருக்கிறார். தமிழ் மொழியில் முதன் முதலாகக் கலைக் களஞ்சியம் ஒன்றினை, 'அபிதான கோசம்' என்னும் பெயரில் இயற்றிய பெருமை இவருக்கு உரியது. அக் கலைக் களஞ்சியப் பணி நிறைவு பெறுவதற்குப் பதினாறு ஆண்டுகள் ஆயின என்பர்.

புத்தளத்தைச் சேர்ந்த கற்பிட்டியில் 1807ஆம் ஆண்டு தோன்றியவர் சைமன் காசிச் செட்டி. இவர் பன்மொழிப் புலவர். அரசுப் பணியிலிருந்தவாறே அருந்தமிழ்ப் பணியையும் ஆற்றியிருக்கிறார். தென்னிந்தியாவிலும், இலங்கையிலும் வாழ்ந்த தமிழ்ப் புலவர்களின் வரலாற்றினை முதன்முதலாகத் திரட்டித் தொகுத்து, 'Tamil Plutarch' *(தமிழ்ப் புலவர் வரலாறு)* என்னும் ஆங்கில நூலை 1859இல் வெளியிட்ட பெருமை இவருக்கே உரியது. இவ்வரிய பணியை முடித்த மறு ஆண்டே இவர் மறைந்தார்.

யாழ்ப்பாணம் சிறுபிட்டியில் பிறந்தவர் சி. வை. தாமோதரம் பிள்ளை (1832 - 1901). இவர் தமிழ்நாட்டில் புதுக்கோட்டை உயர்நீதிமன்ற நீதியரசராகப் பணியாற்றியவர்; இராவ் பகதூர் பட்டம் பெற்றவர்; தமிழ்ச் சுவடிகளைச் சேகரித்து அவற்றை அச்சிடும் பணியைத் தம் முதன்மைப் பணியாகக் கொண்டிருந்தவர். தமிழ்ச் சங்க இலக்கியக் கலித்தொகையை முதன்முதலில் பதிப்பித்த பெருமைக்குரியவர்.

'வீரசோழியம்', 'இறையனார் அகப்பொருள்', 'தொல்காப்பிய பொருளதிகாரம்', 'சொல்லதிகாரம்', 'இலக்கண விளக்கம்', 'சூளாமணி', 'தணிகைப் புராணம்' முதலிய நூல்களை முதன்முதலாகப் பதிப்பித்தவர். தமிழ்த் தாத்தா உ. வே. சா அவர்களுக்கு முன்னரே பதிப்புத் துறையில் ஈடுபட்டவர் இவர்.

வி. கனகசபைப் பிள்ளை (1855 - 1906) என்பார் யாழ்ப்பாணத்தைச் சார்ந்த மல்லாகம் என்னும் ஊரில் பிறந்தவர். சென்னை அஞ்சலகத்தில் மேற்பார்வையாளராய்ப் பணியாற்றிய இவர், தன் திறம்பட்ட ஆராய்ச்சியின் பயனாகத் தமிழ் உலகிற்கு எழுதி அளித்த, 'The Tamils Eighteen Hundred Years ago' என்னும் ஆங்கில நூல் மூலமாகத் தமிழ் மொழியின் தொன்மையையும், தமிழ் மக்களின் பண்பாட்டினையும் பிற மொழியாளர்களும், பிற நாட்டவரும் அறியச் செய்தார். தென்னிந்திய வரலாற்றுக்கு முதன்முதல் அடிப்படை அமைத்துத் தந்தவர் கனகசபைப் பிள்ளை அவர்களே. தமது அலுவல் காரணமாகச் சென்ற இடங்களிலெல்லாம் முயன்று தொகுத்து வைத்திருந்த 'பத்துப்பாட்டு', 'புறநானூறு', 'சிலப்பதிகாரம்' ஆகியவற்றின் ஏட்டுச் சுவடிகளை உ. வே. சா அவர்களிடம் பதிப்புக்குக் கொடுத்து உதவினார்.

மட்டக்களப்பினைச் சார்ந்த காரைத் தீவு என்னும் ஊரில் பிறந்தவர் விபுலானந்த அடிகளார் (1892 - 1947). இவர் தந்தையார் இவருக்கு இட்ட பெயர் மயில்வாகனன். இவர் இராமகிருஷ்ண மடத்துடன் தொடர்பு கொண்டவர்; அண்ணாமலைப் பல்கலைக்கழகம் தோன்றுவதற்குத் துணையாய் இருந்தவர்; ராஜா சர் அண்ணாமலைச் செட்டியாரின் விருப்பத்தினை ஏற்று அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் முதலாவது தமிழ்ப் பேராசிரியராக 1931இல் பதவியேற்று அங்கு மூன்றாண்டுகள்

பணி புரிந்தவர். இவர் பதினான்கு ஆண்டுகளாகச் செய்த ஆய்வின் பயனாகத் தமிழர்களின் தனித்த சிறப்புக்குரிய நரம்பிசைக் கருவியான யாழ் குறித்து எழுதிய 'யாழ் நூல்', *5.6.1947*இல் கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் சார்பில் வெளியிடப்பட்டது. இவர் நாடகக் கலையையும் ஆராய்ந்து முதன்முதலாக, 'மதங்க சூளாமணி' என்றொரு நூலையும் இயற்றியுள்ளார்.

உலகின் மூலைமுடுக்கெல்லாம் சென்று தமிழைப் பரப்பிய முதல் தமிழ்த் தூதராய் விளங்கியவர் ஈழத்துத் தனிநாயக அடிகள். இவருடைய பெருமுயற்சியால் உலகத் தமிழ் மாநாடுகள் நடந்தேறின.

அருங்கலைச் செல்வர், கலாயோகி, வித்தியா விநோதன் என்றெல்லாம் பாராட்டப் பெற்ற ஆனந்த குமாரசாமி *(1877 - 1947)* தமிழகத்தின் கலைச் செல்வங்களை உலகெங்கும் பரப்பிய பெருமைக்குரியவர்; சிற்பக் கலை, ஓவியக் கலை குறித்து விரிவாக ஆய்வு செய்தவர். நடராசர் வடிவத்தின் கலைச் சிறப்பினை விளக்கி இவர் எழுதியுள்ள 'Dance of Shiva' *(சிவ நடனம்)* என்னும் புகழ் பெற்ற நூல் இந்து மதத் தத்துவங்களைச் சிறப்புற விளக்குகிறது.

சுவாமி ஞானப்பிரகாசர் *(1875 - 1947)*, 72 மொழிகளைக் கற்ற பேரறிஞர். தமிழில் முதன்முதலாகத் 'தமிழ்ச் சொற்பிறப்பு ஒப்பியல்' என்னும் அரிய நூலை இவர் படைத்துள்ளார். இந்நூல் தமிழின வரலாற்றில் பொன் எழுத்துகளால் பொறிக்கப்பட வேண்டிய ஒப்பற்றது. இவ்வகராதியில் இலத்தீனம், கிரேக்கம், சுமேரியம், சமஸ்கிருதம் முதலான மொழிகளிலெல்லாம் பழந்தமிழ்ச் சொற்கள் புகுந்து உருமாறியிருப்பதை விரிவாக எடுத்துக் காட்டியுள்ளார். இவர் ஈராஸ் பாதிரியாருக்குச் சிந்துவெளி எழுத்துகள் தொடர்பாக ஏற்பட்ட ஐயங்களைப் போக்கி உதவியும் உள்ளார்.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த நல்லூரில் பிறந்த ஆறுமுக நாவலர் *(1822 - 1879)*, தமிழையும் சைவத்தையும் இரு கண்களாகப் போற்றி வளர்த்தவர். இவ்விரண்டையும் ஒருங்கே விளக்கும் நோக்கத்துடன் *1848*இல் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த வண்ணார் பண்ணையில், சைவப் பிரகாச வித்தியாசாலையைத் தோற்றுவித்தார். *1864*இல் சிதம்பரத்திலும் இப்பெயரில் ஒரு வித்தியாசாலையைத் தொடங்கி நடத்தினார். இவருடைய தமிழின் நிறை புலமையையும், சைவ சமய ஞானத்தையும் மதித்து திருவாவடுதுறை ஆதீனத் தலைவர் இவருக்கு, 'நாவலர்' என்னும் சிறப்புப் பட்டத்தினை வழங்கினார்.

நாவலர் அவர்கள், 'தமிழ் உரைநடையின் தந்தை' என்றும், 'வசன நடை கைவந்த வல்லாளர்' என்றும் போற்றப்படுகிறார். மேல்நாட்டினர் பின்பற்றிய

முற்றுப்புள்ளி, அரைப்புள்ளி, வினாக் குறி, வியப்புக் குறி முதலான குறியீடுகளை முதன்முதலில் தமிழ் மொழியில் எடுத்தாண்டவர் நாவலரே. நூல்களைப் பிழை யின்றிச் செம்மையுறப் பதிப்பிப்பதில் நாவலருக்கு நிகர் நாவலரே.

## வாழையடி வாழையென வந்த தமிழ்க் கூட்டம்

இவர்களைத் தொடர்ந்து இருபதாம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும் இன்றும் தமிழில் எல்லாத் துறைகளிலும், 'முதன்முதலாக' என்று சொல்லத்தக்க வகையில் ஈழத்தில் பலர் தோன்றித் தமிழும், தமிழ் இனமும் வளர அரும்பாடுபட்டு வருகின்றனர். மறைந்த பேராசிரியர் சிவத்தம்பியும், கலாநிதி கைலாசபதியும், கலாநிதி வித்தியானந்தனும் தமிழுக்குப் புதிய துறை என்று சொல்லப்படும் திறனாய்வுத் துறையில் சிறப்புப் பெற்றுள்ளனர்.

ஈழப் போரில் தமிழர்கள் பட்ட சொல்லொணாக் கொடுமைகளையும் வேதனைகளையும் உள்ளம் உருகவும், படிப்போரை ஈழப் போராளிகளாக மாற்றுகின்றனவுமாகிய ஆற்றல்மிகு கவிதைகளை எழுதுவதில் உணர்ச்சிக் கவிஞர் காசி ஆனந்தன் முன் வரிசையில் நிற்கிறார். இவரைத் தொடர்ந்து வசீகரன், வ. ஐ. ச. ஜெயபாலன், புதுவை இரத்தினதுரை, இன்பா சுப்பிரமணியன், குண. ஜெயசீலன், கொற்றவை, தேன்மொழிதாஸ் போன்ற எண்ணற்ற கவிஞர்களும் படைப்பாளர்களும் தோன்றியுள்ளனர்.

இலக்கிய வளர்ச்சியில் அக்கறை கொண்டு வள்ளுவரையும், கம்பரையும், இளங்கோவையும் மற்றும் பெரும் புலவர்களையும் போற்றி, மேடைத் தமிழ் வளர்க்கும் இலங்கை ஜெயராஜ் போன்றவர்களும் இருக்கின்றனர்.

## கவிநாயகர் வி. கந்தவனம்

இவ்வரிசையில் ஒருவராய்த் தமிழ் ஈழ சாவகச்சேரி, நுணாவில்லில் பிறந்த கவிநாயகர் வி. கந்தவனம் திகழ்ந்து வருகிறார். இவர் உள்ளம் ஈர்க்கும் உரைநடையாளர்; கவின்மிகு கவிதையாளர்; நயம் தோய்ந்த நாடகாசிரியர்; கவியரங்குகளில் பெரும் புகழ் பெற்று, 'கவியரங்குக்கோர் கந்தவனம்' என்ற பட்டம் பெற்றவர்; கால வளர்ச்சிக்கேற்பத் திட்டங்களைத் தீட்டும் கல்வியாளர்; தமிழின் பத்து அழகும் பொருந்தியிருக்கப் படைக்கும் படைப்பாளர். இவர் எழுதியுள்ள, 'காதல் வாழ்க்கை' என்னும் இந்நூலில் உள்ள கட்டுரைகள் கந்தவனம் அவர்களின் சங்க இலக்கிய நிறை புலமையையும், சைவ சமயத்தில் அவர் கொண்டுள்ள ஆழ்ந்த பற்றினையும் வெளிப்படுத்துகின்றன.

பண்டைத் தமிழர்களின் காதல் வாழ்க்கையின் சிறப்பைக் கூறி, இடைக் காலத்தில் திருமணங்கள் நடைபெற்ற முறையை எடுத்துரைத்து, இக்காலத் திருமணங்களில் வாழ்த்துரை வழங்குவதற்கேற்ற சில பொதுப் பாடல்களோடு இவருடைய நூல் முடிவடைந்துள்ளது.

## சங்க காலக் காதல்

‘காதல் வாழ்க்கை’ என்னும் இந்நூல் தமிழ்ச் சங்க கால ஐந்திணைக் காதல் ஒழுக்கத்தின் சிறப்பை எடுத்துரைக்கிறது. சங்க இலக்கியங்களில் காதலன் தலைவன் என்றும், காதலி தலைவி என்றும் குறிக்கப் பெறுவர். சங்க காலத் தலைவன், தலைவி வாழ்க்கை, களவு, கற்பு என்னும் இரு நிலைகளைக் கொண்டிருந்தது. பிறர் அறியாது தலைவனும் தலைவியும் கூடி மகிழ்வது களவு; பலர் அறிய மணம் செய்து கொண்டு வாழ்வது கற்பு. உருவம், பருவம், அழகு முதலியன ஒத்த ஒருவனும், ஒருத்தியும் தனியே ஓரிடத்தில் காண்கின்றனர். காதலின் முதற்படியே பார்வைதான். தலைவன் தலைவியைப் பார்க்கிறான். அவளது நோக்கில் நோயும் இருக்கிறது; நோய்க்கு மருந்தும் இருக்கிறது. கண்கள் ஒரு கணம் சந்தித்தன; ஓராயிரம் எண்ணங்களைப் பரிமாறிக் கொண்டன. இருவர் கண்களும் ஒன்றையொன்று நோக்கிக் கொண் டிருக்கும் போதே அவர்களின் இதயங்கள் இடம் மாறிக் கொண்டன. இந்நூலில் ‘இரு நோக்கு’ என்னும் 4ஆவது கட்டுரை தலைவன் தலைவி காதல் வாய்ப்பட்டதை விளக்குகிறது.

இருவரும், குறிப்பாகத் தத்தம் காதலை வெளிப்படுத்தி கூடுகின்றனர். பெரும்பாலும் பிறருக்குத் தெரியாமல் இவர்கள் கூட்டம் நடைபெற்று வரும். இக் களவுக் கூட்டம் பல பிரிவுகளைக் கொண்டது.

தலைவி தன் கருத்தைத் தன் தோழியிடமும், தலைவன் தன் பாங்கனிடமும் வெளிப்படுத்துவர். தோழியின் உடன்பாடு பெற்ற தலைவன், தோழியும் தலைவியும் காட்டும் வழியே சென்று குறிப்பிட்ட ஓரிடத்தில் தலைவியைக் கூடுவது ‘குறியிடம்’ எனப்படும். பகலில் சென்று கூடுமிடம் ‘பகற்குறி’ என்றும், இரவில் கூடுமிடம் ‘இரவுக்குறி’ என்றும் பெயர் பெறும். இரவுக்குறியில் தலைவனுக்கு வழியிடை ஏற்படும் ஏதங்களைக் கூறி, அதனால் தலைவி அடையும் துன்பத்தையும் எடுத்துரைத்து, தலைவனை இரவில் வரவேண்டாம் என்று தோழி கூறுவதுண்டு. இதனை இந்நூலில், ‘இரவில் வரவேண்டாம்’ என்ற கட்டுரை (22) அகநானூற்றுப் பாடல் ஒன்று கொண்டு விளக்கியிருக்கிறது.

இரவுக்குறியில் கூடுவது அருமையாகலான், தலைவியை மணந்து வாழ்க்கை நடத்தும்படி தலைவனைத் தோழி வேண்டுவாள். இது ‘வரைவு கடாதல்’ எனப்படும்.

(வரைவு - மணம்; கடாதல் - வினாவுதல்). தலைவனிடம் தோழி, 'என் தலைவியின் நலத்தை நுகர்ந்து அவளைத் துறத்தல் என்பது, இனிய பாலை அருந்திவிட்டு அப் பால் இருந்த பாத்திரத்தைக் கவிழ்த்து விடுதல் போன்றது. உன் பிரிவால் வருந்தும் தலைவியின் துயரைப் போக்க நீ மணம் செய்வதே மருந்து' என்று வற்புறுத்திச் சொல்வதைக் கலித்தொகைப் பாடல் ஒன்றன்வழி நூலாசிரியர் கட்டுரை 23இல் விளக்கியிருப்பதைக் காணலாம்.

இரவிலும் பகலிலும் தலைவியைக் காண்பதற்குத் தலைவன் எடுத்த முயற்சிகள் யாவும் பயனற்றுப் போயின. தோழி மூலமாகத் தலைவியைக் காணலாமென்றால் அவளையும் காண முடியவில்லை. வேறு வழியின்றி ஒரு நாள் பகலில் நேராகக் காதலியின் வீட்டுக்கே சென்று விட்டான். அன்னையும் மகளும் வீட்டில் இருக்கிறபோது தாகத்திற்குத் தண்ணீர் கேட்கிறான். அப்போது அங்கு நடைபெற்றதை, 'கள்வன் மகன்' என்ற கட்டுரையில் (5), குறிஞ்சிக் கலி பாடல் 15 கொண்டு ஓர் ஓரங்க நாடகத்தையே கந்தவனம் தீட்டிக் காட்டியுள்ளார்.

## திருமணம்

தலைவன் தலைவியின் களவொழுக்கம் முதலில் ஊரில் சிலர், பலருக்குத் தெரிந்து, பின்னர் ஊர் முழுவதும் தெரியவே, 'பழிச்சொல்' (அலர்) எழும். இச் சொற்களைக் கேட்கும் பெற்றோர், மகளை வீட்டை விட்டு வெளிச் செல்லாமல் காவல் செய்வர். இஃது, 'இற்செறித்தல்' எனப்படும். இற்செறிப்பால் தலைவனைக் காணப் பெறாத தலைவியின் குணமும் உடல் நிலையும் வேறுபடும். இதனைக் கண்ட பெற்றோர், இது தெய்வக் கோளாறோ என்று கருதி, பூசாரியை (வேலனை) அழைத்துப் பூசை செய்ய முற்படுவர். வேலன் செய்யும் பூசையை 'வெறியாட்டு' என்பர். வெறியாட்டுக்குப் பெற்றோர் ஏற்பாடு செய்வதைக் காணும் தோழி, தலைவன் ஒருவனிடம் தலைவி காதல் கொண்டிருப்பதைத் தாயிடம் (செவிலித் தாய்) கூறுவாள். இஃது 'அறத்தொடு நிற்றல்' என்று கூறப்படும். செவிலி அச்செய்தியைத் தலைவியைப் பெற்றெடுத்த நற்றாய்க்கு அறத்தொடு நின்று கூற, நற்றாய் தலைவியின் தந்தை, தமையன்மாருக்கு அறத்தொடு நிற்பாள். பெற்றோர் மகளின் காதலை அறிந்து, அவள் விரும்பும் காதலனுக்கு அவளை மணம் செய்விப்பர்.

மகளைத் திருமணம் முடித்துத் தருவதாகப் பெற்றோர் கூறிய பின்னும் தலைவன் சுற்றத்தோடு மணம் பேச வராதது கண்டு தலைவி வருந்துகிறாள். அப்போது தோழி, 'தலைவியே வருந்தாதே! அதோ பார்! தலைவன் மணம் பேச வருகிறான்' என்று தேற்றுகிறாள். இச் செய்தியை 'மணக்க வருகிறான் தலைவன்' என்னும் 24ஆவது கட்டுரையில் காணலாம்.

தலைவியைத் தான் விரும்பும் காதலனுக்கே மண முடிக்கப் பெற்றோர் முடிவு செய்துள்ளனர் என்று சொல்லியும், தோழி, தலைவியைத் தேற்றுவாள் என்பதைப் ‘புணர்ச்சி இன்பம்’ எனும் 21ஆவது கட்டுரையில் காணலாம்.

திருமணமே இல்லறத்தின் முதற்படி என்பதை இந்நூலில் உள்ள ‘திருமணம்’ என்ற முதற்கட்டுரை விளக்குகிறது. திருமணம் அன்பு சார்ந்ததாக இருக்க வேண்டும். அன்பின் அடிப்படையில் வளர்வது, பண்பு. அதன்படி வாழ்ந்து காட்டி, தமிழர் பெருமையைப் பல்லோர் நடுவிலும் நிலை நிறுத்த வேண்டும் என்னும் கருத்துகளை, ‘அன்புடைமை’ என்னும் இரண்டாம் கட்டுரையும், ‘பண்புடைமை’ என்னும் மூன்றாம் கட்டுரையும் நம் நெஞ்சுள் நிறைக்கின்றன.

திருமணத்திற்குப் பின் உள்ள வாழ்க்கை கற்பு நெறி என்று சொல்லப்படுகிறது. சங்க இலக்கியங்களில் திருமணங்கள் நடைபெற்ற முறையை அகநானூறு 86, 136 என்ற இரண்டு பாடல்கள் மட்டுமே விளக்குகின்றன. கந்தவனம் அவர்கள் அகநானூறு 86ஆவது பாடலை எடுத்துத் திருமண நிகழ்ச்சிகளை விவரித்திருக்கிறார்.

புதல்வரைப் பெற்ற மகளிர் நால்வர் பூவிதழ்களையும், நெல்லினையும் நீரோடு கலந்து தலைவியின் கூந்தலிற் சொரிந்து, மங்கல நீராட்டி, அவள் கையைத் தலைவன் கையோடு இணைத்துத் திருமணத்தை முடித்து வைப்பர். உற்றார் உறவினர் வாழ்த்துவர். பின்னர் விருந்து நடைபெறும். இவையே சங்க காலத் திருமணச் சடங்குகளாகக் கூறப்பட்டுள்ளன.

திருமணத்துக்கு நல்ல நாள் பார்த்தல், பந்தர் அமைத்தல், சோடித்தல், விருந்தளித்தல் முதலியனவும் மணப்பெண்ணுக்கு மங்கல நீராட்டல், புத்தாடை உடுத்தல், வாழ்த்துக் கூறுதல் போன்ற நிகழ்வுகளும், அவற்றின்பின் அவளைத் தமர் மணமகனுக்கு அளித்தலும், அதனைத் தொடர்ந்து தனியான வீட்டில் முதலிரவு நடைபெறுதலும் இப்பாடலில் கூறப்பட்டுள்ளன என்பதை ‘முதலிரவு’ என்ற கட்டுரையில் (25) கந்தவனம் விளக்கியிருக்கிறார். சங்க இலக்கியங்களில் முதலிரவு பற்றிக் கூறியுள்ள இடம் இஃது ஒன்று மட்டுமே!

காலம் செல்லச் செல்லத் திருமணச் சடங்குகளில் பார்ப்பனர் இடம் பெற்றனர். இதனை,

மாமுது பார்ப்பான் மறைவழி காட்டிட
தீவலம் செய்து

கோவலன் கண்ணகி திருமணம் நடைபெற்றதைப் ‘பூம்புகார்த் திருமணம்’ என்ற

கட்டுரையிலும் (9), மணமக்கள் தீ வலம் வந்து, அம்மி மிதித்து, அருந்ததி காணும் காட்சியுடன் திருமணச் சடங்கு நிறைவேறுவதை, 'சீதா கல்யாணம்' எனும் கட்டுரையிலும் (8) கந்தவனம் சுட்டிக்காட்டுகிறார்.

'கற்பு வாழ்க்கை' என்னும் கட்டுரையில் (11) மனைவியின் கற்பின் திண்மையை, கண்ணகி வாழ்வு கொண்டும், மணம் புரிந்து கொண்ட காதலர்களுடைய இன்ப வாழ்க்கையைக் கோவலன், கண்ணகியை நெடுநிலை மாடத்து இடைநிலத்திருந்து, 'மாசறு பொன்னே' எனப் பாராட்டிக் கூறும் பத்தாவது கட்டுரையிலும் விளக்குகிறார்.

## உடன்போக்கு

ஒரு பெண்ணின் பெற்றோர் ஏதாவது ஒரு காரணத்தினால் தலைவியின் காதற் கூட்டத்தைத் தடுத்தாலோ அல்லது அவளை அவள் காதலனுக்கு மணம் செய்து கொடுக்க மறுத்தாலோ தலைவன், தலைவியை ஒருவரும் அறியாமல் தன் ஊருக்கு அழைத்துச் சென்று தன் வீட்டில் மணம் செய்து கொள்வதும் உண்டு. இதனை, 'உடன்போக்கு' என்னும் இந்நூலின் 6ஆவது கட்டுரை தெளிவாக்குகிறது.

உடன்போக்கில் செல்லும் தலைவி, காட்டு வழிகளில் நடந்தறியாதவள். இப்போது தலைவனுடன் காட்டு வழியாகச் செல்ல வேண்டியுள்ளது. காதலிக்குக் கால்நடை வருத்தம் தெரியாதிருக்க, காட்டின் அழகைக் காட்டி அவளுக்குத் தென்பூட்டித் தலைவன் அழைத்துச் செல்வதை, 'வனத்தின் வனப்பு' என்னும் இருபதாம் கட்டுரையில் காணலாம்.

முதலில் திருமணத்திற்குப் பெற்றோர் மறுத்தாலும், தலைவி உடன்போக்கிற் சென்றபின், தாய், மகள் பிரிவுக்கு வருந்துகிறாள். மகள் செல்லுகின்ற வழியெல்லாம் மழை பெய்யாது காய்ந்திருந்த காடு, குளிர்மையாக விளங்க வேண்டும் என்று தன்னுள் வேண்டிக் கொள்கிறாள். 'உடன்போக்கும் அறநெறிப்பட்டதே எனத் தெரிந்த நான் அவள் விரும்பியவாறு திருமணம் செய்து வைக்காமற் போனேனே' என்றும் வருந்துகிறாள்.

## இனிய இல்லறம்

திருமணம் முடிவுற்றதும், தலைவி, தலைவன் என்ற பெயர்கள் மனைவி, கணவன் என்றாகின்றன. இல்லறத்தின் முதற்கடமையாக, மனைவி சமைத்து, கணவனுக்கு உணவு படைக்கும் அருமைப்பாட்டினை 'முளி தயிர் பிசைந்த' என்று தொடங்கும் குறுந்தொகைப் பாடல் ஒன்று கொண்டு 'கணவனைப் பேணும் மனைவி' என்னும் கட்டுரையில் (12) கந்தவனம் ஒரு சொல்லோவியத்தை வரைந்து

காட்டியுள்ளார்.

செல்வக் குடியில் பிறந்தவள் ஒரு தலைவி. கணவன் வீடு சென்றாள். அக்கணவன் வீடு வறுமையுற்றதாயினும், கணவனோடு வறுமையில் பங்கு கொண்டு அவள் வாழ்வாளே தவிர, தந்தை பெருஞ்செல்வம் தர முன்வந்தாலும், அதை ஏற்றுக் கொள்ளாத பெருமிதமுடையவளாயிருப்பாள் என்பதை,

கொண்ட கொழுநன் குடிவறன் உற்றெனக்
கொடுத்த தந்தை கொழுஞ்சோறு உள்ளாள்

என்ற நற்றிணைப் பாடலடிகள் கொண்டு, 'வறுமை வரினும் வற்றாது அன்பு' என்ற கட்டுரை *(15)* விளக்குகிறது.

இல்லற வாழ்க்கையில் விருந்தோம்பல் முக்கியமான ஒன்று. 'விருந்து புறந்தருதல்' என விருந்தோம்புவதை ஒரு தனி அதிகாரமாகவே வள்ளுவர் படைத்திருக்கிறார். 'விருந்து புறந்தரூஉம் பெருந்தண் வாழ்க்கை' எனும் சிலப்பதிகாரப் பாடலடியும், கணவனைப் பிரிந்திருந்த சீதை, இராமன், 'விருந்து கண்டபோது என்னுறுமோ?' என்று நினைந்து விம்முவதாகக் கூறும் கம்பராமாயணப் பாடலடியும் விருந்தின் பெருமையை அறியச் செய்கின்றன. வள்ளல் அதியன், தன் விருந்தாளியாக வந்த ஔவையாருக்கு உயிர் காக்கும் அரிய நெல்லிக் கனியைத் தந்ததும், ஔவை அவனை,

நீல மணிமிடற்று ஒருவன் போல
மன்னுக பெரும நீயே

என வாழ்த்தியதும், 'விருந்தோம்பல்' என்னும் கட்டுரையில் *(14)* சிறப்புறக் கூறப்பட்டுள்ளது.

தலைவி நெய்யை மிகுதியாக விட்டுத் தாளித்து இறைச்சிக் கறி சமைத்தாள். அச் செயல் அவளது நெற்றியில் நுண்ணிய வியர்வைத் துளிகளைத் தோற்றுவித்தது. அத்துளிகளோடு குறுகிக் குறுகி நடந்து அவள் விருந்தோம்பிய சிறப்பைக் கண்டு இன்புற்றான் தலைவன். இச்செய்தியை நற்றிணையில் உள்ள 41ஆம் பாடல் தெரிவிக்கின்றது என்பதை இந்நூலின் பதினான்காம் கட்டுரையான, 'விருந்தோம்பல்' தெரிவிக்கிறது.

நல்ல மக்களைப் பெறுவதே இல்வாழ்க்கைக்கு அணிகலன். மக்களைப் பார்த்தல் கண்களுக்கு விருந்து, அவர்களின் மெய் தீண்டல் உடற்கு இன்பம், சொற் கேட்டல் செவிக்கு இன்பம் என்கிறது திருக்குறள்.

*மயக்குறு மக்களை இல்லார்க்குப்*
*பயக்குறை இல்லைத் தாம்வாழு நாளே* *(புறம் 188)*

எனப் பாண்டியன் அறிவுடை நம்பி குழந்தைப் பேறே செல்வங்கள் எல்லா வற்றுள்ளும் பெருஞ் செல்வம் என்பான்.

குழந்தை இன்பத்தில் கணவனும், மனைவியும் திளைத்த சம்பவங்கள் பலவற்றைச் சங்க இலக்கியங்களில் படித்து இன்புறலாம் எனச் சொல்லும் ஆசிரியர் இக்காலத் தாய் பெறும் இன்பமாக ஒரு பாடலையும் இயற்றித் தந்துள்ளார். 'மயக்குறு மக்கள்' என்ற 18ஆவது கட்டுரையில் இவற்றைக் காணலாம்.

தந்தை தயிர்ச்சோறு உண்டு கொண்டிருக்கிறான். அப்போது மையை மணலில் ஊற்றிப் பிசைந்த சேறுபடிந்த கையோடு ஓடி வந்த குழந்தை, தந்தை உண்ணும் தயிரின் சோற்றை அள்ளினான். அப்பனை வாய் திறக்குமாறு சொல்லி அச்சோற்றை அவனுக்கு ஊட்டினான். அப்பனும் அதனை வாய் திறந்து உண்டான். இக் காட்சியைக் கூறும்,

*சேறும் சோறும் தந்தைக்குத் தேனே*
*நீலத் தயிரும் நிலாநிறத் தயிரே*
*'அமிழ்தினும் ஆற்ற இனிதேதம் மக்கள்*
*சிறுகை அளாவிய கூழ்' எனச் செப்பிய*
*வள்ளுவர் வாய்ச்சொல் பொய்யென*
*விள்ளுவர் உளரோ விரிநீர் உலகிலே!*

எனும் பாரதிதாசனின் பாடலடிகளையும் இங்கே எண்ணிப் பார்க்கலாம்.

## பிரிவு

விருந்தோம்புவதற்கும், பிற இல்லறக் கடமைகளைச் செய்வதற்கும் பொருள் இன்றியமையாதது. தந்தை மலையளவு செல்வம் உடையவனாயினும், மகன் அதனைப் பயன்படுத்தாது, தானே ஈட்டிய பொருளைக் கொண்டே இல்லறம் நடத்துவான். பொருளைத் தேடி வரத் தலைவன் சில காலம் தலைவியைப் பிரிந்திருக்க வேண்டும். தலைவன், 'தலைவியைப் பிரிந்து திரட்டும் பொருளோ, பொய்கையிலே ஓடுகின்ற மீன் செல்லும் வழியைப் போல இருந்த இடம் தெரியாமல் அழிந்து போகும். ஆகவே, உலகையே அளக்கும் மரக்காலாகக் கொண்டு, ஏழு மரக்கால் வரையில் அளக்கத்தக்க பெரும் செல்வத்தைப் பெறுவேனாயினும் அதை நான் விரும்பேன்' (நற்றிணை 16) எனச் சொல்லிப் பொருள் ஈட்டிவரச் செல்லும்

பயணத்தைத் தவிர்ப்பான். இதனை, 'மனைவியைப் பிரியாத கணவன்' என்னும் 13ஆவது கட்டுரையில் காணலாம்.

எனினும், இல்லறம் நடத்துதற்குப் பொருளின் இன்றியமையாமை கருதி, தலைவியைப் பிரிந்து சென்று பொருள் ஈட்டி வருவான். பொருள் ஈட்டி வருவது கணவனின் கடமை. அதனைத் தக்கவாறு செலவிட்டுக் குடும்பத்தை நடத்திச் செல்லும் பொறுப்பு மனைவியுடையது. இக்கருத்தை, குமணனிடம் பரிசிலாகப் பெற்று வந்த பெருஞ்செல்வத்தைப் புலவர் பெருஞ்சித்திரனார் தன் மனைவியிடம் கொடுத்து அதனைச் செலவிட வேண்டிய பொறுப்பை அவளிடம் ஒப்புவித்தது கொண்டு 'சுற்றம் ஓம்பிய கற்றவர் குடும்பம்' என்னும் பதினாறாம் கட்டுரையில், சங்க காலத்தில், இல்லறம் சார்ந்த விடயங்களில் மனைவிக்கு முழுச் சுதந்திரம் இருந்தது என்ற கருத்தைக் கந்தவனம் உறுதிப்படுத்துகிறார்.

## அன்றும் இன்றும்

சங்க காலக் காதல் இன்று நாம், 'காதல் திருமணம்' என்று சொல்வதைத்தான் சொல்கிறது. சில வேண்டாத மாற்றங்கள் நிகழ்வதால் இன்று இது ஏற்கப்படாமல் மறுக்கப்படுகிறது. இன்று காதல் என்பது வெறும் தோற்றக் கவர்ச்சியால் நடைபெறுகிறது. காதலன், காதலி இருவரும் ஒருவர் குணத்தை ஒருவர் அறிந்த பின்னரே திருமணம் என்பதில்லாமல், 'கண்டதும் காதல்' என்ற முறையில் திருமணம் நடைபெற்று விடுகிறது. திருமணம் நடந்த வேகத்திலேயே மணவிலக்கும் நடைபெற்று வருவதைக் காண்கிறோம். மற்றொன்று, காதலர்களாய்ப் பழகியவர்கள் அக் காதலைக் கைவிட்டு வேறு திருமணம் செய்து கொள்ளுதலும் பெருமளவில் நடந்து விடுகின்றது. சங்க இலக்கியக் காதலில் களவு என்பது கற்பில், அதாவது திருமணத்தில் முடிய வேண்டும். இல்லையேல் அது காதலாக மதிக்கப்படாது. மதிக்கப்படாதது மட்டுமின்றி இழிவானதாகவும் கருதப்படும். மேலே குறிப்பிட்ட வேண்டாத் தன்மைகள் இல்லா வகையில் இன்று காதலர்களின் திருமணம் நிறைவேறுமானால் அதனைச் சங்க இலக்கியக் காதல் என்றே சொல்லிவிடலாம்.

## சில எண்ணத் துளிகள்

தலைவனுடைய அன்பைத் தலைவியிடம் எடுத்துரைத்து, அவனுக்குத் தலைவி இயையுமாறு தோழி தூது செல்வதுபோல் நளவெண்பாவில் நளன் இயல்பைத் தமயந்தியிடம் அன்னம் தூதாகச் சென்று கூறுவதை, 'அன்னப் பறவை வளர்த்த அற்புதக் காதல்' என்ற கட்டுரையில் (19) கண்டு மகிழலாம்.

மக்களிடத்து மட்டுமன்று, விலங்குகள், செடிகொடிகளிடமும் செலுத்தப்படும்

அன்பே எல்லாவற்றிற்கும் அடிப்படை என 'அன்புடைமை' (2) என்ற கட்டுரையில் விளக்கியுள்ள ஆசிரியர், அந்த அன்பின் முதிர்ச்சியாகிய ஈகைத் தன்மையாலேயே வள்ளல் பாரி, முல்லைக் கொடிக்குத் தேர் ஈந்ததையும், வள்ளல் பேகன், மயிலுக்குப் போர்வை போர்த்தியதையும், 'இயற்கையைப் பேணிய இதயங்கள்' எனும் 17ஆவது கட்டுரையில் சொல்கிறார்.

## திருத்தொண்டர் புராண ஈடுபாடு

'மனைவியை வணங்கிய கணவன்' என்ற கட்டுரையில் (26), இயற்பகை நாயனார் பற்றியும், 'கணவனைத் தண்டித்த கற்பரசி' என்ற கட்டுரையில் (27), திருநீலகண்ட நாயனார் வாழ்வையும், 'வருந்தியும் விருந்தோம்பும் வாழ்வு' என்ற கட்டுரையில் (28), இளையான்குடி மாற நாயனார் வரலாற்றையும், 'காரைக்கால் அம்மையாரின் காதல் வாழ்க்கை' என்ற கட்டுரையில் (29), காரைக்கால் அம்மையார் இறைவனிடத்தில் கொண்டிருந்த அன்பையும் கந்தவனம் விரிவாக வரைந்துள்ளார். இந்த நான்கு கட்டுரைகளும் திருத்தொண்டர் புராணத்தில் கந்தவனம் கொண்டுள்ள ஈடுபாட்டினை எடுத்துக் காட்டுகின்றன.

## திருமண வாழ்த்து

எவ்விடத்திலும் எவ்வகைத் திருமணத்திலும் வாழ்த்துக் கூறுவதற்கு ஏற்றவாறு பொதுவான வகையில் அகவல், வெண்பா, விருத்தம் ஆகிய யாப்புகளில் அருமையான வாழ்த்துப் பாடல்கள் சிலவற்றை வரைந்து கந்தவனம் இந்நூலை முடித்துள்ளார் (30).

அன்பால் மணஞ்செய்தார் ஆதரவால் இல்லறத்தில்
இன்பால் இனிவாழ்க வே

ஆல்போல் தழைத்தும் அறுகுபோல் ஊன்றியும்
வாழ்க என்றும் வாழ்க நன்றே

என்பன போன்ற கருத்துகள் நிறைந்த வாழ்த்துகளாக அவருடைய வாழ்த்துப் பாடல்கள் அமைந்துள்ளன.

தமிழகத்தில் கொங்கு வேளாளர் சமுதாயத் திருமணத்தில் மங்கல நாண் சூட்டியதும், நீண்ட மங்கல வாழ்த்துப் பாடல் ஒன்று இசையுடன் இசைக்கப்படும். அப்பாடல்,

ஆல்போல் தழைதழைத்து அறுகுபோல் வேரூன்றி
மூங்கில்போல் கிளைகிளைத்து முசியாமல் வாழியவே

என்று முடியும். கந்தவனம் அவர்களுடைய திருமண வாழ்த்துப் பாடல்களோடு இதனையும் இணைத்து எண்ணிப் பார்க்கலாம்.

## வாழ்க வளர்க

பல்வேறு இலக்கியங்களை, குறிப்பாகச் சங்க, இடைக்கால இலக்கியங்களில் வாழ்வியல் கூறுகள் எவ்வாறு அமைந்துள்ளன என்பதை இந்நூலில் கந்தவனம் எழுதியுள்ள முறை நம் உள்ளம் கவர்வதாய் உள்ளது. அவருடைய இலக்கியப் பணி மென்மேலும் வளர வேண்டுமென்பதோடு புலம் பெயர்ந்து வாழ்ந்து வரும் தமிழ்க்குடிமகன் கந்தவனம் விடுதலை பெற்ற தன் சொந்த நாட்டில் விரைவில் குடியேறிச் செழிக்க வேண்டுமென்றும் வாழ்த்துகிறேன்.

அன்புடன்,

[signature]

# முன்னுரை

பழந்தமிழ் மக்களின் காதல் வாழ்க்கை முறைகளை அகப்பொருள் நூல்களாகிய அகநானூறு, நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, கலித்தொகை போன்ற தொகை நூல்கள் விரிவாகக் கூறுகின்றன. அவ்விதம் கூறுகையில் அவை சில விதி முறைகளைப் பின்பற்றுகின்றன. அவ்விதிமுறைகளுக்கு ஆதாரமாக, அவற்றுக்கு முற்பட்ட ஒல்காப் பெரும்புகழ்த் தொல்காப்பியரின் நூல் விளங்குகின்றது.

## எழுவகை இன்ப ஒழுக்கம்

தொல்காப்பியத்தின் பொருளதிகாரம் பண்டைத் தமிழ் மக்களின் இன்ப ஒழுக்கத்தின் இயல்பை,

கைக்கிளை முதலாப் பெருந்திணை இறுவாய்
முற்படக் கிளந்த எழுதிணை என்ப (1)

என ஏழாக வகுத்துக் கூறுகின்றது.

## ஐந்திணை

பருவமுற்ற ஆணும் பெண்ணும் ஒருவர்மீது ஒருவர் அன்புடையராகி மனமொத்துக் கூடுவது அன்புடைக் காமம் எனப்பட்டது. அன்புடைக் காமத்தினை முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல், பாலை என்று ஐந்து திணையாகத் தொல்காப்பியர் வகுப்பர். ஐந்திணை நெறி என்றும் இது பேசப்படும். திணை என்பது ஒழுக்கம். ஐந்து நிலங்களும் அவற்றுக்குச் சிறப்பாகக் கொள்ளப்பெற்ற ஒழுக்கங்களும் பின்வருமாறு:

| | |
|---|---|
| முல்லை (காடும் காடுசார்ந்த பகுதியும்) | இருத்தல் |
| குறிஞ்சி (மலையும் மலைசார்ந்த பகுதியும்) | கூடல் |
| மருதம் (வயலும் வயல்சார்ந்த பகுதியும்) | ஊடல் |
| நெய்தல் (கடலும் கடல்சார்ந்த பகுதியும்) | இரங்கல் |
| பாலை (நல்லியல்பு இழந்த பகுதி) | பிரிதல் |

முல்லையில் தலைவியை விட்டுத் தலைவன் பொருள் ஈட்டுதற் பொருட்டு அடிக்கடி பிரிந்து செல்வதால், தலைவன் வரவை எதிர்பார்த்து தலைவி இருத்தல் பொதுவான அனுபவம்.

குறிஞ்சியின் நில அமைப்புப் போக்குவரத்துக்கு வசதியாக இருக்கவில்லை. எனினும் அது உணவுப் பஞ்சம் இல்லாத வளங்களைக் கொண்டிருந்தது. எனவே தலைவனும் தலைவியும் பெரிதும் ஒன்றாக இருப்பது இயல்பாயிற்று. அதனால் கூடல் குறிஞ்சியின் பிரதான ஒழுக்கமென ஆன்றோர் கருதினர்.

மருதமும் வளம் மிகுந்த நிலப் பிரிவேயாகும். பிறவூர் சென்று பொருளைத் தேடும் தேவை அதிகம் இல்லாத பகுதி. வயல் வேலைகள் இல்லாத பருவத்தில் பொழுதைப் போக்கத் தலைவன் பரத்தைபால் செல்லும் வழக்கமும் இருந்தது. அதனால் தலைவனுக்கும் தலைவிக்கும் இடையில் ஏற்படும் தகராறு மருதநிலத்துக்கு ஏற்ற அகவொழுக்கமாகக் கொள்ளப்பட்டது. இந்தத் தகராறு அல்லது பூசல், ஊடல் என அழைக்கப்பட்டது.

நெய்தல் கடலும் கடல் சார்ந்த நிலமுமாதலால் கடற்றொழில் வாழ்க்கையின் உயிர்நாடியாக இருந்தது. அதனால் தலைவன் கடல்மேல் செல்லுதல் பெருவழக்கு. அவனின் பிரிவை ஆற்றாது தலைவி இரங்குதல் நெய்தலின் ஒழுக்கமாயிற்று.

பாலை பொருள்வளம் குறைந்த பகுதி. தலைவன் தொழில் நிமித்தம்(பொருள் ஈட்டும் பொருட்டு) வேறு ஊர்களுக்குச் செல்வது வழக்கம். தலைவன், தலைவியை விட்டு நெடுநாட்கள் பிரிந்திருக்கும் சூழ்நிலையில், பிரிதல் பாலைநிலத்துக்குரிய முதன்மை ஒழுக்கமாகக் கொள்ளப்பட்டது.

இவ்விதம் காதல் ஒழுக்கங்கள் நிலத்துக்கு நிலம் வகுக்கப்பட்டதால், ஒரு நிலத்துக்குரிய ஒழுக்கம் மற்றைய நிலத்தில் இல்லை என்பது கருத்தன்று. உலகியலில் எல்லா ஒழுக்கங்களும் எல்லா நிலங்களிலும் நடைபெறுவது இயல்பு. ஆயினும் அவ்வந் நிலத்திற் காணப்பெற்ற பெருவழக்கையே அவற்றுக்குரிய சிறப்பான ஒழுக்கங்களாக இலக்கியகாரர் (புலவர்) தெரிவு செய்தனர். இலக்கியத்தில் இவ்வொழுக்கங்கள் உரிப்பொருள் என்று பேசப்படும்.

## கைக்கிளையும் பெருந்திணையும்

இந்த ஐவகை ஒழுக்கங்களுக்குள் அடங்காத இன்ப நிகழ்வுகள் கைக்கிளை, பெருந்திணை என்று வேறாக வகைப்படுத்தப்பட்டன.

கைக்கிகளை என்பது ஒருதலைக் காமம். ஒத்த அன்பில்லாத பெண்ணை ஓர்

ஆண் காதலிப்பதும், ஒத்த அன்பில்லாத ஆண்மகனை பெண் ஒருத்தி விரும்புவதும் முற்றிலும் அன்பில்லாத இருவர் கூடலை விரும்புவதும் கைக்கிளையின்பாற் படும்.

பெருந்திணை என்பது ஒவ்வாக் கூட்டம். ஒருவரை ஒருவர் விரும்பியவிடத்தும் ஒன்றுசேர முடியாக் காதல், செவ்விய பருவமில்லாதார் கூடிவாழும் வாழ்க்கை முதலியன இதனுள் அடங்கும்.

ஒன்றுசேர முடியாத நிலைமை, பெற்றோர் அனுமதியின்மை, குடும்ப ஏற்றத்தாழ்வு முதலியவை காரணமாக ஏற்படுவது. பருவமில்லாதார் வாழ்க்கை என்பது முதுமைப் பருவம் எய்திய தலைமகன், இளமைப் பருவப் பெண்ணை மணத்தல் போன்ற வயது வேறுபாடு மிகுந்தவரின் சேர்க்கையாகும்.

## சிறந்த ஒழுக்கம்

எழுவகை ஒழுக்கங்களில் ஒத்த பருவத்தினர் ஒருவரை ஒருவர் உளமார விரும்பும் ஐந்திணை ஒழுக்கமே மேலானதாகக் கருதப்பட்டது. ஐந்திணை ஒழுக்கத்துக்கு ஆதாரமாவது அன்பே என்பதனை,

இன்பமும் பொருளும் அறனும் என்றாங்கு
அன்பொடு புணர்ந்த ஐந்திணை மருங்கிற்
காமக் கூட்டம் காணும் காலை (2)

எனத் தொல்காப்பியமும்,

அன்பின் ஐந்திணை களவு எனப்படுவது (3)

களவு கற்பெனக் கண்ணிய ஈண்டையோர்
உளநிகழ் அன்பின் உயர்ச்சி மேன (4)

என இறையனார் களவியலும் வலியுறுத்துவதைக் காணலாம்.

## தலைவனும் தலைவியும்

சங்க இலக்கியத்தில் காதலன் தலைவன் என்றும் காதலி தலைவி என்றும் குறிக்கப்பெறுவர். இவர்களைப் பெயர்கள் சொல்லி அழைக்கும் வழக்கம் இல்லை. தலைவன் தலைவியின் ஐந்திணை ஒழுக்கம் இனிதே நடைபெற உதவுகின்றவர் பலர். அவர்களில் செவிலி(தலைவியை வளர்த்த தாய்), தோழி, நற்றாய்(தலைவியைப் பெற்ற தாய்), பாங்கன்(தலைவனின் தோழன்) என்போர் முதன்மையானவர்.

## களவும் கற்பும்

தலைவன் தலைவியின் இன்ப வாழ்க்கை, களவு, கற்பு என்னும் இரு நிலைகளைக் கொண்டிருந்தன.

தலைவனும் தலைவியும் ஊழ்வினையால் சந்தித்து ஒருவரை ஒருவர் விரும்புவதும் அதனைத் தொடர்ந்து கூடி இன்பம் துய்ப்பதும் களவு எனப்படும். நாம் இக்காலத்தில் காதல் என்பதையே அக்காலத்து அகப்பொருள் இலக்கண ஆசிரியர் களவு என்றனர். பலரும் அறியாத ஒழுக்கம் ஆதலால் களவு எனப்பட்டது. மறைந்த ஒழுக்கம்(5) என்றும் இதனைத் தொல்காப்பியர் குறிப்பிடுவர். களவு ஒழுக்கத்துக்குக் காரணம் அன்பு ஆதலின் காமக்கூட்டம் என்றும் இது வழங்கப்பெறும்.

காமக்கூட்டத்தைத் தொடர்ந்து காதலனும் காதலியும் பலரும் அறிய மணம் புரிவர். இது கற்பு எனப்படும். தொல்காப்பியர்,

> கற்பெனப் படுவது கரணமொடு புணரக்
> கொளற்குரி மரபின் கிழவன் கிழத்தியைக்
> கொடைக்குரி மரபினோர் கொடுப்பக்கொள் வதுவே (6)

என்று கூறுவதால், கிழவன்(தலைவன்) கிழத்தியை(தலைவியை) அவளது பெற்றோர் அல்லது உறவினர் கொடுப்பக் கொள்வது கற்பு என்பது புலனாகின்றது.

களவு ஒழுக்கத்தில் ஆரம்பித்து, பின்னர் கற்பு ஒழுக்கத்தில் ஈடுபடுவது இக்காலத்தில் காதலித்துக் கலியாணம் செய்துகொண்டு இல்லறம் நடத்துவதைப் போன்றது. அதாவது அன்றைய களவுதான் இன்றைய காதல். எனினும் ஒரு வேறுபாடு கவனிக்கத் தக்கது. பழந்தமிழரின் களவொழுக்கத்தில் புணர்ச்சி இருந்தது. இன்றைய காதல் ஒழுக்கத்தில் திருமணத்துக்கு முன் காதலர் கூடிப் புணர்வது அரிது.

களவொழுக்கம் காலவரையறையின்றித் தொடர்வதில்லை. குறுகிய காலத்துக்குள் தலைவனும் தலைவியும் ஊரறியத் திருமணம் செய்துகொள்ள வேண்டும் என்பது நம் முன்னோர் கொள்கையாக இருந்தது. ஏனெனில் களவொழுக்கம் நீடிக்குமாயின் ஊரார் அலர் தூற்றுவர். அலர் என்பது பழிச்சொல்.

> கழியக் காதலர் ஆயினும் சான்றோர்
> பழியொடு வருஉம் இன்பம் வெஃகார் (7)

என்பது அகநானூற்றில் வரும் நெய்தற் சாய்த்துய்த்த ஆவூர் கிழார் என்பவரின் பாடல் அடிகள். அவரது கூற்றால் எவ்வளவுதான் ஒருவரை யொருவர் உயிருக்குயிராகக்

காதலித்தாலும் பழிச்சொல் வருமளவுக்குக் களவொழுக்கம் நீடிப்பதை அக்காலத்திற் சான்றோர் விரும்பவில்லை என்பது தெரிகின்றது.

சான்றோர் அன்றிக் காதலருமே அதனை விரும்பியிருக்க மாட்டார். அலரைத் தவிர்ப்பதற்குக் கற்பு வாழ்க்கையை மேற்கொள்வது சிறந்த வழியாயினும் திருமணத்தை விரைவிற் செய்ய முடியாதவிடத்து, தலைவன் அலர் அடங்கும்வரை தலைவியைக் காணாது நீங்குவன்.

மற்றுமோர் வழியும் கடைப்பிடிக்கப்பட்டது. தலைவி விரும்புமிடத்து, அவளை நள்ளிரவில் தனது மனைக்குத் தலைவன் கூட்டிக்கொண்டு செல்வான். அவ்விதம் களவொழுக்கத்தில் தலைவி தலைவனுடன் செல்வதை அகநூல்கள் உடன்போக்கு என வழங்கும்.

களவைத் தொடர்ந்து வரும் கற்பு வாழ்க்கைக்கு மாறான ஒழுக்கமும் பண்டைய தமிழரிடையே வழக்கில் இருந்தது. இக்காலத்தில் பெருவழக்காக இருப்பதைப் போன்று, முன்பின் தெரியாத ஆணும் பெண்ணும் திருமணத்தைச் செய்து கொண்டு பின்னர் அன்புடையவராகி இல்லறத்தை நடத்தும் வழக்கமும் அக்காலத்தில் நிலவியது. களவொழுக்கம் சமுதாயத்தில் ஏற்படுத்திய சில முறைகேடுகள் அத்தகைய வழக்கத்துக்கு வழிவகுத்திருத்தல் வேண்டும். காதலித்தவரைக் கைவிடுதல், திருமணத்துக்கு முன்னதாகக் கர்ப்பந் தரித்தல், காதலித்தவர் தாயையும் குழந்தையையும் பொறுப்பேற்க மறுத்தல் முதலிய ஒழுங்கீனங்கள் குடும்ப அமைப்பைக் குலைத்தமையால் முதலிலே திருமணம் (கற்பு) பிறகு காதல் என்னும் நிலை சிறப்புப் பெறலாயிற்று. இதனை மிகத் தெளிவாகவே தொல்காப்பியர்,

> பொய்யும் வழுவும் தோன்றிய பின்னர்
> ஐயர் யாத்தனர் கரணம் என்ப (8)

என்று கூறுகின்றார். கரணம் என்பது சடங்கு. சடங்கு பலரும் அறிய நடப்பது. எனவே கற்பு என்பது பலரும் அறியத் தலைவியைத் தலைவன் ஏற்றுக்கொள்வதைக் குறிக்கும். இதுவே தொல்காப்பியர் காலத்துக் கருத்தாக இருந்தது.

கற்பு வாழ்க்கை திருமணத்தில் தொடங்குவதால் கற்பு மனைவிக்கு மட்டுமன்றி கணவனுக்கும் உரிய ஒழுக்கநெறி என்பது புலனாகும். ஆயினும் ஒழுக்கத்தைப் பேணுவதற்கு வேண்டிய மனவுறுதியும் கட்டுப்பாடும் பெண்ணிடத்திலேயே அதிகம் காணப்படுவதனால் பிற்காலத்திற் கற்பு பெண்ணுக்கே உரிய சிறப்பு ஒழுக்கம் என்னும் கோட்பாடு வளரலாயிற்று.

*காதல் வாழ்க்கை* கட்டுரைகளைத் தொடர்ந்து வெளியிட்ட கனடாவின் பெயர்பெற்ற மாத இதழ் 'தாய்வீடு' ஆசிரியர் திரு. திலிப் குமார் அவர்களுக்கும் அவற்றைத் தொகுத்து அழகுற நூலாக்கி இப்பொழுது வெளியிட்டிருக்கும் காந்தளகத்துக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**வி. கந்தவனம்**

------------------------------

*(1) தொல்: பொருள் 1*

*(2) தொல்: பொருள் 89*

*(3) இறையனார் களவியல் 1*

*(4) இறையனார் களவியல் 60*

*(5) தொல்: பொருள் 133*

*(6) தொல்: பொருள் 140*

*(7) அகநானூறு 112*

*(8) தொல்: பொருள் 143*

# 1

# திருமணம்

மண மண்டபம்.

வாசலில் பழுத்த குலைகளுடன் குனிந்து வரவேற்கும வாழை மரங்கள், வெள்ளி நிறத்துக் குத்துவிளக்குகள், பன்னீர்ச் செம்புகள், சந்தன குங்குமச் சிமிழ்கள் புடைசூழ முறையாகக் கொலுவிருக்கும் நிறைகுடம்.

வாசலுக்கும் மண்டபத்துக்கும் இடையில் மாவிலைகளுடன் சேர்ந்த தென்னங் குருத்துத் தோரணங்கள்.

உள்ளே மல்லிகை, முல்லை, மலர்ந்த ரோசா மலர்களாலான மாலை வேலைப்பாடுகள். மங்கல வாத்தியத் தேன்மழை காதுகளைக் குளிப்பாட்டுகின்றது. முதன்மையான இடம் முத்து மணவறை.

முத்திரைத் தூண்கள், யாளிகள், காவல் தெய்வங்கள், இலட்சுமி சிலைகள், மயில்கள், அன்னங்கள், வண்ணப் பதாகைகள் என்பவற்றோடும் சித்திரச் சிகரத் தோடும் கூடிய மணவறை.

அழகான மணவறையில் மாப்பிள்ளையும் பெண்ணும்.

தலைப்பாகையோடு கூடிய கலாச்சார உடையில் மாப்பிள்ளை மாமன்னனைப் போல வீற்றிருக்க, பக்கத்தில் வெட்கத்தைப் பொங்கிப் படைத்தபடி வளவர்கோன் பாவை.

மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம் வைகலும்
எண்ணில் நல்ல கதிக்கு யாதுமோர் குறைவிலை
கண்ணில் நல்லஃதுறும் கழுமலர் வளநகர்
பெண்ணில் நல்லாளொடும் பெருந்தகை இருந்ததே

என்பது திருஞானசம்பந்தர் தேவாரம்.

ஆம். மணமகனைச் சிவனாகவும் மணமகளைச் சக்தியாகவும் பாவித்து, நாளும்



கோளும் நன்கு அமைந்த சுபவேளையில் செந்தண்மை பூண்டொழுகும் அந்தணர் வேதம் ஓதி, தெய்வங்கள் சாட்சியாகவும் தேவர்கள் சாட்சியாகவும், அக்கினி சாட்சியாகவும், கூடியுள்ள சபையோர் சாட்சியாகவும் திருமணச் சடங்குகளை நடத்தி, அவர்கள் இருவரையும் முறைப்படி கணவன் மனைவியாம் தராதரத்துக்கு உயர்த்தி வைக்கின்றார்.

இது சைவத் திருமணம். கிறித்தவர்களும் வேதக் கோயில்களிலேயே விவிலியத்தை வாசித்து இயேசுபிரான் சாட்சியாகத் திருமணத்தை நடத்துகிறார்கள். இஸ்லாமியத் திருமணங்களிலும் திருக்குறான் வாசிக்கப்படுகின்றது. அதாவது எல்லாச் சமய நெறிகளிலும் இறை சாட்சியாகவே திருமணம் செய்யப்படுகின்றது. அந்த அளவுக்கு எந்தச் சமுதாயத்திலும் திருமணம் சிறப்புப் பெற்ற நிகழ்வாகின்றது.

திருமணம் என்ற சொல்லுக்கு தெய்வீக மணம் என்ற பொருளும் உண்டு. எனவே, இந்நாள் மணமகளுக்கும் மணமகனுக்கும் ஒரு தெய்வீகமான நாள்; பொன்னாள்; மறக்க முடியாத நன்னாள்.

ஓர் இன்றியமையாத உறவு இவர்களை இணைத்திருக்கின்றது. இந்த உறவுக்கு அடிப்படையாக அமைவது அன்பு. என்னதான் கோலாகலமாகத் திருமணம் நடந்தேறினாலும் கணவனும் மனைவியும் அன்பு உணர்ச்சியாற் பிணைக்கப்பட வில்லையேல் திருமணம் என்பது வெறும் மணமே.

தலைவன் தலைவி அன்புக்குக் காதல் என்று பெயர். சிலர் காதலித்தபின் திருமணம் செய்கிறார்கள். சிலர் திருமணஞ் செய்தபின் காதலிக்கிறார்கள்.

திருமணத்தின்பின் காதலை வளர்த்துக்கொள்ளும் முறையினையே தமிழ்ச் சமூகம் பண்பாடாகக் கண்டிருக்கின்றது. தொல்காப்பியர் காலத்திலேயே இம்முறை நடைமுறையில் இருந்தமைக்கு ஆதாரங்கள் உள்ளன.

பேச்சுத் திருமணம் பெற்றோரால், பெரியோரால் நிச்சயிக்கப்படுவது. பேசி, சாதகப் பொருத்தம் பார்த்து, குண நலன்கள் விசாரித்துப் பெற்றோர் திருமணம் செய்யலாம் என்ற முடிவுக்கு வந்த பின்னரும், இறுதியானதும் மிகவும் இன்றியமையாததுமான ஒரு கட்டம் உள்ளது. அதுவே தலைவன் தலைவி விருப்பம். அவர்கள் ஒருவரை ஒருவர் விரும்பவில்லை எனில் திருமணம் இல்லை. அதற்காகவே பெண் பார்க்கும் வைபவம் நடத்தப்படுகின்றது. பெண் பார்க்கும் வைபவம் என்பது பெரு வழக்காயினும் அதுவே பெண் ஆணைப் பார்க்கும் வைபவம் ஆகவும் அமைகின்றது.

பெண் பார்க்கும் நிகழ்ச்சி தலைவனும் தலைவியும் முன்பு ஒருவரை ஒருவர் முற்றிலும் பார்த்திராத சூழ்நிலையிலேயே நடைபெறுகின்றது. படிக்கின்ற காலத்திலோ, வேலைத் தலங்களிலோ அல்லது பிற பொது இடங்களிலோ அவர்கள் முன்பு சந்தித்திருக்கக்கூடிய நிலை ஏற்பட்டிருப்பின் பெண் பார்க்கும் வைபவம் இல்லாமலே அவர்கள் தமது விருப்பத்தை அல்லது விருப்பம் இன்மையைத் தெரிவிப்பார்கள்.

விருப்பம் இல்லையாயின் நிர்ப்பந்திக்கும் வழக்கம் இக்காலத்தில் தமிழீழத்தில் இல்லை. ஆணும் பெண்ணும் ஒருவரை ஒருவர் விரும்பும் நிலையிலேயே திருமணம் நடைபெறுகின்றது. இந்த விருப்பமே அன்பு உணர்ச்சியின் ஆரம்பம். அன்பு உணர்ச்சியே காதலின் உயிர்நாடி.

அன்பு உணர்ச்சி இல்லாத காதல் பருவக் கவர்ச்சியால் அல்லது பதவி மற்றும் செல்வச் சிறப்புகளால் வருவது. அது போலிக் காதல். போலிக் காதலுக்கு மோகம் என்று பெயர். மோகம் முப்பது நாளைக்கு என்னும் பழமொழி அதன் நிலையில்லாத் தன்மையை நன்கு விளக்குகின்றது.

அன்பு உணர்ச்சி திருமணத்தின் முதற்படி. திருமணம் இல்லறத்தின் முதற் படி. இல்லறத்துக்கும் அன்பே துணையாகும். அன்பை வளர்த்தால் அறம் வளரும். அறம் வளர்ந்தால் இன்பம் பெருகும். இன்பம் பெருகின் மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம்.

அன்புடைமையைப் பற்றி இன்னும் சிறிது நோக்குவோம்.

2

# அன்புடைமை

அன்பு என்று சொல்லும் பொழுது உள்ளத்திலே தேன் ஊறுகின்றது. அன்பர்களே! என்று அழைக்கின்ற பொழுது மகிழ்ச்சிமயமான உணர்ச்சி ஊறுகின்றது. வாயளவில் வெறும் சம்பிரதாயத்துக்காகச் சொல்வது வேறு, உணர்ந்து சொல்வது வேறு. அன்பர்களே! என்று உணர்ந்து சொல்லுகின்ற பொழுது உள்ளம் பூரிப்படைகின்றது. இந்தப் பூரிப்பு மலங்கள் படியாவண்ணம் மனத்தைக் காப்பாற்றிக் கொள்கின்றது; நோய் நொடிகளை அகற்றுகின்றது; என்றும் உள்ளத்தை இளமையாக்குகின்றது.

அன்பு அலைகள் அணுவும் ஆறுவதில்லை. அன்புச் சுவடுகள் என்றும் அழிவதில்லை. அன்புத் தொடர்புகள் எளிதில் அறுவதில்லை. அன்புக்கு இணை இந்த உலகத்தில் எதுவுமே இல்லை.

அன்பு வெறும் உணர்ச்சி அளவில் மட்டும் நின்றுவிடுவதில்லை. அது ஒரு பெரிய சக்தி. அன்பு வேர், உலகத்தைத் தழைக்க வைக்கின்றது. அன்புப் பிணைப்பு அகிலத்தை அமைதியில் வைக்கின்றது.

மனிதப் பிறப்பு மிகவும் அரியது. அரிய இப்பிறப்பினை நாம் பெற்றதே அன்போடு கலந்த வாழ்க்கையை வாழ்வதற்கே என்கின்றார் வள்ளுவர் பெருமான்:

அன்போடு இயைந்த வழக்கென்ப ஆருயிர்க்கு
என்போடு இயைந்த தொடர்பு. *(குறள் 8: 3)*

அன்போடு பொருந்தி வாழும் வாழ்க்கையின் பொருட்டே அரிய இந்த உயிர் உடம்பினை எடுத்திருக்கின்றது. என்போடு இயைந்த தொடர்பு என்கின்றார். அதாவது, உயிருக்கும் உடலுக்கும் உள்ளதொடர்பே அன்புதான். அதனாலே, அன்பில்லாத வாழ்க்கை பொருளற்றதாகின்றது; பயனற்றுப் போகின்றது.

அன்பின் வழியது உயிர்நிலை அஃதிலார்க்கு
என்புதோல் போர்த்த உடம்பு. *(குறள் 8: 10)*

அன்பு வழி நின்ற உடலே உயிர்கொண்ட உடலாம். அன்பில்லாதவர் உடல் உயிரற்ற உடல், எலும்பினைத் தோலாற் போர்த்த வெறும் உடம்பு. அதாவது, வாழ்க்கைக்கு அன்பு உயிர் போன்றது என்று வலியுறுத்துகின்றார் தெய்வப் புலவர்.

உயிர் உடம்பெடுப்பது வாழ்வதற்கு. வாழ்க்கையின் நோக்கம் நன்னெறிக்கண் நின்று இம்மைப் பயன்களை அனுபவித்தல். அன்பில்லாமல் இப்பயன்களை அனுபவிக்க இயலாது. அதனால், அன்போடு அமையாத வாழ்க்கை உயிரற்ற வாழ்க்கை ஆகின்றது. உயிருக்கு உயிரூட்டுவது அன்பு.

அன்புத் தோட்டத்திற் பலவகைப் பூக்கள். பாசம், நட்பு, காதல், பத்தி, அருள் என்பன அனைவரையும் கவரும் இனிமையான மலர்கள். பாசம், இரத்த உறவு சம்பந்தப்பட்டது. நட்பு, இரத்த உறவு இல்லார்க் கிடையில் வளர்வது. காதல், தலைவன் தலைவிக் குரியது. சிறியவர், பெரியோர் மீது காட்டும் அன்பைப் பத்தி என்பர். அடியார், இறைவன் மீது செலுத்துவதும் அதுவே. வலியார், மெலியாரிடம் கொள்ளும் இரக்கம் அருள் எனப்படும். இறைவன், தன் அடியாருக்குப் பாலிப்பதும் அருளாகும். இவை அனைத்துக்கும் அடிப்படையாவது அன்பு.

அன்பு என்னும் அருமையான உணர்ச்சி உலகத்திலே இன்று தட்டுப்பாடாகி வருகின்றது. அன்பு அரிதாகும் பொழுது, குடும்பத் தகராறுகளும் ஊர்ச் சண்டைகளும் இனத் துவேசங்களும் தலையெடுத்து வாழ்க்கைப் பயன்களைச் சீர்குலைக்கின்றன.

பத்திரிகைகளிலே நாளாந்தம் படிக்கின்றோம். அன்புக்காக ஏங்கும் குழந் தைகள், அன்பின்றித் தவிக்கும் நோயாளிகள், அன்பு பாராட்ட முடியாது பிரிந்து செல்லுகின்ற வாழ்க்கைத் துணைவர்கள், அன்பின்றி அடிபடும் உடன்பிறப்புகள், சுடுபடும் பிள்ளைகள், கடத்திச் செல்லும் காடையர், கற்பழிக்கும் கயவர் என்று எத்தனையோ குழப்பங்களைப் பற்றிப் படிக்கின்றோம்.

குடும்ப உறவுநிலை என்றில்லாது, சமூக, அரசியல் மட்டங்களிற் காணப்படும் பிரச்சினைகளுக்கும் அடிப்படையில் அன்பின்மையே காரணமாகும். அதுவே சமூக மட்டத்தில் சாதி, சமய, பொருளாதார, நிற வேறுபாடுகளையும் வெறுப்புகளையும் வளர்த்துவருகின்றது.

அரசியல் மட்டத்தில் காணப்படும் தலையாய பிரச்சினை ஒன்று அடக்குமுறை. அடக்குமுறைகளில், பெரும்பான்மை இனம், சிறுபான்மை இனத்தை அடக்கி ஒடுக்குகின்றது. இதனைச் சனநாயக முறை புறக்கணிக்கும் பொழுது சிறுபான்மை இனம் பெரும்பான்மை இனத்தை வெறுக்கின்றது. இந்த வெறுப்பு, வன்முறையை வளர்த்தெடுக்கின்றது.

சாதி, சமய வேறுபாடு, இனத்துவேசம், அடக்குமுறை போன்றவற்றுக் கெல்லாம் அடிப்படையாக அமைவது அன்பின்மையும், மனிதாபிமான இன்மையுமேயாகும்.

அன்பை அரிதாக்குவது அழுக்காறு. அன்பு உள்ளம் இயல்பாகவே தூய்மையானது. அதில் கரவு, வஞ்சகம், சூது முதலாய அழுக்குகளுக்கு இடமேயில்லை.

அன்பு அறத்திற்கு ஆதாரம். அறத்திற்கு மட்டுமன்றி மறத்திற்கும் அன்பே துணை. மறம் என்பது பகைமை உணர்ச்சி. தருமர் கௌரவர்களை எதிர்த்துப் போர்செய்த வேளையிலும் அவர்கள் மீது அன்பு வைத்திருந்தார் என்று பாரதம் கூறுகின்றது. பகைவனுக்கு அருள்வாய் என்கிறது கீதை.

பகைமையைப் போக்கி நட்பை வளர்க்க உதவுவது அன்பு. நட்பு வளர ஒற்றுமை வளரும். ஒற்றுமை ஓங்க அமைதி நிலவும். அமைதி நிலவில் ஆக்கம் பிறக்கும்.

அன்பின்றி இன்பம் இல்லை.

அன்பு வளர்க்கப்பட வேண்டிய பயிர். உள்ளத்து அமைதிக்கன்றி உலக அமைதிக்காகவும் அது வளர்க்கப்பட வேண்டும்.

அன்புணர்ச்சியை எல்லா நிலைகளிலும் மிக அழகாக எடுத்துக்காட்டும் நூல் இராமாயணம். இராமர் கதையைப் பெரியவர்களும் சிறியவர்களும் போற்றிப் படித்துவரின் உள்ளத்தில் அன்பு ஊறும்; வாழ்க்கைப் பயன்களும் தேறும்.



3

# பண்புடைமை

பண்பாவது உயர்ந்த குடிப்பிறந்த குண இயல்பு. குடிக்கு உயர்வு குணத்தின் உயர்வாகும். தமிழர் கண்ட உயர்ந்த குணங்கள் பல. அவற்றைப் பொதுக் குணங்கள், சிறப்புக் குணங்கள் என இருவகைப் படுத்தலாம். செப்பம், நாணம், ஒழுக்கம், வாய்மை, நகை, இன்சொல், பொறுமை, இகழாமை முதலியன பொதுக் குணங்கள். ஈகை, மானம், வீரம், கடமை, ஒற்றுமை போன்றவை சிறப்புக் குணங்கள்.

எல்லாக் குணங்களுக்கும் அடிப்படையாவது அன்பு. பிறர்மேல் அன்பு பாராட்டுதலும், நற்குணங்களையுடைய குடியிற் பிறத்தலுமாகிய இவ்விரண்டும் ஒருவருக்குரிய பண்புடைமையாகும் என்று உலகத்தார் சொல்வர் என்கிறார் திருவள்ளுவர்:

அன்புடைமை ஆன்ற குடிப்பிறத்தல் இவ்விரண்டும்
பண்புடைமை என்னும் வழக்கு. *(குறள் 100: 2)*

இத்தகைய உயர்ந்த குணங்களால் மற்றவர் நன்மை அடைகின்றபொழுது பண்பு முழுமை பெறுகின்றது.

பண்பெனப்படுவது பாடறிந் தொழுகல் என்கின்றது கலித்தொகைப் பாடல் ஒன்று.

பாடறிந்து ஒழுகல் என்றால் என்ன?

பாடு என்னும் சொல்லுக்குப் பல பொருள்கள் உள்ளன. கடமை என்பது அவற்றுள் ஒன்று. *அதனைச் செய்து முடிப்பது அவன் பாடு* என்னும் வாக்கியத்தில் பாடு, கடமை என்ற பொருளைத் தருகின்றது. கடமைகளை அறிந்து அவற்றைத் தவறாது செய்து முடித்தல் தலையாய பண்புடைமை.

பாடு என்பதற்குத் தன்மை அல்லது இயல்பு என்ற பொருளும் உண்டு. இயல்பு, பழக்க வழக்கங்களையும் உள்ளடக்கும். மற்றவரின் இயல்புகளைத் தெரிந்து கொண்டு அவற்றுக்கு ஏற்ப நடத்தலும் பண்புடைமையாகும். அதாவது, நற்குண



நல்லியல்புகளில் வழுவாது நிற்கின்ற அதேவேளையில், பிறர் பண்புகளையும் அறிந்து, அவற்றுக்குத் தக நடத்தல் வேண்டும். அவற்றுக்குத் தக என்ற தொடரைக் கவனித்தல் வேண்டும். ஒரு குடிகாரனது இயல்புக்குத் தக நடத்தலாவது, அவனுடன் சேர்ந்து குடிப்பதல்ல, அவனை விலகி அவனுடன் ஒட்டாது நடப்பது.

பாடு என்றால் முயல்தல் அல்லது கடினமாக உழைத்தல் என்றும் பொருள். *இந்தச் செல்வத்தை நான் பாடுபட்டுத் தேடினேன்* என்பதில் இத்தகைய கருத்துகள் இருப்பதைக் காணலாம்.

*பாடறிந்து ஒழுகல்* என்பது ஓர் உலகளாவிய ஒழுக்க தத்துவம். பண்புகள் இடத்துக்கிடம் வேறுபடலாம், இனத்துக்கினமும் மாறுபடலாம். திரைகடல் ஓடித் திரவியம் தேடிய தமிழன் பல நாடுகளைக் கண்டிருக்கின்றான்; பல்லின மக்களுடன் பழகியிருக்கின்றான். அத்தகைய அனுபவத்தின் விளைவே, பாடறிந்து ஒழுகு, இணங்கி இரு, உலகத்தோடு ஒட்ட ஒழுகு என்பன போன்ற அறிவுரைகள்.

உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பல கற்றும்
கல்லார் அறிவிலா தார். (குறள் 14: 10)

என்பார் வள்ளுவர் பெருமான்.

பாடு என்பதற்கு உலக வழக்கு என்றும் பொருள் உண்டு. எனவே பாடறிந்து ஒழுகல் என்பதற்கு உலக வழக்கை அறிந்து அதற்கேற்ப நடத்தல் வேண்டும் என்று பொருள் கொள்வதும் பொருந்தும். உலக வழக்கு என்பது உயர்ந்தோர் மரபு.

உயர்ந்தோர் என்போர் உத்தம குணத்துப் பெரியோர்; நீதி நியாயங்களை நன்கு அறிந்த அறிவுடைச் சான்றோர். அவர் நீதி வழுவா நெறிமுறையில் நடந்து நல்வாழ்க்கை நெறிகளை வாழ்வாங்கு வாழ்ந்து காட்டுபவர்; மக்களுக்கு முன்மாதிரியானவர்.

உயர்ந்தோர் வகுத்தவழி பண்பு பாராட்டுவது, தமிழர் பண்பு. செல்வமும் கல்வியும் பெரும் பதவிகளும் தரும் வளர்ச்சி வளர்ச்சியன்று. உண்மையான உயர்ச்சி என்பது உயர்ந்த பண்போடு கூடியது. பண்புடையார்ப் பட்டுண்டு உலகு. உயர்ந்த மக்கட் பண்பு இல்லாதவரை, மரம் போல்வர் என்று பழித்துரைக்கின்றார் வள்ளுவர் பெருமான்:

அரம்போலும் கூர்மைய ரேனும் மரம்போல்வர்
மக்கட் பண்பு இல்லாதவர். (குறள் 100: 7)

பண்போடு கூடிய உறவு, ஒற்றுமையை வளர்க்கும்; அமைதியை நிலைநாட்டும்; வாழ்வையும் வளத்தையும் அளிக்கும்.

தமிழர் பண்பு முறைகள் மிக உன்னதமானவை. சமூக ஒழுங்குக்கும் கட்டுப்பாட்டுக்கும் மிக அவசியமானவை. உதாரணமாக, ஒழுக்கப் பண்பு தமிழர் சமூகத்தின் உயிர்நாடியாக விளங்குவதைக் காணலாம். தமிழர் அதனை உயிரினும் மேலாக மதித்து வருகிறார்கள்.

ஒழுக்கம் விழுப்பம் தரலால் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும். *(குறள் 14: 1)*

என்பது திருக்குறள். சில ஒழுக்கக் கூறுகள் பின்வருமாறு:

ஆணும் பெண்ணும் திருமணம் ஆகும்வரை எவருடனும் பாலுறவு வைத்துக்கொள்ளாத பண்பு, திருமணம் செய்த பின்னரும் ஆண் தனது ஒழுக்க நெறியையும் பெண் தனது கற்பையும் பேணிக் காத்து, கட்டுப்பாட்டோடு இல்லற வாழ்க்கையை இணைந்து நடத்தல், விருந்தோம்பல், அன்னையையும் பிதாவையும் முன்னறி தெய்வங்களாகப் போற்றுதல், மூத்தோரையும் குருமாரையும் மதித்தல், பெற்ற பிள்ளைகளை உற்ற முறைகளில் வளர்த்தல், பிள்ளைகள், *இவர்களைப் பெற்றவர் என்ன தவஞ் செய்தனரோ?* என்று பிறர் பாராட்டும்படியாக நடத்தல் முதலியன.

இவற்றை இழிவு படுத்தும் வகையில் இக்காலத்திற் சில தமிழ் அன்பர்கள் நடந்து கொள்வது கவலைக்குரியது. அதுவும் புலம் பெயர்ந்த நாடுகளில், எமது பாரம்பரியப் பண்புகளுக்கு ஒவ்வாத முறையில் நடந்துகொள்வதைப் போன்ற புத்தியீனம் வேறொன்றும் இருக்கமுடியாது.

அன்பின் அடிப்படையில் வளர்ந்தது எமது பண்பு. அதன்படி வாழ்ந்து காட்டி, தமிழர் பெருமையைப் பல்லோர் நடுவிலும் நிலைநாட்ட வேண்டும் என்னும் குறிக்கோளோடு வாழ்வது ஒவ்வொரு தமிழனதும் கடனாகும்.

4

# இரு நோக்கு

அவளின் அழகு சொல்லி முடியாது. முகத்தை முழுமதி என்பார், கண்களைக் கயல்கள் என்பார், புருவங்களை விற்கள் என்பார், கூந்தலை முகில் என்பார்.

அவள் சிரித்தால் செந்தாமரை அழுமாம், தன்னிலும் அவளின் பொலிவு சிறப்பாக இருக்கிறதே என்று. பற்களைப் பார்த்து முத்துக்கள் வெள்குமாம், தம்மிலும் அவளது பற்கள் அழகாக இருக்கின்றனவே என்று. இதழ்களைக் கண்டு கொவ்வைக் கனிகள் வெம்புமாம், அவற்றின் அளவும் நெகிழ்ச்சியும் திரட்சியும் குளிர்ச்சியும் தமக்கு இல்லையே என்று.

உடல் ஒரு கொடி என்பார்; இடை ஒரு மின்னல் என்பார்; பார்த்தாள் எனின் மானை வரவழைப்பார்; பேசினால் கிளிப்பிள்ளை தோற்குமென்பார்; நடந்தாலோ அன்னத்தை ஒப்பிடுவார்.

உடல் அழகு நிலையற்றது. காலத்தால் கரைய வல்லது. புறத்து அழகை அணி செய்வது அகத்து அழகு. அவளது உள்ளம் தூய்மையானது. ஒழுக்கம் சிறப்பானது. அவளை வட்டமிட்ட வாலிபர்களுக்கு எட்டாக் கனியாகவே அவள் பவனிவந்தாள். அத்தகைய அன்னக் கிளி, அந்த ஊரின் தேவ கன்னி, ஒரு நாள் அவனைக் காண நேர்ந்தது.

அவனின் அறிவுத் திறம், தொழில் மேன்மை, உயர்ந்த குணம், ஒழுக்க விழுப்பம் முதலியன பற்றியும் விளையாட்டுத் துறைச் சாதனைகள் பற்றியும் ஏழைகளுக்குச் செய்யும் உதவிகள் பற்றியும், ஊர் வளர்ச்சிக்கு ஆற்றிவரும் தொண்டுகள் பற்றியும் அவள் நிறையவே கேள்விப்பட்டிருக்கிறாள்.

ஆனால், அவனின் அழகு நிறத்தை, உயர்ந்த தோற்றத்தை, அகன்ற மார்பை, நிமிர்ந்த நடையை, நேர்கொண்ட பார்வையை அவள் இதற்குமுன் பார்த்ததில்லை. இன்று பார்க்கின்றாள். பார்த்துப் பருகுகின்றாள். அந்தக் கட்டிளங் காளையின் அற்புத அழகு அவள் உள்ளத்தைக் குற்றாலம் ஆக்கியது.

அவனும் நோக்கினான்.



கண்கள் ஒருகணம் சந்தித்தன. அந்த ஒரு கணத்துள் ஓராயிரம் செய்திகள் பரிமாறப்பட்டிருத்தல் வேண்டும்.

மறுகணம் எதனையோ புரிந்து கொண்டவைபோல அவள் கண்கள் நிலம் நோக்கின. இதழ்கள் முறுவலித்தன. வலதுகாற் பெருவிரல் அவளின் பூரிப்பை நிலமகளுக்கு நேர்முகவருணை செய்துகொண்டிருந்தது.

அவள் பூத்துக் குலுங்கினாள். அவன் பார்த்து மயங்கினான்.

கண்ணொடு கண்ணினை நோக்கின் வாய்ச்சொற்கள்
என்ன பயனும் இல (குறள் 110: 10)

என்னும் வள்ளுவனாரின் வாய்மொழி காட்சியாகிக் கொண்டிருந்த அந்த வேளையிலே அவன் நெஞ்சத்து ஒலிநாடாவை அவள் முடுக்கிவிட்டுக் கொண்டிருந்தாள்.

இவள் மண்ணகப் பெண்ணோ அன்றி வானகப் பெண்ணோ? தேவலோகத்தி லிருந்து என்னைத் தாக்குதற்பொருட்டுப் பெரும் சேனையுடன் வந்தவளையொத்த இந்த அழகி யார்? இயமனை யான் முன்பு கண்டறியேன். இன்று கண்டுகொண்டேன். அவன் போர் செய்யும் கண்களையுடையவன்... உடையவனா? இல்லை உடையவள்! பெண்மானைப் போன்று அச்சங்கொள்ளும் பார்வையையும் நாணத்தையும் இயல்பாகவே கொண்டுள்ள இவளுக்கு வேறு அணிகலன்கள் வேண்டியதில்லை.

இப்பொழுது இவள் தலை நிமிர்கிறது. நான் பார்க்கும்போது தலை குனிந்தவள், நான் பார்க்காதபோது என்னைப் பார்க்க விரும்புகிறாள். அவ்வளவு நாணம் அவளுக்கு! புன்முறுவல் பூக்கின்றாளே! அந்த முறுவலில் ஒரு குறிப்பு இருக்கவே செய்கின்றது.

ஆம், இவள் என்னை விரும்புகிறாள். எனது விருப்பத்தை இவளுக்கு எவ்விதம் தெரிவிப்பது? இவளது சிறுபார்வை எனது விருப்பத்திலும் பெரியது. இவள் என்னை அன்புடன் பார்த்துத் தலை குனிந்த செயல், எமது அன்பாகிய பயிரை வளர்ப்பதற்குப் பாய்ச்சிய நீர் எனின் முற்றிலும் தகும்.

இந்த மயிலின் பார்வை என்னை மிகவும் வருத்துகின்றது. இவளது மைதீட்டப் பெற்ற கண்களுக்கு இருவகையான பார்வைகள் உள்ளன. ஒரு பார்வை நோயை உண்டாக்குகின்றது. மற்றொரு பார்வை உண்டாக்கிய நோயை மாற்றுவதற்கு ஏதுவாய மருந்தாகின்றது. என்னே இவளது கண்கள்!

காதல் வயப்பட்ட தலைவனின் இக்கூற்றுகள், திருக்குறளில் இன்பத்துப்பாலில் முதல் இரண்டு அத்தியாயங்களிலும் வருகின்றன.

காதல் புனிதமானது. புனிதமான காதல் இன்றைய இயந்திர உலகில் மிக அரிதாகி வருகின்றது. உடற்கவர்ச்சியால் ஏற்படும் பாலியல் விருப்பைக் காதல் எனக் கூறிப் பலர் மயங்குகின்றனர். உண்மைக் காதல் உள்ளத்துடன் தொடர்புடையது. அத்தகைய காதலுக்குப் பருவக் கவர்ச்சியிலும் பார்வைக் கவர்ச்சியே முக்கியம் என்கின்றார் வள்ளுவனார்.

குறிப்பறிதல் என்னும் அதிகாரத்தில் வள்ளுவனாரின் காதல் தலைவன், தலைவியின் நோக்குப் பற்றியே அதிகம் பேசுகின்றான். அவளது நோக்கில் நோயும் இருக்கிறது, நோய்க்கு மருந்தும் இருக்கிறது என்னும் அவனது காதல் அனுபவம் கவனிக்கத் தக்கது; சுவைத்து இன்புறத் தக்கது:

இருநோக்கு இவளுண்கண் உள்ளது ஒருநோக்கு
நோய்நோக்குஒன் றந்நோய் மருந்து. *(குறள்: 110: 01)*

## 5

# கள்வன் மகன்

இவனுக்கு மிகச்சிறிய வயதிலிருந்தே அவளைத் தெரியும். தீராத விளையாட்டுப் பிள்ளையாகத் தெருவிலே அவளோடு இவன் விளையாடியிருக்கின்றான். பின்னர் வளர்ந்து பெரியவனாகியும் அவளது நினைவு இவனை விட்டு அகல்வதாக இல்லை. பெற்றோர் முன்புபோல வெளியிலே விடுவார்களா, என்ன?

இரவிலும் பகலிலும் அவளைக் காண்பதற்கு இவன் எடுத்த முயற்சிகள் யாவும் பயனற்றுப் போயின. அவளுக்கு ஒரு தோழி இருந்தாள். அவளையும் இவனுக்கு நன்கு தெரியும். அவள் மூலமாகத் தன் காதலியைக் காணலாம் என்றால் அவளையும் காணமுடியவில்லை.

வேறு வழியின்றி ஒருநாள் நேராகக் காதலியின் வீட்டுக்கே சென்று விட்டான் இவன். என்ன துணிச்சல்! இளங் கன்று பயம் அறியாது என்பார்கள். என்ன வந்தாலும் வரட்டும் என்று எவ்வித அச்சமும் இன்றித் தனது இதயம் கவர்ந்த தலைவியின் வீட்டு முற்றத்தில் போய் நின்றான்.

அங்கே ஒரு நாடகமே நடந்து ஓய்ந்தது. அதனைத் தொடர்ந்து தலைவிக்குத் தூக்கமே வரவில்லை.

சில நாட்கள் கழித்து வெளியூரில் இருந்த தனது உறவினர் வீட்டுக்குச் சென்றிருந்த தோழி வந்தாள். அவளுக்கு நடந்த அந்த நாடகத்தை இவ்விதம் விவரித்தாள் தலைவி:

ஒளிபொருந்திய வளையல்களை அணிந்த தோழியே, இதனைக் கேள்: முன்பு நாம் தெருவிலே மணலால் சிறுவீடு கட்டிச் சோறுகறி சமைத்து விளையாடிய போது மணல் வீட்டைக் காலால் சிதைத்தும் கூந்தலில் அணிந்த பூக்களைப் பிடுங்கியும் வரியினையுடைய பந்தை எடுத்துக்கொண்டு ஓடியும் நாம் வருந்தும்படி குறும்புகள் செய்தானே ஒரு சிறிய கட்டாக் காலி! அவனை நினைவிருக்கிறதா?

அவன் ஒருநாள் நானும் என் அன்னையும் வீட்டில் இருந்தபோது வந்து தண்ணீர் விடாய்க்கிறது என்றான். அவ்வளவில் என் தாயார், தகட்டுப் பொன்னாற் செய்த



செம்பிலே நீரை வார்த்து அருந்தக் கொடு என்று என்னைப் பணித்தாள். யானும் அவனின் இயல்பை உணராதவளாய், தண்ணீரைக் கொண்டுபோய் அருந்தக் கொடுத்தேன். கொடுத்த போது அவன் எனது வளையல் அணிந்த முன் கையை இறுக்கிப் பிடித்து இழுத்தான். நான் அச்சமுற்று தாயே இவனின் செயலைப் பார் என்று கத்தினேன்.

அன்னையும் அலறியபடி ஓடோடி வந்தாள். அப்பொழுது (என்னையறியாமல்) நடந்ததை மறைத்து, நீர் அருந்துகையில் இவன் விக்கி வருந்தினான் என்று ஒரு பொய்யைச் சொல்லிவிட்டேன். உடனே அன்னை அவனின் முதுகைப் பலமுறை தடவினாள். அப்பொழுது என்னைக் கடைக்கண்ணால் கொல்வான் போல நோக்கித் தனது மகிழ்ச்சியைப் புலப்படுத்தி நின்றான் அக்கள்வன்.

இவ்வரிய காதற் காட்சி கலித்தொகையில் வருகின்றது. பாடல் பின்வருமாறு:

*சுடர்த்தொடீஇ கேளாய் தெருவில் நாம் ஆடும்*
*மணற்சிற்றில் காலிற் சிதையா அடைச்சிய*
*கோதை பரிந்து வரிப்பந்து கொண்டோடி*
*நோதக்க செய்யுஞ் சிறுபட்டி மேலோர்நாள்*
*அன்னையும் யானும் இருந்தேமா இல்லிரே*
*உண்ணுநீர் வேட்டேன் எனவந்தாற்கு அன்னை*
*அடர்பொற் சிரகத்தால் வாக்கிச் சுடர் இழாய்*
*உண்ணீர் ஊட்டிவா என்றா ளெனயானும்*
*தன்னை அறியாது சென்றேன் மற்று என்னை*
*வளைமுன்கை பற்றி நலியத் தெருமந்திட்டு*
*அன்னாய் இவனொருவன் செய்தது காண் என்றேனா*
*அன்னை அலறிப் படர்தரத் தன்னையான்*
*உண்ணுநீர் விக்கினான் என்றேனா அன்னையும்*
*தன்னைப் புறம்பழித்து நீவ மற்று என்னைக்*
*கடைக்கண்ணால் கொல்வன்போல் நோக்கி நகைக்கூட்டம்*
*செய்தான் அக் கள்வன் மகன்.*

*(கலித்தொகை: குறிஞ்சிக்கலி 15)*

(சுடர்தொடீஇ - ஒளிபொருந்திய வளையல்களை அணிந்தவளே; அடைச்சிய - செருகிய; கோதை - சடைமாலை; பரிந்து - பிடுங்கி; சிறுபட்டி - கட்டுக் காவல் அற்றவன்; சிரகம் - நீர்ச் செம்பு; வாக்கி - வார்த்து; தன்னை - தலைவன்; தெருமந்திடல் - மனச் சுழற்சிபெறல், அச்சமுறுதல்; நீவ - தடவ)

தோழிக்கு யாவும் விளங்கிவிட்டது. தலைவன் வெறும் தண்ணீருக்காக வரவில்லை. தலைவியைக் காணவேண்டும் என்பதே அவன் நோக்கம்.

ஏன் காண வேண்டும்?

தலைவியை அவன் விரும்புகின்றான். இல்லையென்றால் அவள் கையைப் பிடிப்பானா? நிச்சயம் தலைவியைக் காண்பதற்கு அவன் பலதடவை முயன்றிருக்க வேண்டும். வெளியில் தலைவியைச் சந்திக்க முடியாத காரணத்தால், அவளைக் காண வேண்டும் என்னும் வேட்கையால் வீட்டுக்கே சென்றுவிட்டான்.

இனி, தலைவியும் அவனைக் காதலிக்கின்றாள் என்பது வெளிப்படை. அவன் தன் கையைப் பிடித்ததை மறைத்துத் தண்ணீர் விக்கிவிட்டது என்று சொல்லி அவனைக் காப்பாற்ற முயன்றதிலிருந்தே அது நன்கு தெரிகிறது.

மேலும் கொல்வான்போல் பார்த்தான் என்கிறாளே! பொய் சொன்னது, இவள் அவன்மீது கொண்ட அன்பினைக் காட்டுகின்றது. கொல்வான்போல் பார்த்தான் என்பது, அவன் இவள் மீது ஆராக் காதல் கொண்டுள்ளான் என்பதை உணர்த்துகின்றது.

மேலும், அவனைக் கள்வன் என்று சொல்லித் தனது உள்ளத்தை அவன் திருடிக் கொண்டமையையும் அவள் உணர்த்துகின்றாள். இவள் அவனைக் கூடுவள் என்பது உறுதி.

இவ்வாறு தோழி சிந்தித்துத் தலைவியின் நிலையைத் தனக்குள் தெளிவுபடுத்திக் கொள்கிறாள். இனிமேல் அவர்கள் சந்திப்புக்கு ஒழுங்கு செய்யலாம். செய்வது தனது கடமை என்பதையும் அவள் உணர்கிறாள்.

6

# உடன்போக்கு

தலைவனும் தலைவியும் இரகசியமாகச் சந்தித்து வந்தனர். அவர்களது களவொழுக்கத்தை எப்படியோ அறிந்துகொண்ட ஊரார் கிசுகிசுக்கத் தொடங்கினர். இந்தக் கிசுகிசுப்புச் சங்க இலக்கியத்தில், அலர் தூற்றல் எனப்படும். அலர் எழுந்ததைத் தலைவியின் தோழி தலைவனுக்குத் தெரிவித்தாள். அதனால் அலர் அடங்கும்வரை தலைவியை வந்து சந்திப்பதை அவன் நிறுத்திக் கொண்டான்.

தலைவனைக் காணாது தலைவி தவித்தாள். தலைவியின் தவிப்பு அவளது தோழியையும் கலங்க வைத்தது. அன்புக்கும் உண்டோ அடைக்குந்தாழ்? அன்புக்கு உரியவளின் துயரைக் களைவதன்றோ உண்மையான நட்பு. தலைவியின் கவலையைத் தலைவனுக்கு எப்படியும் தெரிவித்துவிட வேண்டும் என்று தோழி துடித்தாள். தலைவன் சிலவேளை தலைவியைத் தேடி வரக்கூடும் என்று நினைத்து, அவன் முன்பு அவளைச் சந்திக்கும் இடத்துக்குச் சென்றுவரத் தொடங்கினாள்.

தலைவனும் தலைவியின் நினைவால் வருந்தினான். காதல் வியாதி பொல்லாதது. இந்தப் பொல்லாத வியாதிக்கு மருந்து ஒரு சந்திப்புத்தான். அவன் துணிந்து விட்டான். இராப் பொழுதில் தலைவியைக் காணப் புறப்பட்டான். தலைவியை நேரடியாகக் காண முடியாது. காண்பதற்கு அவளின் தோழியின் உதவி வேண்டும். நல்ல காலமாகத் தோழியும் எதிர்ப்பட்டாள்.

தலைவன்: என்னுயிர்க் காதலியைக் காண வேண்டும்.

தோழி: எவ்விதம் காண்பீர்? உங்கள் இருவரது தொடர்பும் உண்மையாகவே தேவையற்ற புறங்கூறலை (அலரை) எழுப்பியுள்ளது. இந்நிலையில் தலைவி உம்மைக் காண அஞ்சுகின்றாள்.

தலைவன்: இதற்கு என்ன செய்யலாம்?

தோழி: நீர் ஏற்கனவே முறையாக அவளை மணம் முடித்திருக்க வேண்டும். அதனைச் செய்யாது களவொழுக்கத்தில் காலத்தைக் கழித்ததாலன்றோ இந்நிலை ஏற்பட்டது?

தலைவன்: திருமணம் செய்ய நான் தயார்.

தோழி: அலர் எழுந்ததால் அவளது பெற்றோர் மனம் உடைந்துள்ளனர். நீர் ஒரு பொறுப்பற்ற மனிதர் என்பது அவர்களது கருத்தாகவுள்ளது. அவர்களைத் திருமணத்துக்குச் சம்மதிக்க வைக்கக் காலம் எடுக்கும். அதுவரை உம்மைக் காணாது தலைவி தரித்திராள். இப்பொழுதே உமது நினைவால் அவள் மிகவும் மெலிந்து விட்டாள்.

தலைவன்: அப்படியென்றால்...

தோழி: அப்படியென்றால்?

தலைவன்: அவளை என்னோடு அழைத்துக்கொண்டு செல்வதைவிட வேறு வழியில்லை.

தோழி: அதனை உடனே செய்க.

தலைவன்: அதற்கு அவள் சம்மதிக்க வேண்டுமே?

தோழி: உமது பிரிவால் அவள் உயிரையே விட்டுவிடுவாள் போலத் தெரிகின்றது. அத்தகையவள் உம்முடன் வர மறுப்பாளா, என்ன?

தலைவன்: தயவு செய்து எனது முடிவை அவளுக்கு எடுத்துக் கூறி ஆவன செய்யவும்.

தோழி: என்னால் முடிந்த அளவுக்குச் செய்வேன்.

தோழி விரைந்து சென்று விடயத்தைத் தலைவிக்குக் கூறினாள். 'தோழி, உன் தலைவரைச் சந்தித்தேன். அவர் உன்னைப் பிரிந்து இருக்கமாட்டாத கவலையால் மிகவும் வாடிப்போய் இருக்கின்றார். உன்னைத் தமது ஊருக்குக் கொண்டுசெல்ல விரும்புகின்றார். உனது கருத்து என்ன?' என்றாள்.

அது கேட்ட தலைவி, 'தோழி, நாணம் நம்மோடு மிக நெடுங்காலம் உடன் இருந்து வருந்தியது. இனிமேல் வெள்ளைநிறப் பூவினையுடைய கரும்பைத் தாங்கி நிற்கும் உயர்ந்த மணலையுடைய சிறிய கரை, இனிய நீர் நெருங்கி அடித்தலால் அழிந்து வீழ்ந்தாற்போல எனது நாணமும் தடுக்கும்வரையில் தடுத்து, காமம் மேன்மேலும் நெருக்க என்பால் நில்லாது போய்விடும். அவ்விதமான இரங்கத்தக்க நிலையில் நான் இருக்கின்றேன்' எனப் பதில் அளித்தாள்.

அளிதோ தானே நாணே நம்மோடு
நனிநீடு உழந்தன்று மன்னே இனியே
வான்பூங் கரும்பின் ஓங்குமணற் சிறுசிறைத்
தீம்புனல் நெரிதர வீய்ந்துக் காஅங்குத்
தாங்கும் அளவைத் தாங்கிக்
காமம் நெரிதரக் கைந்நில் லாதே. (குறுந்தொகை 149)

(அளிது- இரங்கத்தக்கது; உழந்தன்று - வருந்தியது; வான் - வெண்மை நிறம்; சிறை - கரை; நெரிதர - நெருங்கி அடித்தலால்; வீய்ந்து - அழிந்து; உக்காங்கு - வீழ்ந்தாற்போல; கைநில்லாது - என்பால் நில்லாது)

தலைவி தலைவனுடன் செல்லுதலால் தனது நாணம் அகலும் என்ற கவலையைத் தோழிக்குத் தெரிவிக்கின்றாள்.

இதுவரை அவளிடத்தில் காமமும் நாணமும் ஒத்த அளவினதாக இருந்தன. இனிமேல் காமத்துக்கு (அவர்களுடைய காதலுக்கு) நாணம் தோற்றுவிடும், நன்னீர்ப் பெருக்கத்தால் அழியும் மணற்கரையைப் போல.

பெண் ஒருத்தி திருமணம் ஆவதற்கு முன்னதாக ஒருவனுடன் ஓடிப்போவது நாணம் இல்லாத செயல். ஊரார் பழிச் சொல்லும் அவள் ஒரு நாணம் இல்லாதவள் எனப் பறைசாற்றும். இது குறித்து இந்தத் தலைவிக்குக் கவலைதான். எனினும், 'பரவாயில்லை, எனக்கு என் காதலரின் அன்பே முக்கியம். அதனால் நான் அவருடன் செல்லத் தயார்' என்னும் பொருள் அவளின் பதிலில் பொதிந்திருப்பதைக் காண்கின்றோம்.

இவ்விதம் தோழியின் உதவியுடன் பெற்றோருக்குத் தெரியாமல் தலைவனுடன் தலைவி ஓடிப்போகும் வழக்கமும் பழந்தமிழர் மத்தியில் இருந்தது. இதனை உடன்போக்கு என அகப்பொருள் ஆசிரியர் வழங்குவர்.



7

# அண்ணலும் நோக்கினான் அவளும் நோக்கினாள்

விசுவாமித்திரர், இராமன், இலக்குவன் மூவரும் மிதிலைக்குச் சனகமகாராசனின் வேள்வியைக் காணச் சென்றார்கள். மிதிலை நகரின் அரண்மனை வீதியாற் செல்கையில் கன்னி மாடத்தில் நின்ற சீதையை இராமன் காண நேர்ந்தது. அவளின் அழகு இராமன் கண்களைப் பறித்தன.

சீதையின் அழகை விவரிக்க இயலாது. பொன்னின் சோதி போன்ற அவளது அழகுக்கு ஒப்புவமையே கிடையாது. அழகான பெண்களுக்கு இலட்சுமியைத்தானே எல்லோரும் ஒப்பிடுவர்? இலட்சுமியான சீதைக்கு ஒப்பேது?

மதியைப் போன்ற முகம் என்றோ மதிமுகம் என்றோதான் அழகான பெண்களின் முகத்தை வருணிப்பது வழக்கம். அப்படியும் சீதையின் முகத்தை ஒப்பிடவோ உருவகஞ் செய்யவோ இயலாது. காரணம், அவளது பகல்போன்ற முகத் திலிருந்துதான் சந்திரனே ஒளிபெறுகின்றது.

இந்த ஒப்பற்ற அழகைக் கண்டு களிக்கும் அனுபவம், செஞ்சொற் கவி ஒன்றைப் படித்து இன்புறும் அனுபவத்துக்கு நிகரானது; தேவர் அளிக்கும் அமுதை உண்டு பெறும் தெய்வீக வாழ்வுக்குச் சரியானது.

சீதையின் பேரழகுக் காட்சியினை, கரை காணாத உமையாள் அழகினை ஒத்த மங்கையர், ‘இமையா நாட்டம் பெற்றிலம்’ என்கிறார். அதாவது, அவளது அழகு தங்கள் கண்களை இமையாக் கண்களாக்கி விட்டதாம். இமையாத கண்களை உடையவர் தேவர். அவளது தெய்வீக அழகைப் பார்ப்பவர் தேவர் ஆவாரோ?

சரி, அந்தர வானத்துத் தேவர் யாவரும் என்ன சொல்கிறார்கள்? ‘இரு கண்களால் அமையாது’ என்கிறார்கள். சீதையின் அழகைக் கண்டு களிக்க இரண்டு கண்கள் போதாவென அங்கலாய்க்கிறார்கள்.

அவளது அழகுக்கு அணிகலன் வேண்டியதில்லை. ஆனாலும் அரசகுமாரி அவற்றை அணியாமல் இருக்க முடியுமா, என்ன? அவள் அணிந்திருக்கும் அளவில்லாத அழகு மிகுந்த ஆபரணங்கள் அவளை அழகுபடுத்தவில்லை. மாறாக,

அவளது மேனியிலே இருப்பதால் அவை அழகு பெற்றன என்கிறார் கவிச் சக்கரவர்த்தி கம்பர். அவரது பாடல் இது:

இழைகளும் குழைகளும் இன்ன முன்னமே
மழைபொரு கண்ணிணை மடந்தை மாரொடும்
பழகிய எனினும் இப் பாவை தோன்றலால்
அழகெனும் அவையுமோர் அழகு பெற்றதே!

(மிதிலைக் காட்சிப் படலம்)

இத்தனை இணையற்ற அழகு இராமனைக் கவராமல் இருக்க முடியுமா? அண்ணல் நோக்கினான். அவளும் நோக்கினாள்!

எண்ணரு நலத்தினாள் இனையள் நின்றுளி
கண்ணொடு கண்ணிணை கவ்வி ஒன்றையொன்(று)
உண்ணவும் நிலைபெறாது உணர்வும் ஒன்றிட
அண்ணலும் நோக்கினான் அவளும் நோக்கினாள்.

(மிதிலைக் காட்சிப் படலம்)

நோக்குதல் என்னும் சொல்லைக் கவனித்தல் வேண்டும். பார்த்தல் என்று நாம் அதற்குப் பொருள் கொண்டாலும் இரண்டுக்கும் வேறுபாடு உண்டு. பார்த்தலிற் பெரிதும் கண்களே உள்ளன. நோக்குதலில் உள்ளமும் கலந்திருக்கின்றது.

நோக்குதல் இலக்கியங்களில் ஒரு காதற் சொல்லாகவே பயின்று வருகின்றது. காதல் உணர்வு ஒன்றிடப் பார்த்தல் நோக்குதலாகும்.

அண்ணலும் நோக்க அவளும் நோக்கிய அக்கணமே காதல் பிறந்துவிட்டது. பாசத்தாற் பிணித்து ஒருவர் உள்ளத்தை மற்றவர் உள்ளம் ஈர்த்தது. 'வரிசிலை அண்ணலும் வாட்கண் நங்கையும் இருவரும் மாறிப் புக்கு இதயம் எய்தினார்' என்பர் கம்பர். அதாவது, சீதையின் இதயம் இராமனிடமும் இராமனின் இதயம் சீதை யிடமும் புகுந்து விட்டன.

இதயங்கள் மட்டுமா இடம் மாறின?

'ஒருங்கிய இரண்டு உடற்கு உயிர் ஒன்று ஆயினர்' என்று கம்பர் இருவரது காதலுக்கும் உயிர் கொடுக்கின்றார். ஈருயிர்கள் ஒருயிர் ஆயின.

பொதுவாகக் காதல் மலரத் தொடங்கும் கட்டங்களில், காதலன் நோக்கும் பொழுது காதலி எதிர் நோக்குச் செய்வதில்லை. காதலிக்குரிய இந்த நாணத்தை

வள்ளுவர் பெருமான் இப்படிச் சொல்கிறார்:

*யான்நோக்குங் காலை நிலன்நோக்கும் நோக்காக்கால்*
*தான்நொக்கி மெல்ல நகும். (குறள் 110: 04)*

சீதையிடம் இந்த நாணத்தைக் காண முடியவில்லை.

இராமனின் அழகு அவளின் நாணத்தை விழுங்கிவிட்டிருத்தல் வேண்டும். மேலும் அவன் நடந்துகொண்டிருக்கிறான். இன்னுஞ் சில விநாடிகளில் அவன் அப்பால் சென்றுவிடுவான். சென்றுவிட்டால் அவனைப் பார்ப்பது கடினம். அந்நிலையில் வள்ளுவர் காட்டும் காதலிபோல சீதையால் நடந்துகொள்ள முடியவில்லை. ஒரே பார்வையில் இராமன் உள்ளத்தைக் கவர்ந்துவிட்டான். உள்ளம் இருந்தாற்றானே நாணம்? அவனது தோற்றத்திலே தன்னை மறந்து 'ஓவியப் பாவை' போன்று நிற்பவளிடம் நாணத்தை எப்படி எதிர்பார்ப்பது?

இதனிலும் மேலான ஒரு விளக்கத்தைக் கம்பர் தருகின்றார்.

பெண்களுக்கு நாணம் இயல்பானது. முன்பின் தெரியாத ஆடவனைக் காண்கையில் அது முன்னுக்கு நிற்கும். தெரிந்த ஆடவன் எனின் அது பின்னுக்குப் போய்விடும். அவ்வளவே. சீதையிடம் நாணம் நிறையவே இருக்கிறது. எனின், மிகவும் பழக்கமான இராமனைக் கண்டதும் நாணம் பின் சென்றுவிட்டது.

என்ன, இராமன் பழக்கமானவனா?

*கருங்கடல் பள்ளியிற் கலவி நீங்கிப் போய்ப்*
*பிரிந்தவர் கூடினாற் பேசல் வேண்டுமோ? (மிதிலைக் காட்சிப் படலம்)*

இராமன் திருமால் அவதாரம். சீதை திருமாலின் சக்தி இலட்சுமி. ஆக, இராமன் சீதை சந்திப்பு திருமால் இலட்சுமி சந்திப்பு ஆகின்றது.

அவ்வகையில் சீதை இராமனுக்கு மிகவும் பழக்கமானவள். திருப்பாற் கடலில் அன்று பிரிந்தவர் மிதிலையில் இன்று சந்திக்கிறார்கள். பிரிந்தவர் கூடினாற் பேச வேண்டியதில்லை.

உண்மைக் காதல் முன்வினைப் பயன் என்பதுவும் உண்மைதானோ?



8

# சீதா கல்யாணம்

மிதிலையர் கோமான் சனகர் மகா சூரர். எல்லா வித்தைகளையும் நன்றாகக் கற்றவர். பெரிய ஞானி. யாக பூமியில் கலப்பைக் கொழுமுகத்தில் சீதையை மகளாகப் பெற்று, பிள்ளையில்லாக் குறைபோக்கிய தவச்செல்வர். தசரதச் சக்கரவர்த்தியின் பெருமதிப்பைப் பெற்றவர்.

பெயர் பெற்ற அந்த மன்னருக்கு ஒரு பெரிய மனக்கவலை. அவரது மகளுக்கு இன்னமும் நல்ல வரன் கிடைக்கவில்லை. பல மன்னர் அவளை மணம் புரிவதற்கு முன்வந்தனர். ஆயினும் அவர்களில் எவருமே தெய்வீகப் பெண்ணான சீதாப் பிராட்டிக்கு ஏற்றவராக இருக்கவில்லை.

அதனால் மகளுக்கு சுயம்வரம் மூலம் தகுந்த வரனைத் தெரிவுசெய்யத் திட்டமிட்டார். சுயம்வர நிபந்தனை இதுதான்: 'எனக்கு வருணதேவர் பரிசாகத் தந்த உருத்திர வில்லை எந்த அரச குமாரன் வளைத்து நாண் ஏற்றுகின்றானோ அவனுக்குச் சீதை மனைவியாவாள்.'

சுயம்வர நாளைப் பல அரச குமாரர் ஆவலோடு எதிர்பார்த்திருந்தனர்.

விசுவாமித்திரர் சனகரின் வேள்வியின் பொருட்டு இராம, இலக்குமணர் சகிதம் மிதிலைக்கு வந்துகொண்டிருந்தார். அவர் மூலம் இராமனது வில்லாற்றலை அறிந்த சனகர் இராமன் உருத்திர வில்லை வளைத்து நாண் ஏற்றினால் துயர் தீரும் என்றார்.

விசுவாமித்திரர் யாவும் அறிந்த முனிவரல்லவா? அவர் மிதிலைக்கு வந்ததற்கு இராமன் சனகரது வில்லை வளைக்க வேண்டும் என்பதும் ஒரு காரணம்.

ஏற்பாடுகள் துரிதமாக நடைபெற்றன. அறுபதினாயிரம் யானையை ஒத்த மேனியரும் மலையெனத் திரண்ட தோளினரும் குன்றை ஒத்த வரி சிலையை அவைக்குக் கொண்டுவந்தனர். வில்லினைக் கண்ட வேந்தர் விதிர் விதிர்ப்பெய்தினர். வில்லின் வரலாற்றையும் பெருமையையும் சபைக்கு எடுத்துரைத்த சதானந்த முனிவர்,

அன்றுமுதல் இன்றளவும் ஆரும் இந்தச் சிலையருகு
சென்றுமிலர் போய் ஒளித்த தேர்வேந்தர் திரிந்துமிலர்
என்றுமினி மணமும் இலை என்றிருந்தோம் இவன் ஏற்றின்
நன்றுமலர்க் குழற் சீதை நலம் பழுதாகா(து)..... (கார்முகப் படலம்)

என்று முடித்தார்.

மன்னர் பலர் முயன்று மயங்கினர். விசுவாமித்திரர் முகக்குறிப்பால் அனுமதி வழங்க அண்ணல் இராமன் எழுந்தான். மங்கையர் மயங்க, நல்லோர் வாழ்த்த, உம்பர் உவப்ப, சிங்கம், விடை, மேரு, யானை இவையெல்லாம் நாணும்படியாக நடந்தான். எல்லோரும் ஆவலோடு இமை கொட்டாது பார்த்துக் கொண்டிருந்தனர்.

தடுத்தது இமையாமல் இருந்தவர் தாளில்
மடுத்ததும் நாண்நுதி வைத்ததும் நோக்கார்
கடுப்பினில் யாரும் அறிந்திலர் கையால்
எடுத்தது கண்டனர் இற்றது கேட்டார்! (கார்முகப் படலம்)

இமை கொட்டாது இருந்துமென்ன? இராமன் வில் வளைத்த, நாண் ஏற்றிய கடுப்பு வேகம் இருக்கிறதே, அது மிக மிக விரைவாக நடந்துவிட்ட ஒன்று. அந்தக் கணப்பொழுதில் சபையோர் எதையும் சரியாகப் பார்க்கவில்லை, பார்க்க முடியவில்லை. எடுத்ததைக் கண்டனர்... அவ்வளவுதான். பின்னர் வில்லொடிந்த ஓசையை மட்டுமே கேட்க முடிந்தது.

மற்றவர் எடுக்கவே முடியாத வில்லை இராமன் எடுத்தான். மற்றவர் வளைக்கவே முடியாத வில்லை அவன் வளைத்தான். மற்றவர் ஏற்றவே முடியாத நாணை அவன் ஏற்றினான்.

இராமன் நாணை மட்டும் ஏற்றவில்லை. வில்லையும் அன்றோ ஒடித்து விட்டான். விண்ணவர் பூமழை சொரிந்தனர். மேகம் வான் மழை பொழிந்தது. மிதிலை மக்களின் உவகை கரைபுரண்டது. புயல் இவன் மேனி என்பார்! மானிடன் அல்ல என்பார்!

காதல் வயப்பட்டிருந்த சீதாப்பிராட்டியின் உள்ளம் உருகிக் கரைந்தது.

களிபேருவகை அடைந்த சனகர், தசரத மன்னருக்குச் செய்தி அனுப்பினார். ஓலையைப் படித்த தசரதர் தோள்கள் மலையென வளர்ந்தன. அயோத்தி எழுச்சி பெற்றது. தசரத மன்னர் பரிவாரங்களுடனும் பெருஞ் செல்வங்களுடனும் மிதிலைக்கு வந்துவிட்டார்.

சனகர், எல்லோரையும் முறைப்படி வரவேற்றுத் திருமணத்துக்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்தார். திருமண மண்டபம் பொன்மலைபோன்று காட்சி அளித்தது. தம்பியர் சகிதம் கருணையே உருவமான இராமன் மண்டபத்துள் வந்தான். சீதையும்,

அலை கடல் பிறந்து பின்னை அவனியில் தோன்றி, மீள
மலையிடை உதிக்கின்றாள்போல்

மண மண்டபத்தை அடைந்தாள். மணத் தவிசினில் இராமனும் சீதையும் ஒன்றிய போகமும் யோகமும் போல் இருந்தனர். வசிட்டர் திருமணச் சடங்கை நடத்தினார்.

சனகர், 'பூமகளும் பொருளும் என நீ என் மகளொடு பொருந்தி வாழ்க' எனச் சீதையின் மெல்லிதழ் போன்ற கைகளை இராமனின் தடக்கையில் வைத்தார். வாழ்த்தொலிகள் தொடர்ந்தன. மணமக்கள் தீ வலம் வந்து, அம்மி மிதித்து அருந்ததி காணும் காட்சியுடன் திருமணச் சடங்கு நிறைவேறியது.

வால்மீகி இராமாயணத்தில் சனகர் தமது தவமகளை இராமனிடம் ஒப்படைக்கையில்,

இயம்ஸிதா மம ஸநிதா ஸஹ தர்மசரீ தவ
ப்ரதீச்ச சைனாம் பத்ரம்தே பாணிமா க்ருண்ணீஷ்வ பாணிநா
பதிவ்ரதா மஹா பாகா சாயா இவானுகதா ஸதா

(இராமாயணம் - ராஜாஜி)

என்று கூறியதாக வருகின்றது. 'மகனே, இதோ என் மகள் சீதை. நீ செல்லும் தரும நெறியில் உன்னுடன் துணையாகச் செல்வாள். கையைப் பிடித்துப் பெற்றுக் கொள்வாய். கற்பைக் காத்து மிக பாக்கியவதியாக உன் நிழலைப் போல் உன்னைப் பற்றி நிற்பாள். ஒருபோதும் விட்டுப் பிரிய மாட்டாள். மங்கலம் ஆகுக' என்பது இதன் பொருள்.

இத்திருவார்த்தைகள் வடநாட்டுத் திருமண வைபவங்களில் மணமகளைத் தாரைவார்த்துக் கொடுக்கையில் மந்திரமாக இன்றும் ஓதப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.



9

# பூம்புகார்த் திருமணம்

காவிரி ஆறு கடலோடு சங்கமிக்கும் இடத்தில் அமைந்திருப்பது காவிரிப்பூம் பட்டினம். புகார் நகரம் என்றும் இது அழைக்கப்படும். புகார் நகரம் சோழவள நாட்டின் தலைநகரம். உயர்ந்தோர் வாழ்வதால் குறைவொன்றும் இல்லாத தனிச் சிறப்பும் நீள் போக வாழ்வும் கொண்ட வளநகரம்.

இத்தகைய புகழ் மிகுந்த புகார் நகரத்திலே வான் மழையை ஒத்த வள்ளல் ஒருவன் இருந்தான். பெயர் மாநாய்கன்.

அவனது குலம் தழைக்கப் பிறந்தாள் ஒரு பூங்கொடி. வானத்து வல்லிக் கொடியை ஒத்த அந்தப் பொன்னொளிக்கு வயது பன்னிரண்டு ஆகிவிட்டது.

> செந்தாமரைப் பூவிலே நிறைந்திருக்கும் திருமகளைப் போன்று எல்லோரும் போற்றும் அழகு மிகுந்தவள்

என்றும்

> தீது இல்லாத வடமீனின் திறம் இவள் திறம்

என்றும் மாதர் தொழுது ஏத்தும் பெருங்குணம் படைத்தவள்.

அவள் பெயர் கண்ணகி.

அதே பட்டினத்திலே சோழ மன்னனால் தலைமைக் குடியென உயர்த்தி வைக்கப்பட்ட பெருங்குடி மரபிலே வந்தவன் மாசாத்துவான். வாணிபத்தால் உயர்ந்து ஓங்கு செல்வத்தான்: தான் பெருக்கும் செல்வத்தைப் பிறருக்குக் கொடுத்து உதவும் பெருமனத்தான். சங்கநிதி பதுமநிதிகளுக்குக் கிழவனான குபேரனை ஒத்த அந்த வள்ளலுக்கு ஒரு மகன்.

அவன் பெயர் கோவலன்.

கோவலனுக்குப் பதினாறு வயது ஆகிவிட்டது. அவன் வாணிபத் துறையில்

பெரும் புகழை அடைந்தவன். மதிமுக மடவார் நெஞ்சங்களில் நடமாடுகின்றவன். அவர்கள் தமது ஆயத்திலே, பண்ணினும் இனிய மொழியினாலே, *கண்டு ஏத்தும் செவ்வேள் இவன்* என்று புகழும் காதல் பேச்சுகளுக்கு எல்லாம் உரிமையானவன்.

கோவலனுக்கும் கண்ணகிக்கும் ஒரு பெருநாளிலே திருமணம் செய்து வைக்கப் பெற்றோர் விரும்பினர். மணவினைச் செய்தியை அழகிய அணிகலன்களை அணிந்த பெண்களை யானையில் இருத்தி நகர் எங்கும் அறிவித்தனர்.

அதன்வழி, திருமண ஏற்பாடுகள் செய்யப்பட்டன. முரசுகள் கொட்டின. மத்தளங்கள் அதிர்ந்தன. சங்குகள் முழங்கின. அரசன் ஊர்வலம்போல, வெண் குடைகளின் மத்தியில் மங்கல அணியும், புகார் நகரின் வீதிவழியாக எடுத்துச் செல்லப்பட்டது.

திருமண வைபவம் கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது. அந்தக் காட்சியின் மாட்சியை இளங்கோ அடிகள் சுருக்கமாக இவ்விதம் விளக்குகின்றார்:

மாலைதாழ் சென்னி வயிரமணித் தூண் அகத்து
நீல விதானத்து நித்திலப்பூம் பந்தர்க்கீழ்
வான் ஊர் மதியம் சகடு அணைய வானத்துச்
சாலி ஒருமீன் தகையாளைக் கோவலன்
மாமுது பார்ப்பான் மறைவழி காட்டிடத்
தீவலம் செய்வது காண்பார்கண் நோன்பு என்னை!

திருமண மண்டபம், மாலைகள் தொங்கவிடப்பெற்ற உச்சியினையுடைய வயிரமணித் தூண்களைக் கொண்டது. அந்த அழகிய மண்டபத்துள் நீலப்பட்டு விதானத்தின் கீழ், அழகிய முத்துப் பந்தர் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. அதுவே மணவறையாகும். அந்த முத்து மணவறையில் சந்திரன் உரோகிணியைச் சேரும் முகூர்த்த நேரத்தில், அருந்ததியை ஒத்த கண்ணகியைக் கோவலன் மணந்து கொள்கின்றான். திருமணச்சடங்கை அனுபவம் முதிர்ந்த அந்தணர் வேதம் ஓதி நடத்தி வைக்கின்றார்.

கோவலன் கண்ணகியை மணந்து, தீவலம் வந்த காட்சியைக் கண்டவர் கண்கள் செய்த தவந்தான் என்னேயோ என்று இளங்கோ அடிகள் வியப்புக்குறியிலே முடிப்பதற்குக் காரணம் இருக்கிறது.

கோவலன் கண்ணகி திருமணம் சாதாரண வைபவம் அன்று. அரச திருமணம் போன்று நடந்த செல்வந்தர் திருமணம். பூம்புகார் மக்கள் அதுவரை கண்டிராத கண்கொள்ளாத் திருமணம்.

அதுபோன்ற பெருமணம் இனிமேல் எவருக்காவது புகார் நகரத்தில் நடக்குமோ என்னவோ? அதனாலே அந்த அரிய திருமணத்தைக் கண்டவர் தவஞ் செய்தவராகின்றார்.

திருமணத்தின் பெருஞ் சிறப்புகளுக்கான முத்திரை மேலும் பதிக்கப் படுகின்றது.

வாசனைப் பொருட்கள், நறுமலர்கள், சாந்து வகைகள், மணப்புகைகள், கவர்ச்சியான மாலைகள், சுண்ணப் பொடிகள், விளக்குகள், நல்ல கலன்கள், விரிந்த தாழிகள், முளைக் குடங்கள், நிறைகுடங்கள் என்பவற்றைத் தாங்கியவாறு பலவகைப் பெண்கள் மணப்பெண்ணைச் சூழ்ந்தனர்.

அவர்களுடன் அழகான அணிகலன்களைப் புனைந்துகொண்டும் பேசிக் கொண்டும் பாடிக்கொண்டும் நாணம் மிக ஓரக் கண்களாற் பார்த்துக்கொண்டும் மேலும் பல பெண்கள் சேர்ந்து கொண்டனர்.

அவ்விதமான மலர் சூடப்பெற்ற, விரிந்து வளர்ந்த கூந்தலையுடைய, அழகிய பொற் கொடிகள் போன்ற பெண்கள் பலரும்,

காதலற் பிரியாமல் கவவுக் கை நெகிழாமல்
தீது அறுக

(காதலராகி நீவிர் ஒருவரையொருவர் என்றும் பிரியாது, தழுவிய கைகள் நெகிழாது, தீமைகள் எதுவும் அணுகாது இன்புற்று வாழ்வீராக!)

என மணமக்களை வாழ்த்தி மலர் தூவினர்.

மேலும் "இமயத்துக்கு அப்பாலும் இப்பாலும் எங்கும் புலிக் கொடியினை ஏற்றியவனும், போரிலே மேம்பட்டு விளங்கும் சினம் மிகுந்த வேலினை உடையவனுமாகிய கரிகாலன், எப்பாலும் தான் ஒருவனே ஆகித் தன் ஆட்சிச் சக்கரத்தைச் செலுத்தி உயர்வானாகுக!" என்று சோழனையும் வாழ்த்தி, இந்த அழகிய உலகின் கண்ணே இருக்கின்ற ஓர் அருந்ததிபோன்ற கற்பிலே சிறந்த கண்ணகியை, மங்கலக் கட்டில் மீது மகிழ்ந்து ஏற்றினர்.

இதுவரை மூன்றுமுறை அருந்ததியார் கண்ணகிக்கு ஒப்பிடப்பட்டிருக்கின்றார். அருந்ததி வசிட்டமா முனிவரின் மனைவி, சிறந்த கற்பரசி. சிலப்பதிகாரமும் கற்பின் மகிமையைக் காட்டும் காப்பியமாதலால் அருந்ததியை அடுத்தடுத்து எமக்கு நினைவூட்டியிருக்கின்றார் இளங்கோ அடிகள்.



10

# மாசறு பொன்னே!

புகார் நகரம் உலகம் புகழும் உன்னதமான ஓர் அனைத்துலகத் துறைமுகம். புதுப்புது நாடுகள் எல்லாம் ஒன்றுகூடி வந்தாற்போன்று பல நாட்டுப் பண்டங்கள் பலவற்றைக் கொண்டு பொலிந்து விளங்கியது அது. அதன் செல்வச் சிறப்புக்குக் காரணமானவர் வணிகர். வணிகச் செல்வர், குல மரபிற் குறைவுபடாத பண்புடையவராகத் திகழ்ந்தனர்.

அத்தகைய செல்வச் சிறப்பும் பண்புச் சிறப்பும் உள்ள குலத்திலே தோன்றியவர் தாம் துருவ நட்சத்திரம் போன்ற கண்ணகியும் அவளது காதற் கணவன் கோவலனும்.

அவர்கள் இருவரும் தமது ஏழடுக்கு மாளிகையின் நான்காவது மாடியில் அழகிய வேலைப்பாடுகளோடு கூடிய மணிக்கால்களைக் கொண்ட கட்டிலிலே மகிழ்ந்திருந்தனர்.

அவ்வேளை பலவகை மலர்களையும் தேடி, மகரந்தங்களை உண்டு மயங்கிய வண்டுகளுடன் இனிய தென்றல் சாளரத்தின் ஊடாக வந்து அவர்களைத் தழுவியது.

தென்றல் அவர்களை வயப்படச் செய்தது.

அங்கிருந்து அவர்கள் தமது மாளிகையின் நிலா முற்றத்துக்கு ஏறிச் சென்றனர். முற்றத்துக் கட்டிலின் மீது இருவரும் ஒன்றாக இருந்த காட்சி, ஞாயிறும் திங்களும் ஒருங்கே கூடியிருந்ததைப் போலக் காணப்பட்டது.

ஒருவரையொருவர் தழுவினர். அவன் மார்பை அணிசெய்த தாரும், அவள் மார்பிலே விளங்கிய மாலையும் தம்முள் கலந்து மயங்கின.

தழுவிய கைகளைச் சற்றே விலக்கி ஆராத காதலுடன் தன் மனைவியின் மதி முகத்தினைக் கோவலன் நோக்கினான். அவளது அழகிலிருந்து ஊற்றெடுக்கத் தொடங்கியது அவனது அன்புத் தமிழ்.

“சிவபெருமானின் சடையிலிருக்கும் அழகிய பிறைத் திங்களை உன் நெற்றியில்



காண்கிறேன். உருவமில்லாத காமனின் ஒப்பற்ற கரும்பு வில்லினை உன் கரிய இரு புருவங்களில் காண்கிறேன். இந்திரன் தனது வச்சிரப்படையை உனது இடையாகுமாறு செய்தானா, என்ன?

"முருகப்பெருமான் என்னுடன் போர் செய்வதற்கு எவ்வித காரணமும் இல்லை. ஆனால், அவன் தன் வேலினை உனக்குக் கண்களாகத் தந்து என்னுடன் போர் செய்ய வைத்தது ஏன்?

"நீல மயில் உன் சாயலுக்குத் தோற்றுக் கானகம் சென்றுவிட்டதையும் அன்னம் உனது மென்னடையைக் கண்டு நாணித் தாமரைத் தடாகத்தில் ஒளிந்து கொண்டதையும் நீ அறிவாயா?

"மாதரசியே, சிறிய பசுங் கிளி உன்னைவிட்டு அகலாது இருப்பதன் காரணம் யாது தெரியுமா? உனது இனிமையான பேச்சினை கேட்டுத் தானும் உன்னைப் போலப் பேசிப் பழக வேண்டும் என்பதற்காகவே உன் மலர்க் கையைவிட்டுப் பிரியாது உன் வாயிதழ்களைப் பார்த்த வண்ணம் இருக்கின்றது.

"நறுமலர்க் கோதையே! உனது அழகைப் போற்றும் உனது ஏவல் மகளிர், குறை வில்லாத கொள்ளை அழகு இயற்கையாகவே உனக்கு இருக்கவும், ஏராளமான அணிகலன்கள் வேறு அணிவித்துள்ளனரே! எதற்காக?

"அடர்த்தியான உனது கூந்தலில் ஒரு சில மலர்களை வைத்தாற் போதாதா? இதழ் விரிந்த மாலைகளையும் சூட்டியிருக்கின்றனரே! அவர்களுக்கு என்னதான் ஆயிற்று?

"அகிற்புகை வாசனையைக் கூந்தலுக்கு ஊட்டுதல் நல்லதுதான். ஆனால், கத்தூரிச் சாந்தையும் தடவியுள்ளனரே. ஏன்?

"அழகிய உனது முலைத் தடங்களின் மீது சந்தனக் கோலம் போட்டதோடு நின்று விடாது, ஒற்றைவட முத்து மாலையையும் அல்லவோ அணிவித்துள்ளனர்!

"உனது மதி முகத்தில் முத்து முத்தாக வியர்வைத் துளிகள் அரும்பவும் உனது சிறிய இடை ஒடிந்துவிடுவதுபோல வருந்தவும் இவ்விதம் எல்லாம் ஏன் செய்தார்கள்? அவர்களுக்கு நேர்ந்ததுதான் என்ன?"

மாசறு பொன்னே வலம்புரி முத்தே
காசறு விரையே கரும்பே தேனே
அரும்பெறற் பாவாய் ஆருயிர் மருந்தே
பெருங்குடி வணிகன் பெருமட மகளே

*மலையிடைப் பிறவா மணியே என்கோ*
*அலையிடைப் பிறவா அமிழ்தே என்கோ*
*யாழிடைப் பிறவா இசையே என்கோ*
*தாழ் இருங் கூந்தல் தையால் நின்னை!*

என்றெல்லாம் மலர்மாலையை அணிந்த கோவலன் அளவில்லாத கட்டுரைகள் பலவற்றால் தனது மனைவியின் அழகைப் பாராட்டி, அவளோடு கூடி இன்ப வெள்ளத்தில் திளைத்தான்.

கண்ணகி அறநெறியாளரைப் பேணுவதிலும் விருந்து ஓம்புவதிலும் வல்லவள். அவள் தனது கணவனோடு இல்லறம் நடத்திப் பலவகைச் செல்வங்களுடன் சிறப்புற்று வாழ்வதைக் காண விரும்பினாள் பண்பு மிக்கக் கோவலனின் தாயார்.

அவர்கள் சகல வசதிகளுடனும் தனிக்குடும்பம் நடத்துவதற்கு வேண்டிய ஏற்பாடுகளை எல்லாம் செய்தாள். தம்பதிகளும் அவ்விதமே தனிமனை புகுந்து இல்லற வாழ்வில் ஈடுபட்டனர்.

கண்ணகி கோவலன் இன்ப வாழ்க்கையை இளங்கோவடிகள் இவ்விதம் தொகுத்துக் கூறுகின்றார்:

*தூமப் பணிகள்ஒன்றித் தோய்ந்தா லெனஒருவார்*
*காமர் மனைவியெனக் கைகலந்து நாமம்*
*தொலையாத இன்பமெலாம் துன்னினார் மண்மேல்*
*நிலையாமை கண்டவர்போல் நின்று.*

வாழ்க்கை நிலையாமையை உணர்ந்தவர்கள் போல், கோவலனும் கண்ணகியும் பாம்புகள் ஒன்றையொன்று பிணைந்து இன்பம் துய்ப்பதுபோலவும் காமனும் இரதியும் ஒருவரையொருவர் தழுவிக் கலப்பதுபோலவும் கூடி மகிழ்ந்து வாழ்க்கையின் இன்பங்கள் யாவற்றையும் இடையறாது அனுபவித்து வாழ்ந்து வந்தனர்.

# 11

# கற்பு வாழ்க்கை

இளங்கோவடிகள் கோவலன் கண்ணகி திருமணத்தால் கற்பு வாழ்க்கையின் முக்கியத்துவத்தை வலியுறுத்துகின்றார்.

அவர் காலத்திலும் அவருக்கு முன்னரும் பலவகையான மணமுறைகள் தமிழர் மத்தியில் நிலவின. காதல் வாழ்வைத் தமிழர் பெரிதும் போற்றினர். தலைவனும் தலைவியும் சந்தித்து, பேசி, பழகிக் காதல் கொண்ட கதைகள் சங்க இலக்கியங்களில் ஏராளம்.

ஓர் இளைஞன் (தலைவன்), கன்னி ஒருத்தியை (தலைவியை) காணவோ பேசவோ அக்காலத்தில் தடைகள் ஏதும் இருக்கவில்லை. தடைகள் இல்லாதபோதும் சந்திப்புகள் பெரிதும் பெற்றோருக்குத் தெரியாமலேயே நடைபெறும். இது களவு எனப்பட்டது. இவ்வித சந்திப்புகள் பூத்தரு புணர்ச்சி, புனல்தரு புணர்ச்சி, களிறுதரு புணர்ச்சி என மூவகைப்படும்.

தலைவி மலர் கொய்யச் செல்கையில் தலைவனைக் கண்டு காதல் கொள்ளின் அது பூத்தரு புணர்ச்சி எனப்பட்டது.

குளத்தில் நீர் எடுக்கையில் அல்லது அருவியில் நீராடுகையில் ஏற்படும் சந்திப்புக் காதலாக வளரின் அது புனல்தரு புணர்ச்சியாகக் கருதப்பட்டது.

காட்டில் விறகு பொறுக்கச் செல்கையில் அல்லது தினைப்புனத்தைக் காத்து நிற்கையில் யானையைக் கண்டு அலறும் பெண்ணைக் காளையர் காப்பாற்றுவதுண்டு. களிறு காரணமாகக் காதல் வளரின் அது களிறுதரு புணர்ச்சியாகக் கொள்ளப்பட்டது. முருகன் வள்ளி காதல் இத்தகைய புணர்ச்சியாகும்.

புணர்ச்சி என்பது உள்ளப் புணர்ச்சி. உள்ளப் புணர்ச்சியின்றிக் காதல் உணர்ச்சி இல்லை. உள்ளப் புணர்ச்சிக்குப் பின்னரே உடற் புணர்ச்சி இடம்பெறும்.

தான் விரும்பும் பெண்ணை மணம் முடிப்பதற்கு ஆடவனுக்கு உரிமை இருந்தது. அதுபோலவே மகள் விரும்பும் ஆடவனைப் பெற்றோர் அவளுக்கு



முடித்து வைத்தனர். சடங்கோடு பொருந்திப் பெற்றோர் தலைவியைக் கொடுப்பத் தலைவன் மணஞ்செய்தல் கற்பு மணம் எனப்பட்டது.

பெற்றோர் திருமணத்துக்குச் சம்மதியாதவிடத்து, தலைவி பெற்றோரைத் துறந்து தலைவனுடன் செல்வதும் உண்டு. அது உடன்போக்கு எனப்பட்டது.

தலைவன் தனது ஊரில் தலைவியைத் திருமணம் செய்து தனிக்குடித்தனம் நடத்துவான். இது,

*கொடுப்போர் இன்றியும் கரணம் உண்டே* *(பொருள் 143)*

என்னும் தொல்காப்பியர் கூற்றால் தெரியவருகின்றது.

பெற்றோரும் உற்றாரும் அறியாது நடக்கும் களவு வாழ்வு, நெடுங்காலமாக ஏற்றுக்கொள்ளப்பட்டு வந்ததாயினும் காலப்போக்கில் அது மதிப்பு இழக்கத் தொடங்கியது. இந்த வாழ்க்கை முறையில், தலைவன் வாக்குத் தவறுதல், உடற் புணர்ச்சியின் பின் தலைவன், தலைவியைக் கைவிடுதல் போன்ற நேர்மையீனங்கள் மலிந்து சமூக உறவைப் பாதித்ததால் கற்பு மணம் தோன்றலாயிற்று.

*பொய்யும் வழுவும் தோன்றிய பின்னர்*
*ஐயர் யாத்தனர் கரணம் என்ப* *(பொருள். கற்பு 4)*

என்னும் தொல்காப்பிய அடிகள், கற்பு மணம் பிரபலியமானதற்கான காரணத்தை விளக்குகின்றன. கரணம் என்பது சடங்கு. சடங்கில் பெரியோர் தம்பதிகளுக்கு வாழும் வகைபற்றி அறிவுறுத்துவர். தலைவன் தலைவியைப் பிரியாது இருக்க வேண்டும். தலைவி, தலைவனைப் பேணவேண்டும் என்றெல்லாம் கற்பிப்பர். அதனாலேயே இது கற்பு மணம் எனப்பட்டது. பெரியோர், திருமணத்தின் போது சொன்ன சொல்லைக் கடைப்பிடித்து வாழ்தலே கற்பு. இதனாலேயே *கற்பெனப்படுவது சொற்றிறம்பாமை* என்றார் அவ்வைப் பிராட்டியார்.

சொல் திறம்பாமை, ஆண் பெண் இருபாலார்க்கும் பொது. ஆயினும் திறம்பாமைக்கு மிகுந்த மனத்திடம் வேண்டும். *கற்பெனும் திண்மை* என்கிறார் வள்ளுவர் பெருமான். திண்மை மனத்திடம். இந்த மனத்திடம் பெண்களுக்கே அதிகம் என்பதனைச் சிலப்பதிகாரம் காட்டுகின்றது. கோவலன் திறம்பினான். ஆனால் கண்ணகி திறம்பவில்லை.

கணவன் திறம்பினாலும், திரும்பி வந்த கணவனை அன்புடன் வரவேற்று வாழ்க்கையை நடத்தவே அவள் விரும்பினாள். சிலம்பை விற்றுப் பொருள் பெறுக

என்று காற்சிலம்பையும் கழற்றிக் கொடுத்தாள். விதி விளையாடியது. அவள் நினைத்தது நடக்கவில்லை.

கணவன் கொலையுண்டான். பாண்டியன் இறைமுறை பிழைத்தான். தானே வழக்காடத் துணிந்தாள். அடங்கி ஒடுங்கி இருந்தவள் வெகுண்டு நிமிர்ந்து எழுந்தாள். பாண்டிய மன்னன் அவைக்குத் தானே துணிந்து சென்று வழக்குரைத்துத் தன் கணவன் தவறு செய்திலன் என்பதை நிரூபித்தாள்.

யானோ அரசன் யானே கள்வன்
மன்பதை காக்கும் தென்புலம் காவல்
என்முதற் பிழைத்தது கெடுக என் ஆயுள்

(சிலப்பதிகாரம்: வழக்குரை காதை)

என்று புலம்பியவாறு தென்னவன் இறந்தான்.

கற்புக்கு ஒரு சக்தி உண்டு. அந்தச் சக்தியால் மதுரையை எரிப்பேன் என்று வஞ்சினம் கூறுகின்றாள் கண்ணகி.

மட்டார் குழலார் பிறந்தபதிப் பிறந்தேன்
பட்டாங்கு யானும் ஓர் பத்தினியே ஆமாகில்
ஒட்டேன் அரசொடு ஒழிப்பேன் மதுரையும்

(சிலப்பதிகாரம்: வஞ்சினமாலை)

என்பது அவளின் வஞ்சினம்.

அப்படி எரிக்கின்ற பொழுதும் அறத்தினின்று பிறழாதவாறு அவளது கற்புநெறி பார்த்துக்கொள்கிறது. பார்ப்பார், அறவோர், பசு, பத்தினிப் பெண்கள், முதியவர், குழந்தைகள் என்னும் இவரைக் கைவிட்டுத் தீயவர் பக்கமே சேர்க என்று தீக்கடவுளை ஏவுகின்றாள் கண்ணகி.

தீக்கடவுள் என்ன, மழைக் கடவுளும் கற்புக்கு ஏவல் செய்யும்.

தெய்வம் தொழாஅள் கொழுநன் தொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் மழை (குறள் 6: 5)

என்று வள்ளுவரும் கற்புக்கு இருக்கக்கூடிய ஆற்றலை வலியுறுத்துகின்றார்.

கண்ணகிக்கு முன்னரும் அருந்ததி, ஆதிமந்தியார் முதலாய கற்பரசிகளின்

கதைகள் தமிழ் மக்கள் மத்தியில் பெரிதும் வழங்கப்பட்டு வந்ததெனினும், கண்ணகி கதையே கற்பு வாழ்க்கையின் மேன்மையை ஊன்றி வலியுறுத்தியது எனலாம். கண்ணகியின் கற்பு தமிழர் பண்பாட்டின் உயிர் நாடியாகிவிட்டது.

ஒருவனோடு மட்டும் உறவு வைத்துக் கொள்ளும் உறுதிப்பாடு அல்லது பிறர் மனம் புகாத பெற்றி, மங்கையரின் தலையாய ஒழுக்க நெறியாயிற்று. ஒருவனுக்கு ஒருத்தி என்னும் கட்டுப்பாட்டுக் கொள்கை இல்லறத்தை இணையற்ற முறையில் வளர்த்தெடுத்தது.

இளங்கோ அடிகளும் பரத்தையர் குலத்தில் தோன்றிய மாதவியை கற்பவதியாகப் படைத்திருப்பதைப் பார்க்கின்றோம். ஆண் பெண் உறவில் ஒரு கட்டுப்பாடு இருத்தல் வேண்டும் என்பது அவரது கருத்து. பாலியல் உறவில் விலங்குகள் காட்டும் கட்டுப்பாடு அதிகம். மனிதர் பலர் விலங்குகளிலும் கேவலமாக நடக்கின்றனர். கட்டுப்பாடு இல்லாத உறவினால் பாலியல் நோய்கள் பல பரவி இன்ப வாழ்வுக்குச் சாவு மணி அடித்துக் கொண்டிருக்கின்றன இக்காலத்தில்.

எமது முன்னோர் வெள்ளம் வருமுன்னே அணையைக் கட்டிவிட்டார்கள். கற்புநெறி தமிழ் மக்களின் இல்லற வாழ்வைக் காப்பாற்றி வருகின்றது.

# 12

# கணவனைப் பேணும் மனைவி

தலைவன், அறிவும் ஆற்றலும் மிகுந்தவன்; அருஞ் செயல்களால் புகழ் பெற்றவன்; குணநலமும் கொடைவளமும் உள்ளவன்; பழி பாவங்களுக்கு அஞ்சுபவன்; கொண்ட குறிக்கோளை மறவாதவன்; துணிவு மிகுந்தவன்.

தலைவி, அன்புள்ளவள்; சொல் திறம்பாத மனத்திட்பம் மிகுந்தவள்; நற்பால் ஒழுக்கம், பொறை, நிறை, விருந்து புறந்தருதல், சுற்றம் ஓம்பல் முதலியவற்றில் சிறந்தவள்.

இருவரும் காதல் வயப்பட்டுக் கற்பு மணம் செய்துகொண்டனர்.

திருமணத்தைத் தொடர்ந்து அவள் அவனுடன் தனிக்குடித்தனம் நடத்தச் சென்று விட்டாள். சென்றநாள் முதலாக அவளின் தாய்க்கு நிம்மதி இல்லை. 'மகளைச் செல்லமாக வளர்த்துவிட்டேன். சரியாகச் சமைக்கக்கூடத் தெரியாது. எப்படித்தான் கணவனுக்குச் சமைத்துப் போடுகிறாளோ' என்றெல்லாம் தாய் கவலை கொள்ளத் தொடங்கினாள்.

தாயின் கவலையைப் போக்க நினைத்தாள் செவிலி. செவிலி என்பவள் அவளது தோழி. தலைவியின் வளர்ப்புத்தாய்.

செவிலி, தலைவியிடம் மிகுந்த அன்பு கொண்டவள். தலைவி தலைவன் காதலுக்கு உதவியாக இருந்தவள். தலைவி தனது தாயிடம் கூறிக்கொள்ள முடியாத அந்தரங்கமான பல விடயங்களைச் செவிலியிடமே கூறுவது வழக்கம். தலைவி யின் காதல் பற்றிப் பெற்றோருக்குக் கூறித் திருமணத்துக்கு வழிவகுத்தவளும் செவிலிதான்.

தனது தோழியின் கவலையைக் குறிப்பால் உணர்ந்து கொண்டாள் செவிலி. எனினும் அவள் அதுபற்றிப் பெரிதும் கவலைப்படவில்லை. தலைவியை வளர்த்தவள் என்ற வகையில் அவளின் திறமைகளைச் செவிலி நன்கு அறிவாள். தலைவிக்கு ஓரளவு உணவு சமைக்கத் தெரியும் என்பதும் அவளுக்குத் தெரியும். சமைக்கப் பழக்கியவளும் அவள்தானே!

இருந்தாலும், உணவு ஆக்கத் தெரியும் என்பது வேறு, கொண்ட கணவன் விரும்பி உண்ணும் வகையில் சமைப்பது என்பது வேறு.

சுவை என்பது நாவுக்கு நா வேறுபட்டதல்லவா?

போய்த்தான் நேரிலே பார்த்து வருவோமே என்று புறப்பட்டுவிட்டாள் செவிலி. தலைவியும் தலைவனும் இல்லறம் நடத்தும் மனைக்குச் சென்று, அங்கு தலைவி அதி கவனத்துடன் சமைத்துத் தன் கணவன் உவக்கும்படி உணவிட்டதையும் பிற சிறப்புகளையும் கண்டு அவள் மகிழ்ச்சியுற்றாள்.

திரும்பிவந்து தான் நேரிலே கண்டதைத் தன் தோழிக்கு (தலைவியின் தாய்க்கு) அவள் கூறும் விதம் இது:

தோழி, உன் மகளுக்குச் சமைக்கத் தெரியாது என்றா கவலைப்படுகிறாய்? அவள் புளிக் குழம்பு சமைத்து அன்போடு தன் கணவனுக்கு உணவு பரிமாறியதைப் பார்த்தேனே. கணவன் சமையல் பிரமாதம் என்று சொல்லிச் சாப்பிட்டான். அவள் நாணத்தால் எதுவுமே பேசாது உள்ளார மகிழ்ந்தது மெல்லிதாக முகத்தில் தெரிந்தது. எப்படிச் சமையல் செய்தாள் என்று கேட்கிறாயா?

முளிதயிர் பிசைந்த காந்தள் மெல்விரல்
கழுவுறு கலிங்கம் கழாஅது உடீஇக்
குவளை உண்கண் குய்ப்புகை கமழத்
தான்துழந்(து) அட்ட தீம்புளிப் பாகர்
இனிதெனக் கணவன் உண்டலின்
நுண்ணிதின் மகிழ்ந்தன்று ஒண்ணுதல் முகனே. (குறுந்தொகை 167)

அவள் நன்கு திரண்டு பதமுற்ற தயிரை எடுத்தாள். அதனைத் தனது காந்தள் மலர்போன்ற மெல்லிய விரல்களால் நன்றாகப் பிசைந்து புளிக்குழம்பு காய்ச்சத் தொடங்கினாள். அப்பொழுது அவளது சேலை அவிழ்ந்து தொங்கியது. கை கழுவிக் காலம் தாழ்த்தினாற் குழம்பு பதம் கெட்டுவிடுமோ எனக் கருதித் தயிர் பிசைந்த கையாலேயே சேலையை உடுத்தாள்.

புளிக் குழம்புக்குச் சுவை சேர்க்கத் தாளிதம் செய்யலானாள். அப்பொழுது தாளிதப் புகை அவளது மையுண்ட கண்களை வருத்துவதைக் கவனிக்கக்கூடியதாக இருந்தது. எனினும், அதனை அவள் பொருட்படுத்தாது துழாவித் துழாவி இதமாகச் சமைத்தாள்.

கணவன் வந்ததும் உணவை அன்போடு பரிமாறினாள். அவன் புளிக் குழம்பு



நல்ல சுவையாக இருக்கிறது என்று சொல்லி உண்டான். அவள் அகம் குளிர்ந்தாள். மகிழ்ச்சியை நாணத்தால் அவள் மறைக்க முயன்றபோதும் அது அவளது ஒளிபொருந்திய முகத்திலே நுண்ணியதாக வெளிப்பட்டது என்று கூறித் தாயின் கவலையைப் போக்கினாள் செவிலி.

இல்லறத்தின் சிறப்புகள் பலவகை. அவற்றில் மனைவி அன்புடன் கணவனைப் பேணுதல் என்பது முக்கியமானது.

தற்காத்துத் தற்கொண்டாற் பேணி (குறள் 6: 6)

என்றார் வள்ளுவர் பெருமானும். பேணும் முறைகளும் பலவிதம். கணவனுக்கு உகந்த வகையில் சமையல் செய்வது அவற்றுள் ஒன்று. அதனைச் சிறப்பாகத் தலைவி செய்தாள் என்று கூறுகின்றாள் செவிலி.

அவ்விதம் கூறுகையில், விலை உயர்ந்த சேலையை அவள் அசட்டை செய்த விதத்தால் அவளது செல்வச் சிறப்பையும், கை கழுவாது சேலை உடுத்தும் தலை நிமிராது குழம்பைக் காய்ச்சியும் அவள் சமயலிற் காட்டிய அக்கறையையும், கணவன் இனிதென உண்டலின் நுண்ணிதின் மகிழ்ந்தாள் என்று கூறிப் பெண்களுக்கு இருக்கவேண்டிய அடக்கமும் அவளிடத்தில் நிறையவே இருந்தது என்பதையும், அத்தகைய காரணங்களினால் அவள் தனது கணவனைப் பேணுதற்குரிய தகைமைகளை உடையாள் என்பதையும் குறிப்பாக உணர்த்திய செவிலியின் திறமை மிக அருமை.

13

# மனைவியைப் பிரியாத கணவன்

இக்காலத்தைப் போலவே அக்காலத்திலும், இல்லற வாழ்வில் தலைவனும் தலைவியும் எப்பொழுதும் ஒன்றாக இருக்கும் வாய்ப்புகள் இருக்கவில்லை. பொருள், அரசபணி, கல்வி காரணமாகத் தலைவன் தலைவியைப் பிரிந்து செல்லவேண்டிய நிலைமைகள் ஏற்படுவதுண்டு. பொருள் ஈட்டும்பொருட்டுப் பிரிதலே பெருவழக்காக இருந்தது.

பொருள் இல்லார்க்கு இவ்வுலகம் இல்லை. இல்லறத்துக்குப் பொருள் வேண்டும். இல்லறத்தில் இருப்பவரே துறவிகளுக்கும் ஏழைகளுக்கும் முதியோருக்கும் துணையானவர். இவ்வித அறங்களைச் செய்வதற்கும் குடும்பத்தைப் பேணுவதற்கும் வேண்டிய பொருளைத் தேடுதல் சங்க காலத்தில் தலைவனின் முழுப் பொறுப்பாக இருந்தது.

ஒரு தலைவன்.

அவனுக்குப் பொருள் தேடுவதற்கு வேண்டிய தகைமைகள் யாவும் இருந்தன. ஆனால், அதற்குரிய நாட்டம் இருக்கவில்லை. காரணம், அவனுக்குச் சில காலத்துக்கு முன்னரே திருமணம் நடந்திருக்கின்றது. மனைவியை விட்டு இதுவரை அவன் பிரிந்தது கிடையாது. இனியும் பிரிவதாக இல்லை.

மனைவியின் அழகும் அன்பும் அவனை அவ்வளவுக்குக் கட்டிப் போட்டிருந்தன. அவனும் அவளைக் காதலித்தே மணம் முடித்திருந்தான். அவளுக்குப் பக்கத்திலேயே எப்பொழுதும் இருக்கவேண்டும் என்று அவனது காதல் நெஞ்சம் அங்கலாய்த்துக் கொண்டிருந்தது.

ஆனால், அவன் நடத்துவதோ தனிக்குடித்தனம். திருமணத்தோடு வந்து குவிந்த பொருள்களெல்லாம் தீர்ந்துவிட்டன. எத்தனை நாட்களுக்குத்தான் பெற்றோர் வளத்தில் வாழ்வது?

*போ, பொருள் தேடப் போ* என்று தூண்டியது அவனது உள் மனம்.

கடமைப் படவும் கருத்தில்லை, கட்டியவளை விட்டுப் பிரியவும் விருப்பில்லை. சில நாட்களாக அவனது மனம் அவனுடன் போராடிக் கொண்டிருந்தது. கடைசியிலே ஒரு முடிவுக்கு வந்தவனாகத் தனது நெஞ்சுக்கு இப்படிச் சொன்னான் தலைவன்:


நெஞ்சே, நீ நெடுங்காலம் வாழ்வாயாக! தலைவியுடன் கூடி மனையிலே இருப்பேனாயின் தலைவியைத் தழுவும் இன்பத்தைப் பெறலாமேயன்றிப் பொருளைப் பெற முடியாது. தலைவியைப் பிரிந்து பொருள் தேடிக் செல்வேனாயின் பொருளை ஈட்டலாமேயொழியத் தலைவியைக் கூடிப் பெறும் இன்பத்தை அடைய முடியாது. ஆதலால், இவ்விரண்டினையும் சீர்தூக்கிப் பார்க்கின்றபொழுது, தலைவியைப் பிரிந்தாலென்ன, பிரியாது போனாலென்ன, நீ நல்லதையே செய்ய நினைக்கின்றாய்.

ஆயினும், எனக்குத் தெரிந்த அளவில், தலைவியைப் பிரிந்து திரட்டும் பொருளோ, வாடாத மலரையுடைய பொய்கையிலே ஓடுகின்ற மீன் செல்லும் வழியைப் போல இருந்த இடம் தெரியாமல் அழிந்துபோகும் தன்மையுடையது. ஆகவே, கடல் சூழ்ந்த அகன்ற உலகையே அளக்கும் மரக்காலாகக் கொண்டு, ஏழு மரக்கால்வரையில் அளக்கத்தக்க பெரும் செல்வத்தைப் பெறுவேனாயினும் அதை நான் விரும்பேன்.

தலைவியின் செவ்வரி படர்ந்த குளிர்ச்சியுடைய கண்கள், இனிதாக நோக்கும் நோக்கால், என் ஆற்றல் அனைத்தையும் அழித்துவிட்டன. நான் அவளை விட்டுப் பிரியேன். பிரிந்து செல்வதால் வரும் பொருள் எத்துணைச் சிறப்புடையது ஆயினும் ஆகுக. அது எங்கு இருந்தாலும் வாழ்க!

நற்றிணையில் உள்ள இந்த அரிய பாடல் பின்வருமாறு:

புணரில் புணராது பொருளே பொருள்வயிற்
பிரியில் புணராது புணர்வே ஆயிடைச்
சேர்ப்பினும் செல்லாய் ஆயினும் நல்லதற்(கு)
உரிமை வாழி என் நெஞ்சே பொருளே
வாடாப் பூவின் பொய்கை நாப்பண்
ஓடுமீன் வழியின் கெடுவ யானே
விழுநீர் வியலகம் துணி யாக
எழுமாண் அளக்கும் விழுநிதி பெறினும்
கனங்குழைக்கு அமர்த்த சேயரி மழைக்கண்
அமர்ந்தினிது நோக்கமொடு செகுத்தனன்
எனைய ஆகுக வாழிய பொருளே. *(நற்றிணை 16)*



சிறந்த கருத்துள்ள பாடல் இது. வித்தியாசமானதுங்கூட. காதலா பொருளா என்று தலைவனின் உள்ளம் ஒரு பட்டிமன்றமே நடத்திவிடுகின்றது. முடிவில் நிலையற்ற பொருளிலும் காதலே மேலானது என்று அவனே தீர்ப்பளிக்கின்றான்.

தான் பிரிந்து சென்றால் மனைவி வாடுவாள் என்று தலைவன் கவலை கொள்கின்றான். *பொருள் வயிற் பிரியில் புணராது புணர்வே* என்னும் அவனது கூற்றில், பொருளின் பொருட்டுப் பிரிந்தால், பிரிவை ஆற்றாது தலைவி உயிர் துறப்பாள் என்னும் கருத்தும் தொனிக்கிறது. அவ்விதம் நடந்தால், அவளைப் புணரும் புணர்ச்சி அதன் பின் தனக்குக் கிடையாது எனத் தலைவன் அஞ்சுவது தெரிகிறது.

*இல்லானை இல்லாளும் வேண்டாள்* என்பார்கள். இவளோ வித்தியாச மானவள். 'இல்லாதுபோனாலும் பரவாயில்லை, என்னுடனேயே இரு. இல்லையென்றால் உயிரை விடுவேன்' என்பதுபோல நோக்குகிறாள்!

எந்நாளும் மனைவி பக்கத்திலேயே கணவன் இருந்தால், பொருளை எவ்விதம் தேடுவது? ஒரேயொரு வழிதான் உண்டு. பொருள் தேடும்படி மனைவி தூண்டும் வரை அவளைவிட்டுப் பிரியாது இருத்தல்.

தலைவி கொடுத்து வைத்தவள். அவளுக்குக் கிடைத்திருப்பவன் குறிப்பு அறிந்து நடப்பதில் வல்லவன்.

இல்லறச் சிறப்புக்குக் கணவன், மனைவியின் எண்ணத்தையும் மனைவி, கணவனின் உள்ளத்தையும் குறிப்பால் அறிந்து அதற்கேற்ப நடப்பாராயின், தவறான எண்ணங்களுக்கும் சந்தேகங்களுக்கும் வாக்கு வாதங்களுக்கும் இடம் ஏது?

# 14

# விருந்தோம்பல்

விருந்தோம்பல் தமிழ் மக்களின் தலையாய பண்பாட்டுக் கூறுகளில் ஒன்று. விருந்து என்றால் புதிது என்று பொருள். ஊருக்குப் புதிதானவர் வீட்டுக்கு வருவாரெனில் அவரைத் தக்கவாறு உபசரித்தல் இல்லறத்தில் நின்று ஒழுகுவாரின் தலையாய கடனாகும்.

இருந்தோம்பி இல்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி
வேளாண்மை செய்தற் பொருட்டு (குறள் 9: 1)

என்பது திருக்குறள். விருந்து ஓம்புதல் வந்த புதியவருக்கு உணவளித்தல். வேளாண்மை செய்தல் பிற உதவிகளைச் செய்தல்.

உணவு கொடுத்ததோடு எமது கடன் முடிந்துவிட்டதெனத் திருப்தி கொள்ளல் ஆகாது. வந்தவர் அங்கேயே அன்றைக்குத் தங்க வேண்டுமா அல்லது வேறு எங்கேயாவது செல்ல வேண்டுமா அல்லது காசு பொருள் ஏதாவது வேண்டுமா, என்ன வேண்டுமோ அதனை முடிந்த வரை கொடுத்து உதவுதல் வேண்டும். இல்வாழ்வதே விருந்தினரை வரவேற்று, உணவளித்து அவர்களுக்கு வேண்டும் பிற வசதிகளையும் செய்வதற்குத்தான், வேறு ஒன்றுக்குமல்ல என்று வள்ளுவர் கூறுவது விருந் தோம்பலின் அவசியம் கருதியேயாகும்.

கற்பு வாழ்க்கையில் ஈடுபட்டிருக்கும் பெண்ணின் சிறப்புகளில் விருந்து புறந்தருதலும் ஒன்று.

கற்பும் காமமும் நற்பால் ஒழுக்கமும்
மெல்லியல் பொறையும் நிறையும் வல்லிதின்
விருந்துபுறந் தருதலும் சுற்றம் ஓம்பலும்
பிறவும் அன்ன கிழவோள் மாண்புகள் (பொருள் 150)

என்பது தொல்காப்பியம்.

இத்தகைய சிறப்புகளையுடைய தலைவியின் வீட்டுக்கு ஒரு விருந்தாளி வந்தார்.

அதுவும் இரவிலே வந்தார். அந்த நேரத்தில் சாப்பாடு போதியளவு இருக்கவில்லை. வந்தவரை இன்முகத்துடன் வரவேற்றாள். வந்தவர் சாதாரணமானவர் அல்லர். நல்ல புகழையுடைய விருந்தினர்.

வீட்டிலே சமையல் செய்வதற்கு இளையோர், அடியார் எனப் பலர் இருந்தனர். இருந்தாலும் தானே செய்யவேண்டும் என்னும் விருப்பால் சமைக்கத் தொடங்கினாள் தலைவி. நெய்யை மிகுதியாக விட்டுத் தாளித்து இறைச்சிக் கறி சமைத்தாள். நெய்ப்புகை அவளது நெற்றியில் நுண்ணிய வியர்வைத் துளிகளைத் தோற்றுவித்தது. அத்துளிகளோடு குறுகிக் குறுகி நடந்து அவள் விருந்தோம்பிய சிறப்பைக் கண்டு இன்புற்றான் தலைவன். இச் செய்தியை நற்றிணையில் உள்ள 41ஆம் பாடல் தெரிவிக்கின்றது.

அதியமான் நெடுமானஞ்சி என்பவன் கடையெழு வள்ளல்களில் ஒருவன். போரிலே வல்லவன். மாற்றாரைப் போரிலே வென்று செல்வங்களை ஈட்டியவன். ஒருமுறை, பழங்காலந்தொட்டு நிலைபெற்றிருக்கின்ற விடரகம் என்னும் பெரிய மலையில் யாரும் அடைய முடியாத உச்சியிலே வளர்ந்த சிறிய இலைகளையுடைய நெல்லியின் இனிய கனியை அதியமான் பெற்றான். இதனை உண்பவர் நோய்நொடி இன்றி நெடுங்காலம் வாழ வல்லவர் என்பது அவனுக்கு நன்கு தெரியும். அதனை மகிழ்ச்சியோடு அவன் உண்ணக் கருதியவேளை அறிவிற் சிறந்த அவ்வைப் பிராட்டியார் அவன் மனைக்கு வருகை தந்தார். அரிதாகப் பெற்ற மருந்தனைய நெல்லிக் கனியைத் தான் உண்ணாது விருந்தாக வந்த அவ்வைக்கு அளித்து அகமகிழ்ந்தான் அதியன்.

நெல்லிக் கனியை உண்ட பின்னரே அதன் பெருமை அவ்வையாருக்குத் தெரிய வந்தது. வியப்புற்று, பால்போலும் பிறை பொலிந்த சடையையும் கரிய மிடற்றினையும் உடைய சிவனைப் போல நீ என்றும் நிலைபெறுவாயாக என்று அவர் மகிழ்ந்து அதியமானை வாழ்த்திய பாடல் இது:

வலம்படு வாய்வாள் ஏந்தி ஒன்னார்
களம்படக் கடந்த கழல்தொடித் தடக்கை
ஆர்கலி நறவின் அதியர் கோமான்
போரடு திருவிற் பொலந்தார் அஞ்சி
பால்புரை பிறைநுதல் பொலிந்த சென்னி
நீல மணிமிடற்று ஒருவன் போல
மன்னுக பெரும நீயே தொல்நிலைப்
பெருமலை விடரகத் தருமிசைக் கொண்ட
சிறியிலை நெல்லித் தீங்கனி குறியா



*ஆதல் நின்னகத்து அடக்கிச்*
*சாதல் நீங்க எமக்கீத் தனையே.* *(புறம் 91)*

விருந்தோம்பலைத் தமிழ் மக்கள் இன்றும் பெரும் பண்பாகப் போற்றி வருகின்றனர். வீட்டுக்கு வருவோருக்குத் தேநீர், பலகாரம் வழங்குதல், சாப்பாட்டு நேரமாயின் உணவருந்திச் செல்லுமாறு வற்புறுத்தல், சன்னியாசிகளை மனமுவந்து உபசரித்தல் முதலாய பழக்கங்கள் எம்மவர் மத்தயில் நிறையவே உள்ளன. எனின், அறியாதவராயின் புறக்கணிக்கும் இயல்பும் கூடவே உண்டு. பொய்யும் களவும் மலிந்த இக் காலத்தில் அறியாதவரை ஆதரித்து ஆபத்தில் மாட்டிக்கொள்ள யார்தாம் விரும்புவர்? இதனால் உண்மையாகவே அந்தரப்படும் நல்லவர் பாதிக்கப் படுவதுண்டு.

சொந்த பந்தங்களை அழைத்து விருந்து வைப்பது உறவை வளர்க்க நன்கு உதவும். சுற்றம் ஓம்புதலும் இல்லறத்தின் இயல்பேயாகும். ஆயின் அது தேவை கருதி உதவும் தொண்டாக அமைதல் வேண்டும். எமது செல்வச் சிறப்பைக் காட்டும் பெருமைச் செயலாக இருத்தல் ஆகாது.

விருந்திடுதல் ஓர் அறம். களியாட்டம் அன்று. அறியாதவருக்கும் அந்தரப் படுவோருக்கும் ஏழைகளுக்கும் உணவளித்தலே அறமாகும்.

அறத்தில் நம்பிக்கையுள்ளவர் தமக்கு நேரக்கூடிய தீமைகளையும் பொருட் படுத்தாது அறியாதவர் வீடு தேடி வரினும் அவரை ஆதரிப்பர். மருந்தேயாயினும் விருந்தோடு உண்பர்.

விருந்தோம்பலில் ஆர்வமுள்ளவர், திருத்தொண்டர் புராணத்தில் வரும் இளையான்குடி மாற நாயனார் சரித்திரத்தை அடிக்கடி படித்தல் வேண்டும் (28ஆவது கட்டுரையைப் பார்க்க).

15

# வறுமை வரினும் வற்றாது அன்பு

இல்லற ஓடம் என்றும் இன்பக் கடலில் ஓடுவதில்லை. வருவாய் ஒருசீராக எப்பொழுதும் வருவதில்லை. வருவாய் குன்றியவிடத்தும் விருந்தோம்பல், சுற்றம் ஓம்பல் முதலாய இல்லறக் கடமைகளை வழுவாது செய்தல் வேண்டும். இதனால் இருக்கின்ற கைப்பொருளும் இல்லாது போகும். வெறுமை வறுமையாகும்.

வறுமையிலும் கொடியது ஒன்றுள்ளது. அது யாதெனில் விருந்தினரை உபசரியாது விடுதல். *இன்மையுள் இன்மை விருந்தொரால்* என்பது திருக்குறள். விருந்தினரை உபசரிக்கும் மேன்மக்கள் வறுமை வந்தக்கால் முதலிற் செய்வது தமது சுகபோகங்களைத் துறத்தல்.

தனிமனை நடத்தும் தலைவியின் சிறப்புகளைக் காணச் சென்றாள் செவிலித்தாய். அவளது இல்லம் வறுமையின் பிடியில் வாடுவதைக் கண்ணுற்றாள்.

தலைவி முன்பு சீரோடும் சிறப்போடும் வாழ்ந்தவள். அவற்றையெல்லாம் அவள் நினைத்துப் பார்ப்பதாகத் தெரியவில்லை. மூன்று வேளை உண்ணுதற்கு வழி இல்லாத காரணத்தால் பொழுது மாறி உண்கின்றனர் தலைவனும் தலைவியும். என்றாலும் ஒரு விடயம் அவளுக்கு மகிழ்ச்சியை அளித்தது. வறுமையிலும் அவர்களது அன்பு வற்றவில்லை. ஒற்றுமையாகவே குடும்பம் நடத்துகிறார்கள். தலைவன் கூற்றைத் தட்டாதவளாக அவனது குறிப்பறிந்து நடக்கிறாள் தலைவி.

இவற்றைக் கேட்ட தலைவியின் தாய் தன் மகளின் இயல்புகளில் ஏற்பட்ட மாற்றங்களைக் கண்டு வியக்கின்றாள். வியப்பை உண்டுபண்ணியது முன்பு நடந்த ஒரு சம்பவம்.

முன்பு மகள் சிறியவளாக இருந்த காலத்தில் ஒருநாள், அன்பிற் சிறந்த செவிலி தேன் போன்ற இனிய சுவையுடைய பாற்சோற்றை ஒளி பொருந்திய பொற் கலசத்தில் இட்டு அவளுக்கு ஊட்ட முனைந்தபோது, அவள் உணவிற் கவனம் செலுத்தாது விளையாடிக்கொண்டிருந்தாள். செவிலி பூப்போன்ற மெல்லிய சிறிய கோலைக் காட்டிச் 'சோற்றை உண்' என்று அதட்டினாள். அதனைக் கண்ட மகள் முத்துப்

பரல்களையுடைய சிலம்பொலிக்க ஓடினாள். முதுமையுற்ற செவிலியால் தொடர்ந்து ஓட முடியவில்லை. மகள் முன்றலில் இருந்த முல்லைப் பந்தரின்கீழ் நின்றவாறு, 'நான் உண்ண மாட்டேன்' என்று மறுத்துக்கூறி மீண்டும் விளையாட்டில் ஈடுபட்டாள். அப்படிப்பட்ட சொல்வழி கேளாச் சிறுவிளையாட்டுப் பெண் இன்று கணவன் சொல்லைக் கேட்டு நடக்கும் அறிவையும் ஒழுக்கத்தையும் எங்ஙனம் உணர்ந்து கொண்டாள்? கட்டிய கணவன் வறுமையுற்ற போதும் தன்னைப் பெற்று வளர்த்த தந்தையின் செல்வச் சிறப்பில் உண்ட உணவையும் நினையாது, நேரகாலத்துக்கு உண்ணாது இருக்கும் சிறு வன்மையும் உடையவளாக இருக்கிறாளே!

பிரசங் கலந்த வெண்சுவைத் தீம்பால்
விரிகதிர்ப் பொற்கலத்து ஒருகை ஏந்திப்
புடைப்பிற் சுற்றும் பூந்தலைச் சிறுகோல்
உண்ணென்று ஓக்குபு புடைப்பத் தெண்ணீர்
முத்தரிப் பொற்சிலம்பு ஒலிப்பத் தத்துற்று
அரிநரைக் கூந்தற் செம்முது செவிலியர்
பரீ இ மெலிந்தொழியப் பந்தர் ஓடி
ஏவல் மறுக்குஞ் சிறு விளையாட்டி
அறிவும் ஒழுக்கமும் யாண்டு உணர்ந்தனள்கொல்
கொண்ட கொழுநன் குடிவறள் உற்றெனக்
கொடுத்த தந்தை கொழுஞ் சோறு உள்ளாள்
ஒழுகுநீர் நுணங்கு ஆறல்போலப்
பொழுது மறுத்து உண்ணுஞ் சிறுமது கையளே. *(நற்றிணை 110)*

இத் தாயினுடைய சிந்தனையால் நாம் அறியும் பொருள் வறுமை வந்துற்றாலும் தலைவனுடன் கூடிவாழும் இன்பத்தையே தலைவி பெரிதாகக் கருதுவாள் என்பது. இந்த உண்மையைத் தனது சொந்த மகளின் நடத்தை மூலம் அவள் தெரிந்து கொண்டதையும் பார்க்கிறோம்.

*இல்லாள் அகத்து இருக்க இல்லாதது ஒன்றில்லை* என்பது அவ்வையாரின் மூதுரை. நல்ல குணம் உள்ள அன்புள்ள மனைவி வீட்டில் இருந்தால் அவ்வீட்டில் இல்லாத பொருள் ஒன்றும் இல்லை என்பது இதன் பொருள். அதாவது, அவ்வீட்டில் எல்லாப் பொருளும் இருக்கும்.

தமிழர் குடும்பங்களிலே கணவன் மனைவியர்க் கிடையில் இன்று காணப்படும் பலவகையான பிரச்சினைகளுக்கு அடிப்படையாக உள்ள காரணம் அன்பு இல்லாமையேயாகும்.



அன்பு இன்மைக்குப் பேச்சுத் திருமணம் ஒரு காரணம் என்று சமூகவியலாளர் கருதுகின்றனர். தமிழ் ஈழத்து மக்கள் மத்தியில் பேச்சுத் திருமணங்கள் பெரிதும் மாப்பிளை பெண்பிள்ளை சம்மதத்துடனேயே நடைபெறுகின்றன. சம்மதம் அன்பு உணர்ச்சியின் அடிப்படையிலேயே கொடுக்கப்படுகின்றது. திருமணத்தின் பின் அந்த அன்பை வளர்த்தல் தமிழர் மத்தியில் இன்றியமையாத குடும்பக் கலையாகிவிட்டது. இந்தக் கலை தெரியாதவர் திருமணங்கள் தோல்வி அடைகின்றன.

தோல்விக்குக் காரணம் அன்பு பெரிதும் ஒருவழிப்பட்டிருத்தல். கணவன் மீது மனைவி மட்டும் அன்புடையவளாக இருந்தாற் போதாது. கணவனும் மனைவி யிடத்து அன்பு பாராட்டுதல் வேண்டும். அதாவ்து, அன்பு இருவழிப்பட்டதாக இருத்தல் வேண்டும். காதல் என்பது உள்ளப் புணர்ச்சி. இரண்டு உள்ளங்களும் ஒன்றோடொன்று கலந்து எந்நாளும் உறவாடுதலே இல்லறத்தின் இரகசியமாகும்.

அன்பே உயர்ந்த செல்வம். அது அனைத்தையும் ஈட்டவல்ல அற்புத சக்தி. இல்லறத்தில் அதனை வளர்க்க வேண்டியது கணவனதும் மனைவியினதும் கூட்டான கடமையாகும்.

16

# சுற்றம் ஓம்பிய கற்றவர் குடும்பம்

மன்னர் புலவர்களை ஆதரித்த நிகழ்வுகள் பல பழந்தமிழ் இலக்கியங்களிற் பதிவாகியுள்ளன. புலவர்களே அவற்றைப் பெருமையுடன் கூறிச் சென்றுள்ளனர். பறம்பிற் கோமான் பாரி, வல்வில் ஓரி, மறப்போர் மலையன், கொடும்பூண் எழினி, பெருங்கல் நாடன் பேகன், மோசி பாடிய ஆய், கொள்ளார் ஓட்டிய நள்ளி ஆகிய மன்னர்கள் கடையெழு வள்ளல்கள் எனப்படுவர். இவர்கள் வாரி வழங்கிப் புலவர்களை வாழ வைத்தனர். மன்னர் புலவர்களை மதித்து வரிசைகள் வழங் கியதால் பலர் ஆர்வமுடன் இலக்கியம் இயற்றினர். தமிழ் செழித்து வளர்ந்தது.

கடையெழு வள்ளல்களின் பின் தமிழை வளர்த்த பெருமன்னன் குமணன். அவன் முதிர மலைக்குத் தலைவன். பெருங்கொடை வள்ளல். அவன் காலத்தில் வாழ்ந்தவர் பெருஞ்சித்திரனார் என்ற புலவர். தான் சொல்ல வருவதை நுணுக்கமாகச் சித்தரித்து விளக்கும் திறமை கொண்டவராதலால் இவர் சித்திரனார் என அழைக்கப்பட்டார். அன்பிற் சிறந்த இப்புலவர் தனது குடும்பத்துக்கு மட்டுமன்றித் தன் சுற்றத்துக்காகவும் பொருள் ஈட்டி வாழ்ந்தவர்.

ஒருமுறை வறுமை காரணமாகப் பெருஞ்சித்திரனார் குமண வள்ளலைக் காணச் சென்றார். அவரது அறிவையும் தமிழையும் பெரிதும் மதித்துக் குமண வள்ளல் பரிசிலாகப் பெருஞ் செல்வத்தை வழங்கினான். அச் செல்வத்தைக் கொண்டுவந்து மனைவியிடம் கொடுத்துப் புலவர் கூறிய கூற்று அவரின் பரந்த மனப்பான்மைக்கு நல்லதோர் எடுத்துக்காட்டாக விளங்குகின்றது.

நின்னயந்து உறைநர்க்கும் நீநயந்து உறைநர்க்கும்
பன்மாண் கற்பினின் கிளைமுத லோர்க்கும்
கடும்பின் கடும்பசி தீர யாழநின்
நெடுங்குறி யெதிர்ப்பை நல்கி யோர்க்கும்
இன்னார்க் கென்னாது என்னொடுஞ் சூழாது
வல்லாங்கு வாழ்வதும் என்னாது நீயும்
எல்லோர்க்கும் கொடுமதி மனைகிழ வோயே
பழந்தூங்கு முதிரத்துக் கிழவன்
திருந்துவேற் குமணன் நல்கிய வளனே. (புறம் 163)

மனைக்கு உரியோய்! இச் செல்வம் பழமரங்கள் நிறைந்த முதிரம் என்னும் மலைக்குத் தலைவனாகிய கூரிய வேலையுடைய குமணவள்ளல் தந்தது. இதனை உன்னைச் சார்ந்தவர்க்கும் நீ அன்பு செய்யும் தோழியர்க்கும் பலவகையிலும் சிறந்த கற்பினையுடைய உனது சுற்றத்தைச் சார்ந்த மூத்த மகளிர்க்கும் முன்பு எமது சுற்றத்தார் பசிபோக்க உதவியவர்க்கும் மற்றும் இன்னார் இனியார் எனக் கருதாது நீயும் எல்லோர்க்கும் கொடுத்து உதவுவாயாக! அவ்விதம் உதவுகையில் யார் யாருக்கு எவ்வளவு கொடுக்க வேண்டும் என்பதுபற்றி யெல்லாம் நீ என்னோடு கூடி ஆலோசிக்க வேண்டியதில்லை. மேலும், வருங்கால நல்வாழ்வுக்கு ஒரு பகுதியைச் சேமித்து வைக்க வேண்டும் என்றும் நீ நினைக்க வேண்டியதில்லை.


பெருஞ்சித்திரனாரின் பாடல் நமக்குப் பலவிடயங்களைப் படிப்பிக்கின்றன:

1. இல்லறத்துக்கு வேண்டிய பொருளைத் தேடும் பொறுப்புக் கணவனுக்குரியது.
2. அப்பொருளை நிருவகிக்கும் பொறுப்பு மனைவிக்குரியது.
3. இல்லறம் சார்ந்த விடயங்களில் மனைவிக்கு முழுச் சுதந்திரம் உண்டு.
4. பொருளை எல்லோருக்கும் பங்கிடல் வேண்டும்.
5. அதனை நாமே வைத்து அனுபவிக்க வேண்டும் என்னும் சுயநலம் இருத்தல் ஆகாது.

அத்துடன் ஓர் உண்மைப் புலவனுக்கு இருக்கவேண்டிய தகைமைகள் அனைத்தும் பெருஞ்சித்திரனாரிடம் இருப்பதையும் காணலாம். அன்புடைமை, ஆழ்ந்த அறிவுடைமை, பரந்த மனப்பான்மை, சுற்றத்தைப் பேண வேண்டும் என்னும் பொறுப்புணர்வு, மனைவியின் உரிமைக்கு மதிப்பளித்தல், தன்னம்பிக்கை முதலாய நல்லியல்புகள் அவரை ஒரு புலவனாக மட்டுமன்றி உன்னதமான ஒரு குடும்பத் தலைவனாகவும் உயர்த்துகின்றன.

இரண்டு விடயங்கள் அதி கவனத்துக்குரியன. ஒன்று மனைவிக்குப் புலவர் கொடுத்திருக்கும் முக்கியத்துவமும் உரிமைப்பாடும்.

அகம், புறம் என இருவகைப்பட்ட தமிழர் வாழ்க்கை முறையில், அகவாழ்வில் பெண்ணுக்கும் புறவாழ்வில் ஆணுக்கும் முன்னுரிமை அளிக்கப்பட்டது. மனைகிழவோயே! என்று தலைவியை அழைக்கின்றார் புலவர். மனைக்கு உரிமையுடையவளே! என்பது இதன் பொருள். மனைவி என்பதன் பொருளும் இதுவேயாகும். இல்லத்துக்கு முழுப் பொறுப்பும் உடையவள் பெண் என்ற



காரணத்தினாலேயே அவள் இல்லத்து அரசி என அழைக்கப்படுகின்றாள். அவளது ஆட்சியில் அக்காலத்தில் தலையீடு இருந்ததில்லை.

இந்நிலைமை ஆண்வழிப்பட்ட வாழ்க்கை முறையைக் கொண்ட ஆரியர் வருகையைத் தொடர்ந்து மாறத் தொடங்கலாயிற்று. எனினும் தமிழீழத்தவர் வாழ்க்கை முறையில் குடும்ப நிருவாகம் இன்றும் பெரிதும் பெண்கள் பொறுப்பிலேயே இருந்து வருவது குறிப்பிடத்தக்கது.

இரண்டாவதாக, புலவரின் ஒப்புரவு மனப்பான்மை நெஞ்சைத் தொடுகின்றது. ஒப்புரவு என்பது உதவி செய்தல்.

புலவர் தமது வறுமையைப் போக்கக் குமணனிடம் சென்றவர். பெற்ற பொருளை வைத்துக்கொண்டு தாம் வாழ நினையாது, எல்லோர்க்கும் கொடுத்து வாழ வேண்டும் என்று விரும்பும் அவரது உள்ளம் பொதுவாக எல்லோருக்கும் இருப்பதில்லை. பொருளைக் கட்டிக் காத்தல் வேண்டும் என்னும் பொதுவான இயல்புக்குப் புவலர் மாறானவராக இருக்கின்றார். பொருள் வரும் போகும். இருக்கின்ற பொழுது எல்லோருக்கும் உதவ வேண்டும் என்னும் நல்மனமும் அது இல்லாத போது அதனை எப்படியாவது தேடிக்கொள்ளலாம் என்னும் தன்னம்பிக்கையும் அவரிடம் இருப்பதைக் காண முடிகின்றது. பொருளிலும் அன்பே மேலானது என்பதை அவர் நடத்தை காட்டுகின்றது.

*நீயும் கொடு* என்கிறார் புலவர். இதனால் *நானும் கொடுப்பேன்* என்பதை மனைவிக்குக் குறிப்பாக உணர்த்துகிறார். பெரிய வள்ளல் குமணனிலும் உயர்ந்த வள்ளலாக அவர் விளங்குகிறார்.

## 17

# இயற்கையைப் பேணிய இதயங்கள்

பாரி மன்னன் கடையெழு வள்ளல்களில் ஒருவன். பறம்பு மலைக்குத் தலைவன். உடல் வலிமை மிகுந்தவன். மாரியைப் போல வாரி வழங்கிக் கொடைக்குப் பாரி என்னும் முத்திரையைப் பதித்தவன். இயற்கை வனப்பைப் பெரிதும் இரசித்தவன்.

ஒருமுறை, ஒலிக்கும் மணிகளையுடைய நெடிய தேரிலே பாரி மன்னன் சென்று கொண்டிருந்தபோது வழியிலே அழகிய முல்லைக் கொடி ஒன்று அவனது கண்ணைக் கவர்ந்தது. தேரை விட்டு இறங்கி முல்லைக் கொடியைப் பார்வையிட்டான். பெருங் காற்றினால் அடியுண்டது போலும் அது சரிந்து விழுந்து குலைந்து கிடந்தது. அன்பிற் சிறந்த அவனது இதயம் முல்லைக்கு இரங்கியது.

'மனிதருக்கு இந்த உலகத்தில் மனம்போல வாழ்வதற்கு உரிமை இருப்பது போலவே முல்லைக் கொடிக்கும் வாழ்க்கைச் சுதந்திரம் இருத்தல் வேண்டும். அது படர்வதற்குக் கொழுகொம்பு இல்லாது தவிக்கலாமா? புலவர்கள் தமது நாவன்மை காட்டிய பொழுதெல்லாம் வாரி வழங்கியிருக்கிறேன். முல்லைக் கொடிக்கு அவ்விதம் பாடமுடியுமா, என்ன? அதன் அவலத்தைப் போக்குவதும் மன்னவனின் கடமையே யாகும். வாயில்லாத உயிரினங்களுக்கு உதவுதலே உண்மையான அறம்' என்றெல்லாம் வள்ளல் சிந்தித்திருத்தல் வேண்டும்.

தேரைத் தெருவோரம் நிறுத்தி அதன்மேல் முல்லைக் கொடியைப் படரவிட்டு அழகு பார்த்தான் பாரி. இப்பொழுது முல்லைக் கொடி பொலிவுற்றுக் காணப்பட்டது. அது தழைத்து நன்றாகப் படரவேண்டும் என்று வாழ்த்தி, மனநிறைவோடு நடந்து தன் அரண்மனைக்குச் சென்றான் மன்னன்.

நெஞ்சை அள்ளும் இந்த விந்தைமிகு சம்பவத்தைக் கபிலர் பின்வருமாறு பாராட்டுகின்றார்:

.... பூத்தலை அறாஅப் புனைகொடி முல்லை
நாத்தழும்பு இருப்பப் பாடா தாயினும்

கறங்குமணி நெடுந்தேர் கொள்க எனக் கொடுத்த
பரந்தோங்கு சிறப்பின் பாரி........ (புறம் 200)

ஊருடன் இரவலர்க்கு அருளித் தேருடன்
முல்லைக் கீத்த செல்லா நல்லிசைப்
படுமணி யானைப் பறம்பிற் கோமான் (புறம் 201)

சிறுபாணாற்றுப்படை என்ற நூலிலும்,

சிறுவீ முல்லைக்குப் பெருந்தேர் நல்கிய
பிறங்குவெள் ளருவி விழுஞ் சாரற்
பறம்பிற் கோமான் ...

என்று பாரியின் பெருந்தன்மை புகழப்பட்டுள்ளது.

பேகன் என்று இன்னொரு குறுநில மன்னன் கடையெழு வள்ளல்களில் ஒருவன். பாண்டி நாட்டில் பழனி மலையை ஆண்ட தலைவன். கான மயிலின் ஆடலைக் கண்டு களித்துப் பரிசாக அதற்குப் பட்டாடை போர்த்திய பெருமையுடையவன்.

உடாஅ போரா வாகுதல் அறிந்தும்
படாஅ மஞ்ஞைக் கீத்த எங்கோ (புறம் 141)

என்று பரணர் புகழ்கின்றார் பேகனின் கொடைவளத்தை. மஞ்ஞை உடாது, போராது என்று தெரிந்தும் பட்டாடையை அதற்குப் பரிசாக அளித்த எங்கோமான் என்று வியக்கின்றார் புலவர்.

மயில்கள் குளிர்ச்சியைக் கண்டு மகிழ்ச்சி கொள்ளும் இயல்பின. பொதுவாக மழைக் காலத்திலே அவை நடமாடிக் களிக்கும். மழைப் பனியில் மயில் நடுங்குமென அஞ்சியே பேகன் ஆடை அளித்தான் என்று மற்றுமோர் இடத்தில் குறிப்பிடுகின்றார் புலவர்.

கான மஞ்ஞைக்குக் கலிங்கம் நல்கிய
அருந்திறல் அணங்கின் ஆவியர் பெருமான்
பெருங்கல் நாடன் பேகன்

என்று சிறுபாணாற்றுப்படையிலும் இவன் புகழப்படுகின்றான்.

இந்நிகழ்வுகள் தமிழர் இயற்கை குறித்துக் கொண்டிருந்த கொள்கைக்கான உதாரணங்கள். சம்பந்தப்பட்டவர் மன்னர். எனவே அவர்கள் தத்தம் நாடுகளில்



இயற்கையைப் பேணிப் பாதுகாத்திருப்பர் என்பதில் ஐயமில்லை.

இக்காலத்திற் பல நாடுகள் காடுகளை அழித்தும் விலங்குகளைக் கொன்றும் இயற்கையைச் சின்னாபின்னமாக்குகின்றன. கைத்தொழில் வளர்ச்சி என்ற பெயரில் அளவுக்கு மீறிய நச்சுப் புகைகளாலும் இரசாயனங்களாலும் இயற்கைச் சூழலை மாசுபடுத்தி வருகின்றன கைத்தொழில் நாடுகள். இவற்றால் ஏற்படும் பாதிப்புகளை அறிவியலாளர் சுட்டிக்காட்டியதன் விளைவாக, இன்று இயற்கையைப் பேண வேண்டும் என்னும் கொள்கை ஓர் இயக்கமாகவே வளர்ந்து வருகின்றது. காடுகளை உண்டாக்குவதற்கும் அருகிவரும் உயிரினங்களைப் பேணுவதற்கும் முயற்சிகள் எடுக்கப்படுகின்றன.

உள்ளூர் மட்டத்திலும் சுற்றாடல் தனிப்பட்டவர்களால் அழுக்கடைகின்றது. கஞ்சல் குப்பைகளையும் அழுகும் பண்டங்களையும் கண்டபடி வீசிச் சூழலை அசுத்தப்படுத்துகின்றனர் பலர். இதனால் கிருமிகள் பெருகி, நோய்களை பரவச் செய்கின்றன. சுத்தம் சுகம் தரும். அசுத்தம் நோயையே தரும்.

இன்றைய விஞ்ஞான யுகத்தில் சூழலைப் பாதுகாக்க வேண்டியது குடிமக்களின் தலையாய கடமையாகின்றது. இயற்கைப் பாதுகாப்பு ஓர் மகத்தான அறம். இல்லறத்தில் இருப்பவர் விரும்பிச் செய்யவேண்டிய அறம். குப்பைகளைக் குறிப்பிட்ட இடத்தில் கொட்டுதல், குறித்த காலத்தில் அவற்றை எரித்தல் அல்லது எருவாக்குதல் போன்றவற்றில் குடும்பத்தவர் கவனம் செலுத்தல் வேண்டும். மேலும் பொருட்களைப் பொறுப்புடன் கையாளுதல், மீளப் பாவித்தல், புதிப்பிக்க முடியுமானாற் புதுப்பித்தல் முதலிய வழிமுறைகளால் குப்பைகளைக் குறைக்கவும் நடவடிக்கைகள் எடுத்தல் வேண்டும்.

அறம் பொருள் இன்ப அடிக்கல் இயற்கை
இறைதரும் சுகமும் இயற்கையின் நிழலே.
[இயற்கைத் தமிழ் (சூழற் பாதுகாப்பு) - வி. கந்தவனம்]

18

# மயக்குறு மக்கள்

புதுமணத் தம்பதிகளைப் பதினாறும் பெற்றுப் பெருவாழ்வு வாழ்க! என்று வாழ்த்துவது தமிழ் மக்கள் மரபு. வாழ்க்கையிலே அடைய வேண்டிய பேறுகள் பதினாறு. அவை கல்வி, தொழில், செல்வம், வலிமை, புத்தி, சித்தி, புகழ், நன்மக்கள், இன்பம், நல்வினை, அழகு, பெருமை, பெரியோர் துணை, பணிவு, நோயின்மை, நீண்ட ஆயுள் என்பன.

இவற்றுள் தலையாயது நன்மக்கட் பேறு. தம்பதிகள் அடையக் கூடியவற்றுள் நல்ல மக்களைப் பெறுவதைப் போன்று பேறு வேறொன்றில்லை என்பது வள்ளுவர் வாக்கு.

பெற்ற குழந்தைகள் தமது சிறிய கைகளால் அளைந்து, பிசைந்த உணவு பெற்றோருக்கு அமிழ்தினும் இனிதாக இருக்கும். மக்களைப் பார்த்தல் கண்களுக்கு விருந்து. அவர்களின் மெய் தீண்டல் உடற்கு இன்பம். சொற் கேட்டல் செவிக்கு இன்பம்.

குழல்இனிது யாழ்இனிது என்பர்தம் மக்கள்
மழலைச்சொல் கேளா தவர் (குறள் 7: 6)

என்பது திருக்குறள். குழந்தை இன்பம் குடும்பத்தைக் குதூகலிக்க வைக்கும் இன்பம். இத்தகைய அரிய இன்பத்தைப் பாண்டியன் அறிவுடை நம்பி என்னும் அரசன் விவரிக்கும் விதம் அவனது அனுபவத்தை அள்ளித் தருவதாக உள்ளது.

படைப்புப் பல படைத்துப் பலரோடு உண்ணும்
உடைப்பெருஞ் செல்வ ராயினும் இடைப்படக்
குறுகுறு நடந்து சிறுநகை நீட்டீ
இட்டும் தொட்டும் கவ்வியும் துழந்தும்
நெய்யுடை அடிசில் மெய்பட விதிர்த்தும்
மயக்குறு மக்களை இல்லோர்க்குப்
பயக்குறை இல்லைத் தாம்வாழு நாளே. (புறம் 188)

இல்வாழ்க்கையைப் பலவகைச் சிறப்புகளுடனே நடத்தி, வருவோரை ஓம்பி, அவரோடு இருந்து உண்ணும் செல்வத்தை உடையோராயினும், அம் மகிழ்ச்சி களிடையே, குறுகக் குறுக நடந்தும் சிறுகையை நீட்டியும் பாத்திர உணவைத் தரையிலே சிந்தியும் சிந்திய கையால் மேனியிலே தொட்டு வாயாற் கவ்வியும் கையால் துழாவியும் நெய்ச்சோற்றை உடம்பிலே சிதறியும் மெய்மறக்கச் செய்யும் இன்பத்தை அளிக்கும் புதல்வர் இல்லாதார்க்கு இவ்வுலக வாழ்விற் பயனாவது ஒன்றுமில்லை.

பதினாறு பேறுகளில் நன்மக்கட்பேறே சிறந்தது என்று வலியுறுத்துவது போல அமைந்துள்ளது பாண்டியன் அறிவுடை நம்பியின் கூற்று. குழந்தைச் செல்வத்துக்கு இணையான செல்வம் வேறொன்றில்லை என்பது தமிழர் தத்துவம்.

குழந்தை இன்பத்தில் கணவனும் மனைவியும் திளைத்த சம்பவங்கள் பலவற்றைச் சங்க இலக்கியங்களிற் படித்து இன்புறலாம்.

இசைக் கலைஞரைப் பாணர் என்று சங்க காலத்தில் அழைத்தனர். ஒருநாள் பாணன் ஒருவன் தனது மகனை மடியில் வைத்துக்கொண்டு கொஞ்சி மகிழ்ந்தான். அந்த மகிழ்ச்சியில் அவனுக்குப் பாடவேண்டும்போல இருந்தது. முல்லைப் பண்ணைப் பாடினான். அவனது பாடலை இரசித்தவாறே மனைவி முல்லைப் பூக்களைக் கொய்வதில் ஈடுபட்டிருந்தாள். கொய்த மலர்களை மாலையாகக் கட்டினாள். கட்டிய மாலையில் ஒரு துண்டைக் கணவனின் மடியில் இருந்த குழந்தையின் தலையில் சூட்டினாள். கணவன் இந்தக் காட்சியைக் கண்டு உள்ளார மகிழ்ந்தான். *(ஐங்குறுநூறு 408)*.

குழந்தை இன்பச் சிறப்பைக் காண நாம் சங்க காலத்துக்குச் செல்ல வேண்டுமா என்ன? இக்காலத் தாய் ஒருத்தியின் இன்பப் பாடல் ஒன்று இதோ:

ஆய கலையே அன்பு மகனே
அம்மாவைக் கொஞ்சடா கொஞ்சு
கோயிற் சிலையே கோப்பெரு வேந்தே
கொஞ்சடா அம்மாவை கொஞ்சு !

நான்பெற்ற செல்வம் நாடரும் செல்வம்
நாளைய நம்பிக்கைச் செல்வம்
வான்மதி வந்து மடியிற் சிரிக்கும்
மாதவ மாணிக்கச் செல்வம் !



தாமரை மேனி சாகச மானி
தாரணி ஆளப் பிறந்தான்
தேமது ரந்தான் செந்தமி ழன்தான்
சிங்கார வேலன் இவன்தான் ! ( ஆய கலையே...)

அம்பொன் மணியே ஆயிரம் முத்தே
ஆரமுதக் கடல் அன்பே
கம்பன் கவியே கற்பகப் பூவே
காதல் கனிந்த கொழுந்தே !

ஆகாய ஆறோ அக்கினிக் குஞ்சோ
யாரிவன் ஆற்றலைக் கண்டார்
தாகத்தைத் தீர்ப்பான் தமிழரைக் காப்பான்
சந்ததிக்குப் புகழ் சேர்ப்பான் ! (ஆய கலையே..)

கண்களைப் பார்பார் கண்ணனைப் போல்வான்
கைகளைப் பாரிவன் பாரி
விண்ணில் நடக்கும் கால்களைப் பார்பார்
விந்தைகள் செய்யப் பிறந்தான் !

கரிகாலன் தானோ தமிழ் மக்கள் நாளும்
கண்ணெனப் போற்றும் தலைவன்
பிரபாகரனோ தமிழீழந் தன்னைப்
பெற்றுத் தரப் பிறந்தானோ !

ஒளியைப் பரப்பி உலகை விளக்க
உதிக்கின்ற சூரியன் போலே
எழுக எழுக வாழ்வு சிறக்க
எடுத்தடி வையடா மகனே !

கண்டுகண் டுள்ளக் காலம் முழுதும்
காவடி ஆடலாம் கண்ணே
குண்டுப் பெடியா கோமள வாயால்
கொஞ்சு கொஞ்சு கொஞ்சு கொஞ்சு ! ( ஆய கலையே...)

( வி. கந்தவனம்: ஓ கனடா!)

19

# அன்னப் பறவை வளர்த்த அற்புதக் காதல்

வளங்கள் நிறைந்த நிடத நாட்டையுடையவன் நள மகாராசன். அவனது வெண்கொற்றக் குடைநிழலிலே கிளியும் பருந்தும் தமது பகைமையை மறந்து ஒரே கூட்டிலே ஒற்றுமையாக வாழும் இயல்புடையன. சிறந்த அறங்களை வளர்த்துத் தனது மக்களைச் சீரோடும் சிறப்போடும் பாதுகாத்து வந்த மன்னன் வாழ்க்கையிலே அதிசய அன்னப் பறவை ஒன்று குறுக்கிட்டது.

அழகிய அந்த அன்னப் பறவை, 'உனக்குப் பொருத்தமானவள் ஒருத்தி இருக்கின்றாள். அவள் தமயந்தி என்ற பெயருடைய தையலாள். விதர்ப்ப நாட்டு அரசன் வீமன் பெற்றெடுத்த மென்கொடி. அவள் நாணம், மடம், அச்சம், பயிர்ப்பு ஆகிய நால்வகைக் குணங்களைத் தனது பாதுகாப்புப் படைகளாகவும், ஐந்து புலன்களை நல்ல அமைச்சர்களாகவும், ஆர்க்கும் சிலம்பை அழகிய முரசமாகவும், கண்களை வேற் படையும் வாட்படையுமாகவும் கொண்டு தனது முகமாகிய வெண்ணிலவுக் குடையின்கீழ் பெண்மை அரசை நடத்துகின்ற பெருமையுடையவள்' என்றெல்லாம் சொல்லிற்று.

பெண்ணுக்கு வேண்டும் இயல்புகளையும் மனக்கட்டுப்பாட்டையும் கற்பைக் காக்கும் திறனையும் விளக்கும் புகழேந்திப் புலவரின் அந்தத் தமிழேந்து பாடல் இது:

நாற்குணமும் நாற்படையா ஐம்புலனும் நல்லமைச்சா
ஆர்க்கும் சிலம்பே அணிமுரசா - வேற்படையும்
வாளுமே கண்ணா வதன மதிக்குடைக்கீழ்
ஆளுமே பெண்மை அரசு. (நள வெண்பா 39)

அவற்றையெல்லாம் கேட்ட மன்னனுக்குத் தமயந்திபால் காதல் மலர்ந்தது. 'என் காதலை அவளுக்குச் சென்று கூறுவாயா?' என்று கேளாமற் கெஞ்சினான் மன்னன்.

அன்னம் பறந்து சென்று தமயந்திக்கு நளமகாராசன் மகிமைகளை விளக்கியது. 'செம்மனத்தான், தண்ணளியாளன், செங்கோலான், மங்கையர்கள் தம் மனத்தை வாங்கும் தடந்தோளான், அறங்கிடந்த நெஞ்சன், அருள் ஒழுகும் கண்ணான்,

திண்தோள் வலிமையுடையான், அவனே உனக்குப் பொருத்தமானவன்' எனக் கூறியது மட்டுமன்றி, அவன் அவள்மீது ஏற்கனவே கொண்டுள்ள காதலையும் காதிலே போட்டு வைத்தது.

அது கேட்ட மங்கை மயங்கி, தன்னிலைமையையும் சென்று உரைக்கும்படி அன்னத்தை ஏவினாள்.

வாவி யுறையும் மடவனமே என்னுடைய
ஆவி உவந்தளித்தாய் ஆதியால் - காவினிடைத்
தேர்வேந்தற் கென்னிலைமை சென்றுரைத்தி என்றுரைத்தாள்
பார்வேந்தன் பாவை பதைத்து. (நள வெண்பா 57)

தமயந்தியைக் காதல் நோய் வாட்டியது. அதனை அறியாத தோழியர் அவளைப் பெற்ற தாய்க்கு, அவள் மகளின் மேனியில் என்றுமில்லாதவாறு வேறுபாடுகள் தோன்றியுள்ளன என்று அறிவிக்க, அதனை அவள் தன் நாயகனுக்குத் தெரிவித்தாள்.

நாயகனாகிய வீமராசர் மகளின் மாளிகைக்குச் சென்று, நிலைமையைப் புரிந்து கொண்டு, மகளின் சுயம்வரத்துக்கான ஏற்பாட்டை மேற்கொண்டார்.

இதற்கிடையில் அன்னப் பறவை நளனிடம் திரும்பவந்து தமயந்தியும் காதல் வயப்பட்டாள் எனச் சொல்லிற்று. அது கேட்ட மன்னன், கோதைபால் மேலும் காதல் கொண்டு மயங்கலுற்றான். எரி தழலிற் பட்ட தளிரைப்போல வதங்கினான்; குழியிலே வீழ்ந்து வெளியேறமாட்டாத யானையைப் போல காதல் குழியிற் கிடந்து அழுந்தினான்.

சுயம்வரச் செய்திகேட்டு விதர்ப்ப நாட்டுக்கு மன்னர் பலர் விரைந்தனர். நளனும் சென்றான். வானுலகத்திலிருந்து தேவர்கள் சிலருடன் தேவேந்திரனும் வந்து கொண்டிருந்தான். வழியிலே தேவேந்திரன் நளனைச் சந்தித்தான். தனக்கு ஓர் உதவி செய்யும் வண்ணம் நளனை வேண்டினான். நளனும் என்ன உதவி என்று கேளாமலே இசைந்துவிட்டான்.

'நீ வீமராசன் மகளிடம் சென்று தேவர்களாகிய எங்களில் ஒருவருக்கு மாலை சூட்டுமாறு சொல்வாயாக!' என்று இந்திரன் கேட்கவும் நளன் திகைத்தான். எனினும் தேவர்கள் பணியை முதன்மையாகக் கொள்வதே சிறந்த அறம் ஆதலால் அந்த அறத்தைச் செய்வதே கடமை எனத் துணிந்தான். கடமைக்கும் காதலுக்கும் இடையில் தத்தளித்துப் பின்னர் ஒருவாறு தெளிந்தான்.

இந்திரன் வரத்தால் எவரும் காணாதவாறு தமயந்தியின் மாளிகை போய்ச்



சேர்ந்தான் நளன். அங்கே இருவர் கண்களும் தம்முள் கலந்தன. அவள் அவன் அழகில் மயங்கி நின்றாள். அவனைக் கட்டித் தழுவ வேண்டும்போல் இருந்தது அவளுக்கு. ஆனாலும் நாணம் அவளைத் தடுத்தது.

அவனோ தனது காதலைக் கடமை உணர்வினால் அணைத்துக்கொண்டு விடயத்தை வெளிப்படுத்தினான். அவன் சொன்னதைக் கேட்டு அதிர்ச்சியுற்ற தமயந்தி, 'மன்னவனே இந்தச் சுயம்வரமே நின்பொருட்டுத்தான். இருந்தாலும் தேவர்களையும் வரச்சொல்' என்றாள். அது கேட்ட தேவர்கள் மிக்க மகிழ்ச்சியுற்று நளமகாராசன் வடிவிலே சுயம்வர மண்டபத்தில் அவன் பக்கமாக வீற்றிருந்தனர்.

மண்டபத்தில் மாலையுடன் தமயந்தி வந்தாள். மன்னவரைச் சேடி அறிமுகம் செய்துவரக் கேட்டுக்கொண்டே வந்தாள். நளன் பக்கம் வந்தபோது அவனைப்போல வேறு சிலரும் இருக்கக் கண்டு அவளது உள்ளம் ஊசலாடியது. எனினும் விவேகத்தால் தனது காதலைக் காப்பாற்றிக்கொண்டாள். கண் இமைத்தலாலும் கால்கள் நிலத்திலே படிவதாலும் நளனை அடையாளம் கண்டு அவனுக்கே பொன்மாலை சூட்டினாள். விண்ணரசர் எல்லாரும் வெட்கமுற்றார்.

விண்ணரசர் எல்லாரும் வெள்கி மனஞ்சுளிக்கக்
கண்ணகன் ஞாலம் களிகூர - மண்ணரசர்
வன்மாலை தம்மனத்தே சூட வயவேந்தைப்
பொன்மாலை சூட்டினாள் பொன். *(நளவெண்பா 161)*

## 20

# வனத்தின் வனப்பு

அவள் குறுநில மன்னனின் மகள்.

அவன் அரச பரம்பரையல்லன். ஆனால் அரசனை யொத்த அழகும் ஆற்றலும் உள்ளவன்.

அன்றொருநாள் தனது தோழியுடன் உலாச் செல்கையில் அவனை அவள் காண நேர்ந்தது. அவன் அழகு அவள் கண்களைப் பறித்தது. அவனும் நோக்கினான். இருவர் கண்களும் சந்தித்தன.

தோழியின் உதவியால் அவர்கள் சந்திப்புகள் தொடர்ந்தன.

அவன் அவளைத் திருமணஞ் செய்ய முன்வந்தான். அவளின் பெற்றோர் எதிர்த்தனர். காலம் கரைந்தது. காதல் வளர்ந்தது. அரசகுமாரன் ஒருவனுக்குத் தன்னைக் கொடுக்கத் தந்தை முயல்வதை அவள் அறிந்தாள். தோழி மூலம் செய்தியைத் தலைவனுக்குத் தெரிவித்தாள்.

தலைவன் இரவில் அவளை அழைத்துச் செல்ல வந்தான். அவளும் உடன்பட்டாள்.

பொழுது புலர்ந்தது. அவர்கள் அடர்த்தியான காட்டு வழியாகச் சென்று கொண்டிருந்தனர். தனது காதலிக்கு வழிநடை வருத்தம் தெரியாமல் இருக்க, காட்டின் அழகினைக் கூறி அவளுக்குத் தெம்பு ஊட்டினான் தலைவன்:

எம் இளமகளே! நீ வாழ்வாயாக! அதோ அந்த முருக்கை மரத்தைப் பார்த்தாயா? வாள்போலும் வரிகளையுடைய வலிய புலியினது கொல்லும் நகத்தைப் போலும் உள்ளன அவற்றின் முட்கள். அவற்றின் சிவந்த முகைகள் இதழ் விரிந்தன. அவற்றில் வண்டு மொய்க்க, வாடிய பூக்கள் கீழே உதிர்ந்தன. செழித்த அழகும் சிறந்த அணியினையும் உடைய மகளிரது முலையினைப்போல முகைகள் விரிந்த கோங்கின் பூக்களோடு கொத்துக் கொத்தான புனலிப் பூக்களும் கூடிக் கலந்துள்ளன.

பரவி வளர்ந்த இனிய குளிர்ச்சி பொருந்திய பாதிரி மரத்தினது அழகிய கிளைகளிலிருந்து உதிர்ந்த பூக்களோடு அயல் மரங்களின் பூக்களும் தாவிக் கலந்தன. இன்னும் வெண்கடப்பம் பூக்களும் அவற்றோடு விரவிக் கலந்துள்ளன. தொழுவதற்குரிய தெய்வம் விளங்குகின்ற கோயிலினிடத்தே கலந்து கிடக்கும் பூக்களைப் போல, இக்காடும் நல்ல அழகுடன், எமக்கு விருப்ப மூட்டும் வகையில் விளங்குவதையும் காண்பாயாக.

மேலும் உனது தந்தை பகைவரை எதிர்க்கும் போர்க்களத்திலே பாய்ந்த பூண் சிதைந்த தந்தங்களையுடைய களிறுகளைப் போன்று பெரிய குன்றுகளையும், அக்களிறுகளைச் சூழ்ந்த பெண் யானைகளைப் போன்று சிறிய குன்றுகளையும் இக்காடு கொண்டிருப்பதையும் காண்பாயாக!

வாள்வரி வயமான் கோள் உகிர் அன்ன
செம்முகை அவிழ்ந்த முள்முதிர் முருக்கின்
சிதரார் செம்மல் தா அய் மதர் எழில்
மாண் இழை மகளிர் பூண் உடை முலையின்
முகைபிணி அவிழ்ந்த கோங்கமொடு அசைஇ நனை
அதிரல் பரந்த அம்தண் பாதிரி
உதிர்வீ அம்சினை தாஅய் எதிர்லீ
மராஅ மலரொடு விரா அய்ப் பராஅம்
அணங்குடை நகரின் மணந்த பூவின்
நன்றே கானம் நயவரும் அம்ம
கண்சின் வாழியோ குறுமகள் நுந்தை
அடுகளம் பாய்ந்த தொடி சிதை மருப்பின்
பிடிமிடை களிற்றின் தோன்றும்
குறுநெடும் துணைய குன்றமும் உடைத்தே! (அகநானூறு 99)

(வாள்வரி - வாள்போலும் கோடுகள்; வய மான் - வலிய புலி; கோள் உகிர் - கொல்லும் நகம்; அதிரல் - புனலிப் பூ; அணங்கு - தெய்வம்; நயவரும் - விருப்பந் தரும்; தொடி - யானையின் தந்தத்துக்கு அணியும் பூண்; பிடி - பெண் யானை; குறுநெடுந் துணைய குன்றம் - சிறிதும் பெரிதுமான குன்றங்கள்)

காதலியின் வழிநடைக் களைப்பினைப் போக்க காட்டின் அழகைத் தலைவன் வருணித்தானாயினும் பூவினங்கள் கலந்து விழுந்திருப்பதைக் காட்டியதில் கருத்தொன்று கலந்திருக்கின்றது. அவள் அரச குலத்தவள். அவன் வேறு குலத்தவன். இருவரும் கூடி வாழ்வதில் குற்றமில்லை என்பதை உணர்த்தும் கருத்தாக உள்ளது அது. இந்தக் கருத்தும் அவளுக்குத் தென்பு ஊட்டியிருத்தல் வேண்டும்.



இலக்கியத்தில் தலைவி தனது வீட்டைவிட்டுத் தலைவனோடு வாழச் செல்வது உடன்போக்கு எனப்படும்.

அவளது தந்தை படைகளோடு சூழ்ந்து அவர்களின் உடன்போக்கைத் தடுக்க முயன்றான். அது கண்ட மகளோ தந்தையின் செயலை எதிர்ப்பாள் போல தன் காதலனின் கரங்களைப் பற்றி நின்றாள். அவளது உறுதிப்பாடு தந்தையின் மனத்தை மாற்றியது. தனது மகளின் செயல் அறநெறிப் பட்டதாக இருந்ததை அவன் உணர்ந்தான். அதனால் அவர்கள் உடன்போக்குக்கு உடன்பட்டுத் தனது ஊர் திரும்பினான் மன்னன்.

தலைவியைத் தன் பதிக்கு உடன்கொண்டு சென்ற தலைவன் சில நாட்களின்பின் அவளை முறையாக மணந்துகொண்டு இல்லற வாழ்வில் ஈடுபட்டான்.

இப்பாடல் உணர்த்துவது போன்று களவொழுக்கத்துக்குரிய தலைவியை தலைவன் உடன்கொண்டு செல்லும் வழக்கம் பழந்தமிழர் மத்தியில் நிலவிற்று. எதிர்ப்புகள், பழிச்சொற்கள் என்பனவும் இருந்தன. அவற்றைக் காதலரின் உறுதிப்பாடும், பிற்பாடு அவர்கள் மேற்கொள்ளும் சிறந்த வாழ்வும் முறியடித்தன. உலகியலில் இதனை உற்றுணர்ந்த சான்றோர் உடன்போக்கும் அறநெறிப்பட்டதே என வலியுறுத்தினர். இதற்கு,

சுரநனி இனிய வாகுக தில்ல
அறநெறி இதுவெனத் தெளிந்த என்
பிறைநுதற் குறுமகள் போகிய சுரனே (ஐங்குறுநூறு 371)

என்னும் பாடல் நல்ல எடுத்துக்காட்டு.

மேலும், விரும்பிய ஆடவன் ஒருவனுடன் சென்று வாழ்க்கை நடத்தும் உரிமை அக்காலத் தமிழ்ப் பெண்களுக்கு இருந்ததையும் உடன்போக்கு வழக்கம் உணர்த்தி நிற்கின்றது.

# 21

# புணர்ச்சி இன்பம்

ஆயர்பாடியில் ஒரு பெரிய மாட்டுப் பட்டி. அங்கே ஏறு தழுவல் நிகழ்ச்சி (காளையடக்கும் விளையாட்டு) நடைபெறவிருந்தது. அதனைக் காண அக் கிராமம் முழுவதுமே திரண்டு எழுந்தது. ஏறு தழுவும் ஆர்வத்துடன் கட்டிளம் காளையர் பலர் பலவிதமான மலர் மாலைகளை அணிந்தவாறு ஒன்று திரண்டனர். அவர்களின் வீரத்தைக் கண்டு களிக்க வந்த ஆயர் குலத்து அழகிய நங்கையர் (ஆய்ச்சியர்) பரண்களின்மீது அமர்ந்திருந்தனர்.

விளையாட்டு வேளையும் நெருங்கிற்று. அரங்கத்துக்கு அடங்காக் காளைகள் ஏவப்பட்டன. அவை கொழுத்துப் பருத்துக் காணப்பட்டன. வெள்ளை, சிவப்பு, கருப்பு எனப் பலவகை நிறங்களைக் கொண்ட அவ் வெருதுகளின் கொம்புகள் கொந்தாலியைப்போலக் கூரியதாகச் சீவப்பட்டிருந்தன. ஊழித்தீ போல அவை சுழன்று ஓடித் திரிந்தன.

அஞ்சாத வீரர் அச்சந்தரும் மாடுகள் மீது பாய்ந்து அடக்க முயன்றனர். ஒன்று ஒருவனைக் கொம்பால் குத்தி விழுத்தியது. ஒன்று ஒருவனின் குடலைக் கிழித்தது. இன்னொன்று ஏற முயன்றவர்களை இடறி விழுத்தியவாறு ஓடித் திரிந்தது. எருதுகளின் கொம்புகள் இரத்தத்தால் சிவப்பேறின. காளையர் பலர் காயமுற்றனர். காயத்தையோ பாயும் குருதியையோ பொருட்படுத்தாது சில வீரர் தொடர்ந்தும் ஏறுதழுவலில் ஈடுபட்டிருந்தனர்.

அந்த நேரத்தில் இந்த நிகழ்ச்சி நடந்ததாகத் தோழிக்குச் சொல்கின்றாள் தலைவி:

தலைவி: ஏடி, ஆட்டிடையருக்கும் மாட்டிடையருக்கும், கொல்லும் இயல்புடைய ஏறுகளைத் தழுவுதலே காரியமென எங்கள் சுற்றத்தார் தொழுவத்திலே காளைகளைச் செலுத்திவிட்டார். அத் தொழுவிடத்தே முரட்டுக் குணம் மிகுந்த செவி மறையாக இருந்த ஏற்றை அடக்கித் தழுவினான் ஒரு வீரன். அவனின் தலையிலே கிடந்த முல்லைப்பூ மாலையைக் கொம்பிலே எடுத்துக்கொண்டு அந்த ஏறு துள்ளிக் குதிக்கையில் அதன் ஒரு பகுதி என் தலையில் வந்து விழுந்தது. இழந்த பொருளை மீண்டும் பெற்றாரைப்போல் நான் (மிகவும் மகிழ்ந்து) அப் பூந்தொடையை எடுத்துத்

தலையிலே சூடிக்கொண்டேன். அதுபற்றி என் தாய் கேட்டால் என்ன பதிலைச் சொல்ல?

தோழி: அந்தப் பூ, திருமணம் செய்ய விரும்பாத ஒருவனின் பூ வன்றே? தாய் கேட்டால் அதற்கு நான் செய்யத் தக்க தீர்வு என்ன? பேசாமல், சும்மா இரு.

தலைவி: சூடிய பூ மயிரில் மணத்தை ஏற்படுத்தும் என்பதை அறியாது சூடிவிட்டேன். 'அயலான் பூவை மயலால் முடித்தாள்' எனத் தாய் கேட்கின் நான் அவள் கோபத்துக்கு ஆளாகமல் தப்ப முடியுமோ?

தோழி: சரி சரி, விடு கவலையை. நீ செய்த தவறெல்லாம் இனி அற்றுப் போகும்.

தலைவி: ஓ ஓ, எவ்வாறு அவை நீங்கும், சொல்லு, சொல்லு?

தோழி: அவன் ஆயர் மகனாயின், நீ ஆயர் குலத்துப் பெண்ணாயின், அவன் உன்னை விரும்பி யிருப்பானாயின், நீ அவனை விரும்பி இருப்பாயாகில், தாய் மிகவும் வருந்துவதற்குக் காரணம் எதுவும் இல்லை என்பதை அறிவாயாக.

தலைவி: அன்னை கருத்து இதுவென உனது மனம் சொல்லுமாயின் அவள் என்னை நோகாள்.

தோழி: இன்னுமா உனக்கு விளங்கவில்லை? ஆயர் மகனையும் காதலிக்கிறாய், தாய் கோபிப்பாள் என்றும் அஞ்சுகிறாய். அப்படியாயின், நீ கொண்ட காதல் நோய்க்கு மருந்தொன்றும் இல்லை என்பதை விளங்கிக்கொள்.

தலைவி: மருந்து இல்லையேல் நான் வருந்தாமல் இருப்பேனோ?

தோழி: இனி நீ வருந்த வேண்டியதில்லை! உன் தாய்க்கு உண்மை தெரிந்து விட்டது. கழுவி அழுக்கில்லாதிருந்த உனது கூந்தலில் வைக்க அவன்தான் பூவைத் தந்தான் என்று பிறர்மூலம் தாய் அறிந்துவிட்டாள். அதன்பின் உன் தந்தையோடும் தமயன்மார் எல்லாரோடும் கலந்து ஆலோசித்திருக்கின்றாள். அவர்கள் அனைவரும் தெய்வமாகிய திருமாலே இவளுக்கு இவனைத் திண்ணிதாகக் காட்டியுள்ளதென மகிழ்ந்து பேசியுள்ளனர். அதனால், களவொழுக்கத்தைப் பிறர் அறியாமல் ஒழுகவல்ல அந்தத் தலைவனுக்கே உன்னைக் கொடுக்க முடிவு செய்துள்ளனர்.

இந்த உரையாடலைத் தரும் கலித்தொகைப் பாடல் இது:

எல்லா இஃதொன்று கூறு குறும்பிவர்
புல்லினத் தார்க்கும் குடஞ்சுட் டவர்க்கும் எம்



கொல்வேறு கோடல் குறையெனக் கோவினத்தார்
பல்வேறு பெய்தார் தொழூஉ

தொழுவத்து,
சில்லைச் செவிமறைக் கொண்ட அவன் சென்னிக் குவிமுல்லைக்
கோட்டங்காழ் கோட்டின் எடுத்துக்கொண்டு ஆட்டிய
ஏழை யிரும்புகர் பொங்க அப் பூ வந்து என்
கூழையுள் வீழ்ந்தன்று மன்

அதனை, கெடுத்தது பெற்றார்போல் கொண்டு யான் முடித்தது
கேட்டனள் என்பவோ யாய்
இஃதொன்று கூறு
கேட்டால் எவன்செய்ய வேண்டுமோ மற்றிகா
அவன்கண்ணி யன்றோ அது

பெய்போது அறியாத்தன் கூழையுள் ஏதிலான்
கைபுனை கண்ணி முடித்தாள் என்று யாய் கேட்பின்
செய்வதில் ஆகுமோ மற்று

எல்லாத் தவறும் அறும்
ஓஒ அஃதது மாறு
ஆயர் மகனாயின் ஆயமகள் நீயாயின்
நின்வெய்யன் ஆயின் அவன்வெய்யை நீயாயின்
நின்னைநோ தக்கதோ இல்லைமன்
நின் நெஞ்சம்
அன்னைநெஞ்சு ஆகப் பெறின்

அன்னையோ,
ஆயர் மகனையும் காதலை கைம்மிக்க
ஞாயையும் அஞ்சுதி யாயின் அரிதரோ
நீ உற்ற நோய்க்கு மருந்து

மருந்து இன்றி யான் உற்ற துயராயின் எல்லா
வருந்துவேன் அல்லனோ யான்

வருந்தாதி,
மண்ணிமா சற்றநின் கூழையுள் ஏறவன்
கண்ணிதந் திட்ட தெனக்கேட்டுத் திண்ணிதாத்
தெய்வமால் காட்டிற்று இவட்கென் நின்னை அப்

பொய்யில் பொதுவற்கு அடைசூழ்ந்தார் தந்தையோடு
ஐயன்மார் எல்லாம் ஒருங்கு. (கலித்தொகை: முல்லைக்கலி 7)

(குறும்பு இவர் - முல்லைநிலத்து ஊரில் உள்ள; புல்லினத்தார் - ஆட்டு இடையர்; குறையென - காரியமென; சில்லை - முரண்பாடும்; கோட்டு அம் காழ் - வளைவினை யுடைய அழகிய பூமாலை; கோடு - கொம்பு; ஏழை இரும் புகர் பொங்க - ஏழையாகிய பெரிய மறை ஏறு தள்ள; கூழை - கூந்தல்; இகா - தாழாத, விரும்பாத; ஏதிலான் - அயலான்; கண்ணி பூ வெய்தல் - விரும்புதல்; அன்னையோ - அன்ன தன்மையோ, இன்னும் விளங்கவில்லையோ; மண்ணி - கழுவி, மாசு அற்ற, அழுக்கு இல்லாத; திண்ணிதா - உறுதியான; மால் - திருமால், முல்லை நிலத்துத் தெய்வம்; பொதுவன் - இடையன்; அடை சூழ்ந்தார் - கொடுக்கத் தீர்மானித்தார்)

இப்பாடல் கூறும் காதல் நிகழ்வு முல்லை நிலத்துக்குரியது. முல்லை நிலம், காடும், காடு சார்ந்த நிலப் பரப்பும் கொண்டது. பண்ணை வளர்ப்பும் வேட்டை ஆடலும் இங்கு வாழும் மக்களின் பிரதான தொழில்களாக இருந்தன. பண்ணை வளர்ப்பினைச் செய்யும் ஆயர் குலத்தவரின் விளையாட்டுகளில் ஏறு தழுவுதலும் ஒன்று.

இன்றும் தமிழ் நாட்டின் பல கிராமங்களில் மாட்டுச் சவாரியும் காளை யடக்கும் விளையாட்டும் நடைபெற்று வருகின்றன. அமெரிக்கா, ஸ்பெயின் போன்ற நாடுகளிலும் இவ் வகை விளையாட்டுகள் போட்டி முறையில் நடத்தப்பட்டு வருகின்றன.

ஏறு தழுவுதல் பண்டைய தமிழ் மக்களின் மண முறைகளில் ஒன்றாகவும் இருந்தது. அதாவது இந்தக் காளையை அடக்கினானுக்கு இப் பெண் என்ற வகையிலும் ஏறு தழுவல் நடத்தப்பட்டது.

இந்தப் பாடலில் தலைவி காதல் ஒழுக்கத்தில் தான் அறத்தொடு நிற்கும் நிலையைத் தோழிக்கு வெளிப்படுத்த, தலைவியை அவள் விரும்பியவனுக்கே கொடுக்கப் பெற்றோரும் தமயன்மாரும் தீர்மானித்துள்ள நற்செய்தியை தோழி அவளுக்குக் கூறுகின்றாள்.

தோழிக்கு இது ஏற்கனவே தெரியுமாயினும் தலைவிக்கு ஆவலைத் தூண்டும் வகையில் கதையை வளர்த்து, அவளின் உளப்பாங்கினை நன்கு அறிந்துகொண்டு, ஈற்றில் அவளுக்குப் புணர்ச்சி இன்பம் தோன்றும் வகையில் அந்த இனிய செய்தியைச் சொல்லிய தோழியின் பேச்சு வன்மை நயக்கத் தக்கது.

இவ்விதம் தலைவியின் சுற்றத்தார் தலைவனுக்கு அவளை மணம் புரிவிக்க இசையும் அகத்துறை, வரைவுடன்படுதல் எனப்படும்.

22

# இரவில் வரவேண்டாம்!

நிலம், மலையும் மலைசார்ந்த இடமுமாகிய குறிஞ்சி. இடம், தினைப்புனம்.

தினைப்புனத்தைக் காவல் செய்துகொண்டு நின்றாள் அந்தப் பருவ மங்கை. அவள் எதிரிலே தோன்றினான் ஒரு கட்டிளங் காளை.

கண்கள் பேசின. உள்ளங்கள் இணைந்து கொண்டன.

சந்திப்புகள் தொடர்ந்தன. காதல் வளர்ந்தது.

அன்றொருநாள் அவளைக் காணவேண்டிப் பகற் பொழுதிலே, வழக்கமாகச் சந்திக்கும் இடத்திலே அவன் ஆவலோடு காத்திருந்தான்.

அவளைக் காணவில்லை. ஏன் வரவில்லை? அவளுக்கு என்ன நேர்ந்தது? அவன் மனம் துடித்தது.

தலைவியின் தோழி வந்து, ‘தினை முற்றி விட்டதால் புனம் காக்க வேண்டிய தில்லை என்று பெற்றோர் அவளை வீட்டில் இருக்கச் சொல்லிவிட்டனர். அதனால் இனி நீ அவளைப் பகலில் பார்க்க முடியாது’ என்றாள்.

அதற்கு அவன் இரவில் சந்திக்க முடியுமோ என்றான்.

அதுவும் முடியாது என்னும் வகையில் தோழி அளித்த பதில் இது:

தலைவியின் தாயோ தன் கண்ணிலும் மேலாக மகள்மீது அன்பு கொண்டவள். தந்தையும் அவளைக் கண்ணும் கருத்துமாகக் காப்பவன். அவள் எங்காவது நடந்து போனாற்கூட, ‘சின்ன மகளே, உன் சிறிய அடிகள் சிவக்கும் வண்ணம் எவ்விடம் செல்கிறாய்?’ என்று கேட்பவன்.

யாமோ, பிரிவு என்பதே இல்லாமல் இசைவானதும் குற்றமற்றதுமான நட்பினால், ஒருயிரும் ஈர் உடலுமான பறவைபோல அன்புடையவராக இருக்கின்றோம்.



தினைப்புனம் காக்கும் மகளிர், ஓயாது சத்தமிட்டுத் துரத்துகையில், கிளிகளும் தமது இனத்தைக் கூவி அழைக்கும். பலா மரத்தின் பெரிய கொப்புகளில் அணில்கள் ஆடிக்கொண்டிருக்கும். பெரும் பயன்களாக விளங்கும் பலாப் பழங்களைக் கொள்வதற்குக் குறவர் குடிசை அமைத்திருப்பர். வேங்கை மரங்கள் தேன் மிகுந்த பூக்களைச் சொரிந்து குடிசைக் கூரையை மறைத்திருக்கும்.

பூக்கள் மறைத்த குடிசைத் தோற்றத்தைப் புலி என்று நினைத்து, புள்ளிமுக யானை அஞ்சி விரைந்து செல்லும். அதன் வேகத்தில் மழைவளம் மிகுந்த பக்கத்து மலைச் சாரல்களில் வளர்ந்துள்ள மூங்கில்கள் முறிந்து சிதையும்.

அவ்விதமான நல்ல மலைநாட்டுக்கு உரியவனே, இரவிலே நீ வருவதாயின் மெல்லிய இயல்புகளையுடைய அவள் உனக்கு வரும் ஆபத்துகளை எண்ணி வருந்தி உயிர் வாழ்ந்திராள்.

*யாயே, கண்ணினும் கடும் காதலளே*
*எந்தையும் நிலனுரப் பெறா அன், சீறடி சிவப்ப*
*எவன் இல குறுமகள் இயங்குதி என்னும்.*
*யாமே, பிரிவு இன்று இணைந்த துவரா நட்பின்*
*இருதலைப் புள்ளின் ஓர் உயிரம்மே!*

*ஏனல் அம் காவலர் ஆனாது ஆர்த்தொறும்*
*கிளிவிளி பயிற்றும் வெளில் ஆடு பெருஞ்சினை*
*விழுக்கோட் பலவின் பழுப்பயம் கொண்மார்,*
*குறவர் ஊன்றிய குரம்பை புதைய,*
*வேங்கை தாஅய தேம்பாய் தோற்றம்*
*புலிசெத்து வெரீ இய புகர்முக வேழம்*
*மழைபடு சிலம்பில் கழைபடப் பெயரும்*
*நல்வரை நாட! நீ வரின்,*
*மெல்லியல் ஓரும் தான் வாழலளே!* *(அகநானூறு 12)*

(யாய் - தாய்; துவரா நட்பு - கசப்பில்லாத நட்பு; வெளில் - அணில்; விழுக்கோட் பலவு - பெரிய காய்களையுடைய பலா மரம்; குரம்பை - குடிசை; தேம் - தேன்; புலி செத்து - புலி என்று நினைத்து; கழை - மூங்கில்; ஓரும் மெல்லியல் - தீங்குகளை நினைந்து வருந்தும் மென்மை மனம் படைத்த தலைவி, துயர் பொறுக்க மாட்டாதவள்)

இப் பாடலில் உள்ளுறையாக அமைந்துள்ள பொருளைக் கவனித்தல் வேண்டும். ‘‘தலைவியின் பெற்றோர் அவள்மீது அன்புடையவராக இருப்பதால்

அவள் விருப்பத்துக்கு மாறாக நடக்கமாட்டார்கள். அப்படி இருக்க, அஞ்சக்கூடாத குடிசைக்கு அஞ்சும் யானைபோல நீ வீணாக அவள் பெற்றோருக்கு அஞ்சுகின்றாய். யானை மூங்கில்களை நாசம் செய்வது போல மூங்கிலை ஒத்த தோள்களையுடைய மெல்லியளாகிய உன் தலைவிக்கு நீ பிரிவுத் துன்பத்தை விளைவிக்கின்றாய். எங்களுக்கும் கவலையை அளிக்கின்றாய். நீ இரவில் வருவதை அவள் விரும்பவில்லை."

இவ்விதம் தோழி கூறுவதனால், 'களவாக வந்து சந்திப்பதை விடுத்து ஊர் அறிய உன் காதலியைத் திருமணம் செய்து கொண்டு முறையாகக் குடித்தனம் நடத்து' என்று தலைவனுக்கு அவள் குறிப்பாக உணர்த்துகின்றாள் என்பது பொருள்.

23

# மணம் செய்வதே மருந்து

காதல் வாழ்க்கை எப்பொழுதுமே சீராகச் செல்வதில்லை. சங்கடங்கள் இடையிடையே ஏற்படுவது இயல்பு. அவை வரவுந்தான் வேண்டும். அவைதாம் காதலைச் சோதிக்கும் உரைகல். அவையே காதலை வளர்த்துச் செல்லும் ஏணிப் படிகள். ஊடலுக்குப் பின் கூடல் என்பார்களே, அதுபோல் காதலை முழுமையாக அனுபவிக்க வழிகோலும் வகையில் துன்பங்கள் அமைவதுண்டு.

காதலர், சண்டை சச்சரவுகளை வளரவிடுவதில்லை. அவற்றைச் சமாளித்து இன்பம் துய்ப்பதே அன்பு உள்ளங்களின் இயல்பாகும்.

காதலருக்கிடையில் வரக்கூடிய துன்பங்களில் பிரிவுத் துன்பம் தலையாயது. பிரிவு, பாலை நிலத்துக்குரிய ஒழுக்கமாயினும் பிற திணைகளிலும் வருவதற்குரிய சூழ்நிலைகள் அவ்வப்போது தோன்றுவதுண்டு.

கடலும் கடல் சார்ந்த இடமும் நெய்தல் எனப்படும். நெய்தல் மக்கள் நுளையர், நுளைச்சியர் எனவும் அவர்களின் தலைவர்கள் சேர்ப்பன், துறைவன், கொண்கன் எனவும் அழைக்கப்பட்டனர். மீன் பிடித்தலும் உப்பு விளைத்தலும் அவர்களின் பிரதான தொழில்கள்.

மீன் பிடித்தற்பொருட்டுப் பிரிவு நேரினும், அவை நெடுங்காலம் நீடிப் பதில்லை. எனினும் தலைவன் மீன் பிடிக்கச் சென்றபின் ஏற்படும் புயல், கடல் கொந்தளிப்பு போன்ற கடும் வானிலை மாற்றங்கள் தலைவிக்கு ஆற்றாமையை ஏற்படுத்தும். போர், வணிகம் போன்ற காரணங்களால் நிகழும் பிரிவு நீடிக்க வாய்ப்புகள் உண்டு. அந்நிலைமைகளும் தலைவிக்கும் தலைவனுக்கும் ஆற்றாமையைத் தோற்றுவிக்கும். அதனால் இரங்கல், நெய்தல் நிலத்தின் பொது ஒழுக்கமாயிற்று.

இந் நிலத்துத் தலைவியைப் பிரிந்திருக்கும் தலைவன் ஒருவனுக்கு இரங்கல் ஏற்படும் வகையில் நடந்த நிகழ்ச்சி ஒன்றைப் பின்வரும் கலித்தொகைப் பாடல் விளக்குகின்றது:

*மாமலர் முண்டகம் தில்லையோடு ஒருங்குடன்*
*கானல் அணிந்த உயர்மணல் எக்கர்மேல்*



சீர்மிகு சிறப்பினோன் மரமுதல் கைசேர்த்த
நீர்மலி கரகம்போல் பழந்தூங்கு முடத்தாழைப்
பூமலர்ந் தவைபோலப் புள்ளல்குந் துறைவ கேள்

ஆற்றுதல் என்பதொன்று அலந்தவர்க்கு உதவுதல்
போற்றுதல் என்பது புணர்ந்தாரைப் பிரியாமை
பண்பெனப் படுவது பாடறிந்து ஒழுகுதல்
அன்பெனப் படுவது தன்கிளை செறாமை
அறிவெனப் படுவது பேதையர் சொல்நோன்றல்

செறிவெனப் படுவது கூறியது மறாஅமை
நிறையெனப் படுவது மறைபிறர் அறியாமை
முறையெனப் படுவது கண்ணோடாது உயிர்வௌவல்
பொறையெனப் படுவது போற்றாரைப் பொறுத்தல்

ஆங்கு அதை அறிந்தனிர் ஆயின் என் தோழி
நல்நுதல் நலன் உண்டு துறத்தல் கொண்க
தீம்பால் உண்பவர் கொள்கலமட் வரைதல்
நின்றலை வருந்தியாள் துயரம்
சென்றனை களைமோ பூண்கநின் தேரே.

*(கலித்தொகை: நெய்தற்கலி 16)*

(முண்டகம் - கழிமுள்ளி; தில்லை - தில்லை மரம்; எக்கர் - மணல் திட்டி; சீர்மிகு சிறப்பினோன் - தட்சிணாமூர்த்தியாகிய சிவன்; மரம் - சிவன் இருந்த ஆல மரம்; கரகம் - கமண்டலம்; முடம் - கோணல்; புள்ளல் - குருகினம்; அலந்தவர் - வறியவர்; செறாமை - கெடுக்காமை; நோன்றல் - பொறுத்தல்; செறிவு - உறவு; மறை - மறைவான; முறை - நீதி; கண்ணோட்டம் - கருணை; வௌவல் - கொள்ளுதல்; நுதல் - நெற்றி; கொண்க - கொள்க)

தலைவனைப் பிரிந்த தலைவி ஆற்றாமையால் வருந்தினாள். அது கண்டு பொறுக்காத தோழி, தலைவியின் துயரைத் தலைவனுக்கு எடுத்துச் சொன்னாள்:

பெரு மலரையுடைய கழிமுள்ளியும் தில்லை மரமும் ஒருசேரச் சூழ்ந்த கடற்கரைக்கு அணியாகவுள்ளது பரந்த மணற் பரப்பு. அதன் ஒரு பக்கத்தே குவிந்த மணல் திட்டியிலே சீர்மிகுந்த சிறப்பினையுடைய தட்சிணா மூர்த்தியாகிய சிவன் இருந்த ஆலமரம் நிற்கின்றது. அவர் அதன் கீழ் இருப்பதற்கு முன்னதாக, தூக்கி வைத்த நீர்நிறைந்த கமண்டலத்தைப் போன்ற பழங்களையுடைய தாழை மரங்கள் அப்பால் உள்ளன. அத் தாழைகள் பூத்தாற்போல, நாரைகள் தாழைகள்மீது தங்கும். அத் தன்மைகளையுடைய நிலத்துத் துறைவனே, யான் கூறுவதைக் கேட்பாயாக!

இல்வாழ்க்கை நடத்துதல் என்பது வறியார்க்கு வேண்டியதைக் கொடுத்து உதவுதல். பேணுதல் என்பது கூடினாரைப் பிரியாது இருத்தல். மக்கட் பண்பு என்பது உலக இயல்பை அறிந்து ஒழுகுதல். அன்பு என்பது அறியாதார் சொல்லும் சொல்லைப் பொறுத்தல். உறவு என்று கூறப்படுவது கூறியதொன்றை மறவா திருத்தல். நிறை எனப்படுவது பிறர் குறைகளை மற்றவர்களுக்குச் சொல்லாது ஒழுகுதல். நீதி எனப்படுவது நமர் என்று கண்ணோட்டஞ் செய்யாது, செய்த குற்றத்துக்கு ஏற்ற தண்டனை அளித்தல். பொறுமை எனப்படுவது பகைவரையும் பொறுத்துக் கொள்ளுதல்.

அவ்விதமே அவற்றையெல்லாம் அறிந்து அதன்படி ஒழுகிவந்தீராயின் அவ்வொழுக்கத்துக்குத் தகுந்தாற்போல ஒன்று கூறுவேன், அறிந்து கொள்க!

என் தோழியின் அழகிய நெற்றியின் நலத்தை நுகர்ந்து அவளைத் துறத்தல் என்பது இனிய பாலை அருந்திவிட்டு, அருந்திய பால் பாத்திரத்தைக் கவிழ்த்து விடுதல் போன்றது. ஆகையினாலே, உன் பிரிவால் வருந்துகின்றவளை மணம் புரிந்து அவளின் துயரத்தைக் களைவாயாக. அதற்கு இப்பொழுதே உமது தேரில் குதிரைகளைப் பூட்டுவீராக!

இவ்விதம் தலைவியை மணம் புரிந்துகொள்ளுமாறு தோழி தலைவனை வற்புறுத்துகின்றாள். இத்தகைய அகத்துறை வரைவுகடாதல் எனப்படும்.

தோழியின் பேச்சிலே உள்ளுறை உவமையாக வுள்ள கருத்துகள், இலக்கிய நயத்தையுடையன. தலைவன் நெடுங்காலம் தலைவியைப் பிரிந்திருப்பதால், ஊர் அலர் தூற்றும். அவ்விதம் அலர் தூற்றுகின்றவருக்கு உவமையாக முள்ளுடைய கழிமுள்ளியையும் கொடிய தில்லை மரத்தையும் கொள்ளலாம்.

அடுத்து, குருகினமும் தலைவனுக்கு உவமையாக்கப்பட்டுள்ளது. மீன்களுக்கு (அவைகளைக் கொன்று தின்பதால்) தீமை செய்ய வல்ல கொடிய நாரைகள், தீமையற்ற தாழம்பூக்களைப் போற் காட்சியளிக்கின்றன. அவைபோல், தலைவிக்கு வருத்தம் உண்டாக்குகின்ற தலைவன் பிறருக்கு நல் மகனைப்போல் தென் படுகின்றான்.

மேலும், இப்பாடல் நல் வாழ்க்கைக்கு வேண்டிய அரிய கருத்துகள் பலவற்றைக் கொண்டிருப்பதையும் காண்கின்றோம். வாழ்க்கை வாழ்வதற்கே, எனின் தனி மனிதன் நடத்தை பிறருக்குத் துன்பம் விளைத்தல் ஆகாது. எல்லோரும் இன் புற்றிருக்கும் வகையில் மக்கள் கட்டுப்பாட்டுடனும் கடமை உணர்வுடனும் நடந்துகொள்ளல் வேண்டும் என்பன போன்ற அற நெறிகளைப் புகட்டும் இப்பாடல், நம் முன்னோர் வாழ்க்கை பற்றிக் கொண்டிருந்த கொள்கைகளைத் தொகுத்துக் கூறுவதாகவு முள்ளது.

24

# மணக்க வருகின்றான் தலைவன்

காதலர் எப்பொழுதும் ஒன்றாகவே இருக்க விரும்புவர். அதுவே காதலுக்குச் சிறப்புமாகும். ஒன்றாக இருத்தல் என்பது முறையாகத் திருமணத்தை முடித்துக் கொண்டு குடும்பம் நடத்துதல்.

அவள் அவனைக் காதலிக்கத் தொடங்கி நாட்கள் பலவாகிவிட்டன. அந்த ஊரிலேயே அவனைப் போன்ற ஆண் அழகன் எவரும் இல்லை. அதனால் அவன் அழகிலே அவள் மயங்கியது வியப்பு ஒன்றும் இல்லை. அவனும் அவள் அழகைப் பலவாறு புகழ்ந்து பேசினான்.

தொடக்கத்திலே பெற்றோருக்குத் தெரியாமல் அவனைச் சந்திப்பதும் பேசுவதும் எல்லாம் பெரும் கிளுகிளுப்பை அவளுக்கு ஊட்டின. ஒவ்வொரு சந்திப்பும் இன்பகரமான புதுப்புது அனுபவங்களை அளித்தன.

காதல் வளர வளர, அந்த அனுபவங்கள் சொந்தமாக வேண்டும் என்னும் எண்ணமும் வளர்ந்தது.

எத்தனை நாட்கள் சந்தித்தாலும், எவ்விதமாகப் பேசி மகிழ்ந்தாலும், சந்திப்பின் முடிவு பிரிவைத்தானே தருகின்றது! அந்தப் பிரிவு *நீ அங்கே, நான் இங்கே* என்னும் உணர்வையே அவளுக்கு அளித்தது!

இனி அடுத்த சந்திப்பு எப்பொழுது நிகழும் என்னும் ஏக்கத்தில் எத்தனை நாட்கள்தான் வாழ்வது?

அதுமட்டுமல்ல. இவர்களின் இரகசிய உறவு பற்றி ஊர் மக்கள் சிலரும் அறிந்துவிட்டார்கள். அவர்கள், அப்படி இப்படி என்று கதைகளைக் கட்டிக் காற்றில் விடுவார்களேயானால் இவர்களது காதல் மாசுபட்டுவிடும். அது பெற்றவருக்கும் கவலையைக் கொடுக்கும்.

ஊரவர் அலர் தூற்றமுன் தலைவன் தன்னை மணந்துகொள்ள வேண்டும் என்று அவள் நினைத்தாள்.



அதற்கு ஒரே வழி அவனைக் காணாமல் வீட்டிலே இருத்தல்.

அவள் திட்டம் பலித்துவிட்டது. அவளைக் காணாமல் அவனால் இருக்க முடியவில்லை. தான் விரைந்து வந்து தலைவியை மணந்துகொள்வதாகத் தோழியிடம் உறுதி கூறினான் அவன்.

அந்த நல்ல செய்தியை ஓடோடி வந்து தலைவிக்கு இவ்விதம் தெரிவிக்கின்றாள் தோழி:

மாரிக் காலத்திலே மலரும் பித்திகப் பூ, கொய்வதற்கு அரிதானது. அதன் அரும்பு, எழுச்சி பெற்ற மணம் நிறைந்தது. அத்தகைய அரும்பினது சிவந்த பின்புறத்தைப் போன்ற வளவிய செவ்வரி பரந்த குளிர்ந்த கண்களையும் தளிரை ஒத்த மேனியையும் அழகிய மா நிறத்தையும் உடைய என் தோழியே!

நாடு மழையின்றி வறட்சி கொள்ள, கலப்பைகள் உழவின்றித் தூங்க, பசுமை கெட்டுப்போன நீண்ட கோடை காலத்திலே குன்றுகளைப் போன்ற கரைகளையுடைய அகன்ற குளங்கள் வெப்பம் மிகுதியால் வரண்டு கிடந்தன. நீர் இல்லாமையால் பறைவைகளும் சென்று அங்கு தங்குவதில்லை.

அத்தகைய குளங்கள் எல்லாம் நிறையும் வண்ணம் மழை பொழிந்தது. அந்தப் பெரும் மழை பொழிந்த இன்பம் நிறைந்த விடியற் காலத்திலே, பலபேரும் மகிழ்ந்த மகிழ்ச்சி எல்லாம் ஒன்றாக எனக்குள்ளே பெய்துவைத்தாற் போல இருக்கின்றது.

ஏன் தெரியுமா?

நெடுந் தூரத்தே ஓங்கித் தோன்றும் உயர்ந்த பக்க மலைகளையுடைய வானளாவிய மலைக்கு உரியவனான உன் தலைவன், உன்னை மணஞ்செய்ய விரைந்து வந்தனன்.

மலிபெயல் கலித்த மாரிப் பித்திகத்துக்
கொயல் அரு நிலைஇய பெயலேர் மணமுகைச்
செவ்வெரிந் உறழும் கொழுங்கடை மழைக்கண்
தளிர் ஏர் மேனி மாஅ யோயே!

நாடு வறம் கூர, நாஞ்சில துஞ்சக்
கோடை நீடிய பைது அறு காலைக்
குன்று கண்டன்ன கோட்ட யாவையும்
சென்று சேக்கல்லாப் புள்ள உள் இல்

என்றூழ் வியன் குளம் நிறைய வீசிப்
பெரும் பெயல் பொழிந்த ஏம வைகறை,
பல்லோர் உவந்த உவகை எல்லாம்
என்னுள் பெய்தந் தற்றே சேணிடை
ஓங்கித் தோன்றும் உயர்வரை
வான்தோய் வெற்பன் வந்த மாறே! (அகநானூறு 42)

(மலிபெயல் - மிகுதியான மழை; கலித்த - தழைத்த; பித்திகம் - பிச்சி மலர்; கொயல் அரு - கொய்தற்கு அரிதான; ஏர் மணம் - எழுச்சி மிக்க வாசனை; முகை - அரும்பு; செவ்வெரிந் துறழுங் கொழுங் கடை - சிவந்த கொழுந்து போன்ற பின் புறம்; மாஅ யோயே - மாமை நிறத்தை உடையவளே; நாஞ்சில் - கலப்பை; சேக்கல் - தங்கல்; வந்த மாறு - மணம்புரிய வந்தபடி)

உனது குளிர்ந்த கண்ணும் தளிர் மேனியும் வேறுபட்டு விடாதவாறு தலைவர் விரைவாக உன்னை மணக்க வருகின்றார் என்பது இப்பாடலின் சுருக்கம்.

தலைவன் விரைவாக வருவேன் என்று சொன்னதை, தோழி வந்தனன் என்று இறந்த காலமாக்கிச் சொன்னது மகிழ்ச்சியாலும் உறுதிப்பாட்டாலுமெனக் கொள்ளுதல் வேண்டும்.

25

# முதலிரவு

வயலும் வயல் சார்ந்த இடமும் மருதம் எனப்படும். மருதநிலம் நீர்வளமும் நெல்வளமும் உடையது. அங்குள்ள மக்களுக்குச் செல்வச் செழிப்பு அதிகம். அதனால் ஓய்வு நேரமும் அதிகம். ஓய்வு நேரங்களில் பலவகையான விழாக்கள், விளையாட்டுகள் போன்றவற்றில் மருதநிலத்தவர் ஈடுபடுவர்.

சில வேளைகளில் பழைய நல்ல கதைகளைச் சொல்லி மகிழ்வதும் உண்டு.

கதைகளிலே சிறந்தது காதல் கதை. அதுவும் சொந்த அனுபவத்தோடு கூடிய கதையெனில் எவ்வளவு சுவையாக இருக்கும்?

தலைவன் ஓர் அழகான பெண்ணைக் காதலித்தான். காதலைத் தொடர்ந்து திருமணம் நடைபெற்றது.

திருமணம் முடிந்ததும் முதலிரவு.

திருமண வைபவத்தையும் முதலிரவு அனுபவத்தையும் எவராவது மறப்பார்களா, என்ன? அந்த மறக்க முடியாத இன்ப நிகழ்ச்சியைப் பின்வருமாறு ஒரு கதையாக வீட்டுக்கு வருகை தந்திருந்த தனது நண்பன் ஒருவனுக்குச் சொல்லி மகிழ்கின்றான் தலைவன்:

உழுத்தப் பருப்பை அதிகம் சேர்த்துச் சமைத்த பொங்கற் குழையலை வந்தவர்கள் சுவைத்துக் கொண்டிருந்தார்கள். வரிசையாக மரக்கால்கள் நாட்டப் பட்டுப் பெரிய பந்தர் ஒன்றும் அமைக்கப்பட்டிருந்தது. அதன்கீழ் தரையிலே மணல் பரப்பப்பட்டிருந்தது. அந்தப் பந்தரில் மனை விளக்கு ஏற்றி வைக்கப்பட்டது. தொடர்ச்சியாக எங்கும் மாலைகள் தொங்க விடப்பட்டன.

கோள்களின் தீமைகள் நீங்கிய, வளைந்த வெண் சந்திரனை, கேடற்ற சிறந்த புகழையுடைய உரோகிணி நட்சத்திரம் வந்தடைந்தது. அந்த நல்ல நாளிலே கூடிய இருளும் மறைந்து பொழுதும் புலர்ந்தது.



அவ்வேளை, உச்சியிலே நீர்க் குடங்களைத் தாங்கிய பெண்களும், கைகளிலே மண் கலயங்களை ஏந்திய மகளிரும், மணத்தினை ஆரவாரத்துடன் செய்து வைக்கும் முதிய செம்மனப் பெண்டிரும் கூடினர். முன்னே தருவனவற்றையும் பின்னே தருவனவற்றையும் அவர்கள் முறை முறையாகத் தந்துகொண்டு நின்றனர்.

புதல்வரைப் பெற்ற மகளிர் நால்வர் கூடினர். தேமல் படர்ந்த அழகிய வயிற்றினையும் தூய ஆபரணங்களையும் அணிந்த அம் மகளிர், கற்பினின்றும் வழுவாது, நன்றாகிய பல வழிகளிலும் உதவியாக இருந்து, 'நின்னை மனைவியாகப் பெற்ற நின் மணவாளனைப் பேணிக் காக்கும் துணைவியாக நீ இருப்பாயாக' எனக் கூறி அவளை வாழ்த்தினர். குளிர்ச்சி பொருந்திய பூவிதழ்களையும் நெல்லினையும் நீரோடு கலந்து அவள் தலையிலே தூவினர். அவை அவளது கருமை மிகுந்த கூந்தலிலே ஒருங்கே சேர்ந்து விழுந்தன. அவ்விதமாக அவளை மங்கல நீராட்டி வதுவை மணத்தை நடத்தி முடித்தனர்.

அதன் பின்னர், சுற்றத்தவர் எல்லோரும் மகிழ்ச்சி ஒலியினராய் விரைந்தெழுந்து, 'பெருமைக்குரிய இல்லக்கிழத்தி ஆவாயாக' என அவளை எனக்குத் தந்து மனைவியாக்கினர்.

அதனைத் தொடர்ந்து, ஒரு தனி இல்லத்திலே எமது புணர்ச்சிக்குரிய முதல் இரவு வேளையும் வந்தது. முதுகினை வளைத்துக்கொண்டு அவள் புதுப் புடவைக்குள்ளே ஒடுங்கிக் கிடந்தாள். அவள் கிடந்த மலர்ப்படுக்கையை அணுகி அவள் முதுகினைத் தழுவினேன். அவளைப் புணரும் விருப்போடு அவள் முகத்தை மறைத்திருந்த கைகளை மெதுவாக விடுவித்தேன். அவள் அஞ்சி மூச்செறிந்தாள். அவ்வேளை, 'நின் மனத்திலே எண்ணியிருப்பதை ஒளியாமல் உரைப்பாயாக' என்று கேட்டேன்.

கேட்டதும் இன்பம் சேர்க்கும் அம் மலரணையிலே, மாமை நிறத்தையுடைய அவள், மானின் மடப்பமும், செறிந்த நோக்கும் உடைய தன் கண்கள், குளிர்ந்த தன் கூந்தலில் மறைந்த சிவந்த மணிகள் பதிந்த ஒளிபொருந்திய குழையோடு கூடிய காதின் ஓரம் சென்று அசைய, உள்ளத்திலே பொங்கி எழும் உவகையளாகி முகத்தினை எனது பிடியிலிருந்து விலக்கி ஒய்யெனத் தலை கவிழ்ந்தனள்!

உழுந்துதலைப் பெய்த கொழுங்களி மிதவை
பெருஞ்சோற்று அமலை நிற்ப நிரைகால்
தண்பெரும் பந்தர்த் தருமணல் ஞெமிரி
மனைவிளக்கு உறுத்து மாலை தொடரிக்
கனையிருள் அகன்ற கவின்பெறு காலை,
கோள்கால் நீங்கிய கொடுவெண் திங்கள்

கேடில் விழுப்புகழ் நாள்தலை வந்தென
உச்சிக் குடத்தர், புத்தகன் மண்டையர்
பொதுசெய் கம்பலை முதுசெம் பெண்டிர்
முன்னவும் பின்னவும் முறைமுறை தரத்தர,

புதல்வற் பயந்த திதலை அவ் வயிற்று
வாலிழை மகளிர் நால்வர் கூடி,
கற்பினின் வாழஅ நற்பல உதவிப்
பெற்றோற் பெட்கும் பிணையை ஆக என

நீரொடு சொரிந்த ஈரிதழ் அலரி
பல்லிருங் கதுப்பின் நெல்லொடு தயங்க
வதுவை நன்மணம் கழிந்த பின்றைக்
கல்லென் சும்மையர் ஞெரேரெனப் புகுதந்து
பேர் இற்கிழத்தி ஆக எனத் தமர்தர,
ஓர் இற் கூடிய உடன்புணர் கங்குல்
கொடும்புறம் வளைஇக் கோடிக் கலிங்கத்து
ஒடுங்கினள் கிடந்த ஓர்புறம் தழீஇ
முயங்கல் விருப்பொடு முகம்புதை திறப்ப
அஞ்சினள் உயிர்த்த காலை, யாழ நின்
நெஞ்சம் படர்ந்தது எஞ்சாது உரை என,
இன்னகை இருக்கை பின்யான் வினவலின்,

செஞ்சூட்டு ஒண்குழை வண்காது துயல்வர
அகமலி உவகையள் ஆகி முகன் இகுத்து
ஒய்யென இறைஞ்சி யோளே மாவின்
மடங்கொள் மதைஇய நோக்கின்
ஒடுங்கீர் ஓதி மாஅ யோயே.

(அகநானூறு 86)

(தலைப் பெய்த - அதிகம் சேர்த்த; கனி மிதவை - குழைதலையுடைய; அமலை நிற்ப - இடையறாது நிகழ; ஞெமிரி - பரப்பி; கனை இருள் - மிகுந்த இருள்; பொது - பொது வைபவமாகிய திருமணம்; கம்பலை - ஆரவாரம்; திதலை - தேமல்; வால் இழை - தூய அணிகலன்; சும்மையர் - சுற்றத்தவர்; ஞெரேரென - விரைவாக; கங்குல் - இரவு; கொடும் புறம் - நாண மிகுதியால்; கோடிக் கலிங்கம் - புதிய சேலை கொடுங்கிக் கிடந்த உடம்பு; மதை இய நோக்கு - மதர்த்த பார்வை)

தலைவனின் திருமணத்துக்கு நண்பன் வரமுடியவில்லை. அப்பொழுது அவன் பொருள் தேடி வேறூர் சென்றிருந்தான். அதனால் முன்பு நடந்தது அனைத்தையும் இப்பொழுது தலைவன் சொல்லக் கேட்டு அவன் மகிழ்ந்தான்.

இப்பாடல் வாயில் மறுத்த தோழிக்குத் தலைமகன் சொல்லியது என்றும் தலைமகளைக் கூடி இன்புற்றிருந்த தலைமகன், பண்டு நிகழ்ந்தது சொல்லி இன்புற்றான் என்றும் அகநானூற்றில் சொல்லப்பட்டுள்ள துறை விளக்கங்கள் பொருந்தாமையால் நண்பனுக்குச் சொல்லி மகிழ்ந்தான் என்னும் புதிய கற்பனை வருவிக்கப்பட்டது.

பண்டைய தமிழர் திருமண முறைகளில் ஒன்றினை விவரிப்பதால், இப்பாடல் சிறப்புப் பெறுகின்றது.

திருமணத்துக்கு நல்ல நாள் பார்த்தல், பந்தர் அமைத்தல், சோடித்தல், விருந்தளித்தல் முதலியனவும் மணப்பெண்ணுக்கு மங்கல நீராட்டல், புத்தாடை உடுத்தல், வாழ்த்துக் கூறுதல் போன்ற நிகழ்வுகளும், அவற்றின்பின் அவளைத் தமர் மணமகனுக்கு அளித்தலும், அதனைத் தொடர்ந்து தனியான வீட்டில் முதலிரவு நடைபெற்றதும் கூறப்பட்டுள்ளன.

திருமண வைபவத்தில் பெண்கள் முக்கிய இடம் வகிப்பதும் சிலப்பதிகாரத்தில் கூறப்பட்டுள்ள அந்தணர் செய்யும் சடங்கு முறைகள் இங்கு இல்லாமையும் கவனிக்கத்தக்கன.

# 26

# மனைவியை வணங்கிய கணவன்

கணவனை மனைவி வணங்குவது பெரு வழக்கு. மனைவியைக் கணவன் வணங்குவது அரு வழக்கு. திருத்தொண்டர் புராணத்திலே, கணவன் மனைவியை வணங்கிய கதை ஒன்று வருகின்றது.

சோழநாட்டிலே காவிரிப்பூம் பட்டினத்திலே வாழ்ந்தவர் இயற்பகை நாயனார். வணிகத் தொழிலால் செல்வச் சிறப்புடனும் செல்வாக்குடனும் விளங்கியவர். அவரது மனைவி குறிப்பறிந்து தொண்டாற்றும் குணவதியார். நாயனாரின் இல்லறச் சிறப்பு, நாடிவருபவர் எதைக் கேட்டாலும் இல்லை என்னாது கொடுத்தல். அந்தப் பண்பினையே சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருத்தொண்டர் தொகையிலே 'இல்லையே என்னாத இயற்பகைக்கும் அடியேன்' என்று சிறப்பித்தார்.

அத்தகைய கொடையாளர் திறத்தை உலகத்தாருக்கு உணர்த்தச் சிவபெருமான் சித்தங்கொண்டார். ஒருநாள் அந்தணர் கோலத்தில் இயற்பகையார்முன் தோன்றி, 'ஒரு பொருள் நாடி உம்மிடம் வந்தோம்' என்றார். அதனைக் கேட்ட இயற்பகையார்,

யாதும் ஒன்றுமென் பக்கல் உண்டாகில்
அன்ன தெம்பிரான் அடியவர் உடைமை
ஐயமில்லை நீர் அருள்செயும் (1)

என்றார்.

அது கேட்டு மகிழ்ந்த அந்தணர், 'மன்னு காதல் உன் மனைவியை வேண்டி வந்தனன்' என்றார்.

இல்லை என்னாது எதனையும் ஈதல் இயற்பகையாரின் இயல்பு. எனினும், தன்னுடைய காதல் மனைவியைத் தரவேண்டும் என்று கேட்டால் எந்தக் கணவனாவது உடன்படுவானா? இயற்பகையாரை இதுவரை யாரும் இப்படிக் கேட்டதில்லை. அவரை என்ன, உலகத்தில் வேறு எவரையுமே 'உமது மனைவியைத் தருவீரா?' என்று யாரும் கேட்டதில்லை. அவ்விதம் கேட்டால் உடன் எற்படக்கூடிய, எற்படவேண்டிய உணர்ச்சி வெகுளிதான்.

இயற்பகையாருக்கு இந்த விநோதமான வேண்டுதலைக் கேட்டு வியப்போ வெகுளியோ வரவில்லை. மாறாக அவர் மகிழ்ந்தார் என்கிறார் சேக்கிழார் பெருமான். கொடுக்கக்கூடிய ஒன்றைத்தான் அவர் கேட்டுள்ளார் என்பதால் அவருக்கு மகிழ்ச்சி ஏற்பட்டது. தற்செயலாக அவர் கேட்கும் பொருள் தன்னிடம் இல்லை என்றால் என்ன செய்வது என்ற ஓர் ஏக்கம் இயற்பகையாரிடம் இருந்திருக்க வேண்டும். அந்த ஏக்கம் இப்பொழுது இல்லை. விரைந்து செல்கிறார் மனைவியிடம். அந்தணர் விருப்பத்தைக்கூறி, 'உன்னை நான் அவருக்குக் கொடுத்தனன்' என்கிறார். மனைவியார் திகைக்கின்றார். பின்னர் தெளிவுற்று,

''என் ஆருயிர் நாத! நீர் சொல்லும் ஒன்றைச் செய்வதல்லால் எனக்கு உரிமை வேறு உளதோ'' என்று கூறித் தமது தனிப்பெருந் தலைவரை வணங்குகின்றார். தலைவர் என்ன செய்கிறார்? திருமகளிலும் சிறந்த தமது மனைவியைத் தாழ்ந்து தாமும் வணங்குகின்றார். அதன்பின் மாதரசி தன்னை விரும்பிவந்த மாதவன் பக்கம் சென்று செய்வதறியாது திகைத்து நிற்கின்றார். இந்தக் காட்சியை விவரிக்கும் சேக்கிழார் பெருமானின் இயல்பு நவிற்சிப் பாடல் இது:

இன்று நீரெனக் கருள்செய்த திதுவேல்
 என்னு யிர்க்கொரு நாதநீர் உரைத்த(து)
ஒன்றை நான்செயும் அத்தனை அல்லால்
 உரிமை வேறுள தோஎனக் கென்று
தன்த னிப்பெரும் கணவரை வணங்கத்
 தாழ்ந்து தொண்டனார் தாமெதிர் வணங்கச்
சென்று மாதவன் சேவடி பணிந்து
 திகைத்து நின்றனள் திருவினும் பெரியாள். (2)

கொடைகள் பல வகை. பொருளை, பொன்னைக் கொடுப்பது வள்ளன்மை. பல காரணங்களுக்காகப் பெற்ற பிள்ளைகளைக் கொடுக்கின்ற வழக்கமும் உண்டு. இவை யாவற்றிலும் கடினமானது உயிரைக் கொடுப்பது. இயற்பகையார் இவையெல்லாம் செய்ய வல்லவர். கட்டிய மனைவியைக் கொடுப்பாரா? கேட்டுப் பார்ப்போம் என்று புறப்பட்ட கூத்தருக்கு இயற்பகை நாயனார் கொடுத்தேவிட்டார். அவரது செயல் வியப்புக்குரியது மட்டுமன்றி விவாதத்துக்குமுரியது.

செய்தி அறிந்து சுற்றத்தவர் திரண்டெழுந்து அவருடைய அடாத செயலைக் கண்டித்தனர்; வாதிட்டனர். அவர் கேட்டாரில்லை. ஈற்றில் அவருடன் சண்டையிட்டாவது தமது குலத்துப் பெருமையைக் காப்பாற்ற முனைந்தனர். நாயனார் அவர்களை அடக்கி அந்தணர் அச்சமின்றித் தமது மனைவியைக் கொண்டு செல்ல உதவினார். வீடு திரும்பியதும் ஓலம் ஓலம் என்ற குரல் எழுந்தது. உறவினர் மீண்டும் அந்தணரைத் தடுத்து நிறுத்த முயல்கின்றனர்போலும் என்று எண்ணி இயற்பகையார்



ஆயுதங்களுடன் விரைந்து சென்றார். சென்றவர் மறையவரைக் காணார், மனைவியை மட்டும் கண்டார். அந்நிலையில் இறைவர் உமாதேவியாரோடு விடைமேல் விண்ணில் எழுந்தருளி, இல்லையே என்னாத இயற்பகை யாரையும் சொற்றிறம்பாத அவரது மனைவியாரையும் ஆட்கொண்டருளினார்.

இயற்பகையார் சிவபெருமான் நடத்திய பரீட்சையிற் சித்தி பெற்றுவிட்டார். அதற்குப் பெரிதும் உதவியவர் அவரது மனைவியார்தாம். ஒருவேளை அந்தணருடன் செல்ல அவர் மறுத்திருந்தால் கணவரது இல்லையே என்னாத இயல்புக்குப் பங்கம் ஏற்பட்டிருக்கும். அவர் முன்பு அந்தணருக்கு அளித்த வாக்கும் பிழைத்திருக்கும். மனைவியார், கணவனின் சொற்றிறம்பாமையைக் காப்பாற்றுவதே கடமை என்னும் கற்புடையவர் என்பது இயற்பகையாருக்குத் தெரியாததல்ல. ஆனால் இது அவரது கற்புடன் தொடர்புடைய சம்பவம். உயிரைத் தனது கணவன் பொருட்டுக் கொடுத்தாலும் கற்பை ஒரு மனைவி கொடுப்பதென்பது குலமாதருக்குரிய குணமன்று.

இந்த இடத்திலேதான் மனைவியாரின் பக்குவத்தையும், அவரை ஒரு காமத்துக்குரிய பெண்ணாக மட்டும் நாயனார் கருதவில்லை என்பதையும் நாம் உய்த்து உணர வேண்டியுள்ளது. அவர் தமது மனைவியை வணங்கியதும், அவரது தெய்வீக வாழ்வுக்கே என்பதும் தெளிவாகின்றது.

ஆனாலும் சிவபெருமான் சான்றிதழை இயற்பகையாருக்கே வழங்குகின்றார். *செயற்கருஞ் செய்கை செய்த தீரனே* என்கின்றார். கேட்டதைக் கொடுத்தவர் அவர் தாமே! அவர் பெரியவர்.

*செயற்கரிய செய்வார் பெரியர் சிறியர்*
*செயற்கரிய செய்கலா தார்* *(3)*

என்பது வள்ளுவர் பெருமான் வாக்கு.

கட்டிய காதல் மனைவியை இன்னொருவனுக்குக் கொடுப்பது என்பது மனித இயல்புக்கு, இயற்கைக்கு மாறான செய்கை. அதனாற்றான்போலும், மக்கள் அவரை இயற்பகையார் என்று போற்றலாயினர்.

-------------------

1. *திருத்தொண்டர் புராணம்: இயற்பகை நாயனார், பாடல் 7*
2. *திருத்தொண்டர் புராணம்: இயற்பகை நாயனார், பாடல் 9*
3. *திருக்குறள் 3: 9*

# 27

# கணவனைத் தண்டித்த கற்பரசி

பால் உணர்ச்சிப் பலவீனம், முற்றும் துறந்த முனிவருக்கும் உள்ளது என்பதைப் பல பழங்கதைகளிற் படித்திருக்கிறோம். அது பரமசிவனை வணங்கும் பத்தர்களையும் விட்டுவைப்பதில்லை. பால் உணர்ச்சி இயல்பானது. ஆனாலும் திருமகளை ஒத்த மனைவியை மணம்முடித்து இல்லறத்தில் இருக்கும் ஒருவர் பரத்தைபால் செல்வது பண்பற்றது; பரிசு கேடானது. அதுவும், அதனை ஒரு சிவனடியார் செய்வது சிறுமையிலுஞ் சிறுமை. மனைவிக்குச் செய்யும் நம்பிக்கைத் துரோகம்.

இந்தத் துரோகத்தைச் செய்தவர் திருநீலகண்ட நாயனார் என்னும் திருத்தொண்டர். தில்லையிலே வாழ்ந்தவர். சிறந்த சிவபத்தர். சிவபெருமானைத் *திருநீலகண்டம் திருநீலகண்டம்* என்று சொல்லி வணங்கி வந்தமையால் அவரை எல்லோரும் திருநீலகண்ட நாயனார் என்று அழைக்கலாயினர். அவர் குயவர் குலத்தவராதலால் மட்கலம் செய்து வாழ்க்கையை நடத்தி வந்தார். அடியவருக்குத் திருவோடு செய்து கொடுப்பதைத் திருத்தொண்டாகக் கொண்டவர்.

எழில்நலமும் இன்குணமும் வாய்ந்த கற்பரசியார் ஒருவரை மனைவியாகப் பெற்று இல்லறத்தைச் சிறப்பாக நாயனார் நடத்தி வந்தார். ஒரு நாள் பரத்தையர் வாழும் பகுதியால் சென்றபோது ஒரு பெண் அவரை மயக்கிவிட்டாள்.

கணவர், பரத்தை வீடு சென்ற செய்தி அறிந்து மனைவியார் ஊடல் கொண்டார். ஊடலைத் தவிர்க்க நாயனார் கூடலை விரும்பினார். மனைவியார் விலகி 'எம்மைத் தீண்டுவீராகில் திருநீலகண்டம்' என்றார். அதாவது, நீலகண்டத்தையுடைய சிவபெருமான் ஆணையாகத் தம்மை தீண்டலாகாது என்றார். இது காமக் கணவருக்குக் கற்பு மனைவி அளித்த தண்டனை. 'இவள் எம்மை என்றதனால் இவளையும் பிற பெண்களையும் நான் மனத்தினாலும் இனிமேல் தீண்டமாட்டேன்' என்று விரதத்தை மேற்கொண்டார் நாயனார்.

இந்நிலையில் இல்லறம் நடந்த விதத்தை இப்படி விளக்குகின்றார் சேக்கிழார் பெருமான்:

கற்புறு மனைவி யாரும்
　　கணவனார்க் கான எல்லாம்
பொற்புற மெய்யு றாமல்
　　பொருந்துவ போற்றிச் செய்ய
இற்புறம் பொழியா தங்கண்
　　இருவரும் வேறு வைகி
அற்புறு புணர்ச்சி இன்மை
　　அயலறி யாமை வாழ்ந்தார். (1)

கற்பினிற் சிறந்த மனைவியார், தமது அழகிய மேனி கணவரிற் படாதவகை அவருக்கு வேண்டிய பணிவிடைகளை எல்லாம் சிறப்பாகச் செய்தார். இருவரும் வெவ்வேறாக உறங்கி எழுந்தனர். வீட்டைவிட்டு வெளியே செல்வதைத் தவிர்த்தனர். அவ்வகையால் தமக்கிடையில் உடலுறவு இன்மையை அயலவர் அறியாதவகை வாழ்க்கையை நடத்தி வந்தனர்.

ஆண்டுகள் பல கழிந்தன. காண்டகு இளமையும் கூடவே கழிந்தது. இவர்களது நோன்புத் திறத்தைப் பகிரங்கப்படுத்தப் பரமசிவன் விரும்பினார். சிவயோகிக் கோலத்தில் ஒருநாள் திருநீலகண்ட நாயனார் இல்லத்துக்கு எழுந்தருளினார். நாயனார் வரவேற்று ஏதாவது உதவி வேண்டுமோ என்று கேட்டார். சிவயோகியார் திருவோடு ஒன்றைக் கொடுத்து, அதனைப் பேணித் தான் திரும்பி வந்து கேட்கும்பொழுது தரும்படி கேட்டுக் கொண்டார். நாயனார் அதனை அன்புடன் பெற்றுத் தமது இல்லத்தில் பாதுகாப்பான இடம் ஒன்றில் வைத்தார்.

பல நாட்களின் பின் சிவயோகியார் திரும்பிவந்து, கொடுத்த திருவோட்டைத் திருப்பிக் கேட்டார். திருவோட்டை எடுக்கச்சென்ற நாயனார் திடுக்குற்றார். வைத்த இடத்திலே திருவோடு இருக்கவில்லை. எங்கும் தேடினார். மனைவியாரும் தேடினார். ஓட்டைக் காணவில்லை. மிகுந்த கவலையோடு வந்து *எங்கு தேடியும் திருவோட்டைக் காணவில்லை* என்றார். சிவயோகியார் சினந்தார். உரையாடல் இப்படித் தொடர்ந்தது:

சிவயோகியார்: *அது பல சிறப்புகள் வாய்ந்த திருவோடு. அதன் மகிமையை அறிந்து நீ அதனை எடுத்துக்கொண்டாய்!*

நாயனார்: *இல்லை, இல்லை! நான் அதனை எடுக்கவில்லை. புதிய ஓடு செய்து தருகிறேன்.*

சிவயோகியார்: *பொன்னால் செய்து தருவாயேனும் நான் தந்த ஓடன்றி*

வேறேதும் கொள்ளேன். அடைக்கலப் பொருளை அபகரித்துக் கொண்டாயே!

நாயனார்: ஐயனே! நான் சிவதொண்டன். பொருள்களைத் திருடுபவன் அல்லன்.

சிவயோகியார்: அப்படி என்றால் உன் மகனைப் பற்றிக் குளத்தில் மூழ்கிச் சத்தியஞ் செய்!

நாயனார்: எனக்கு மகன் இல்லை.

சிவயோகியார்: மனைவியைப் பற்றிக்கொண்டு மூழ்கு!

நாயனார்: எனக்கும் மனைவிக்கும் ஒரு சூள் உள்ளது. அதனால் அவள் கையைப் பிடித்து மூழ்கிச் சத்தியஞ் செய்ய முடியாமைக்கு வருந்துகிறேன்.

சிவயோகியார்: நீ வறிதான சாட்டுகள் சொல்லித் தப்ப முனைகிறாய். உன்னை விடமாட்டேன். தில்லைவாழ் அந்தணர் அவையில் என் வழக்கை உரைக்கப் போகிறேன்...

என்று சொல்லிச் சிவயோகியார் கடுகி நடந்தார். நாயனார் பின்தொடர்ந்தார். வழக்கை விசாரித்த தில்லைவாழ் அந்தணர், மனைவியைப் பற்றிக் குளத்தில் மூழ்கி உண்மையைச் சொல்லுதல் வேண்டும் என்று தீர்ப்பளித்தனர். அவர்கள் முன்னி லையில் மனைவியைத் தீண்டமுடியாத சூளை வெளியிட நாணி, வீடு திரும்பினார் திருநீலகண்ட நாயனார்.

பின்னர் மனைவியை அழைத்துக்கொண்டு திருப்புலிச்சுரத்துத் திருக் குளத்தை அடைந்தார். குளத்தில் ஒரு மூங்கில் தண்டில் ஒரு முனையை மனைவியார் பிடிக்க, மறுமுனையைத் தாம் பிடித்துக்கொண்டு மூழ்க முயன்றார். அவ்வேளை சிவயோகியார், 'மனைவியின் கரத்தைப் பற்றிக்கொண்டு மூழ்கும்' என்றார். நாயனார் அப்படிச் செய்யமுடியாமையை யாவரும் அறியக் கூறித் தண்டைப் பிடித்தவாறே மூழ்கினார்.

அயலறியாமல் வாழ்ந்த வாழ்க்கை அம்பலத்துக்கு வந்த அவளவில் சிவயோகியார் மறைந்தருளினார். குளத்தில் மூழ்கி எழுந்த இருவரும் முதுமை நீங்கி இளமைக் கோலத்துடன் விளங்குவதை எல்லோரும் கண்டு வியந்தனர்.

தேவர் தேவராகிய சிவபெருமான் விண்ணில் உமாதேவியாருடன் விடைமேல் காட்சிகொடுத் தருளினார். அது கண்டு அண்டரும் அன்பரும் தொண்டரும் மனைவியாரும் தொழுது போற்றி நின்றனர். அவ்வேளை,

வென்ற ஐம்புலனால் மிக்கீர்
விருப்புடன் இருக்க நம்பால்
என்றுமிவ் விளமை நீங்காது (2)

என்று பெருமான் அருளவும் விறலுடை நாயனாரும் செறிகருங் கூந்தலாரும் பெறற்கரும் பேறதாய பேரின்பம் பெற்றுய்ந்தனர்.

குற்றம் செய்யினும் அதனைக் குணமாகக் கொள்ளுதல் சைவத்தின் இயல்பு என்பதை இவ்வரலாறு குறிப்பாக உணர்த்துகின்றது.

--------------------

1. திருத்தொண்டர் புராணம்: திருநீலகண்ட நாயனார், பாடல் 8

2. திருத்தொண்டர் புராணம்: திருநீலகண்ட நாயனார், பாடல் 42



28

# வருந்தியும் விருந்தோம்பும் வாழ்வு

இருந்தோம்பி இல்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி
வேளாண்மை செய்தற் பொருட்டு (1)

என்ற வள்ளுவர் பெருமான் வாக்குக்கு அமைய வாழ்ந்த திருத்தொண்டர் பலர். அவர்களுள் மாறனார் என்பவர் மாண்பு, சொல்லி முடியாது. இளையான் குடியிலே பிறந்தமையால் அவர் இளையான்குடி மாற நாயனார் என்று அழைக்கப்பெற்றார். பழுதில்லாத உழுவுத்தொழிலால் உயர்ந்த செல்வந்தராக விளங்கியவர்; மேலான சிவபத்தர். வீட்டுக்கு வருபவர் எவராயினும் சோறுகறி விருந்து அளிப்பதை விரதமாகக் கொண்டவர். அவர் விருந்தளிக்கும் பக்குவத்தைப் பெரியபுராணத்திலே சேக்கிழார் பெருமான் விவரிக்கும் விதம் இது:

கொண்டு வந்து மனை புகுந்து
குலாவு பாதம் விளக்கியே
மண்டு காதலின் ஆத னத்திடை
வைத்து அருச்சனை செய்தபின்
உண்டி நாலு விதத்தில் ஆறு
சுவைத் திறத்தினில் ஒப்பிலா
அண்டர் நாயகர் தொண்டர் இச்சையில்
அமுது செய்ய அளித்துளார். (2)

விருந்து என்றால் வீட்டிலே சமைத்துக் கொடுப்பதுதான். கடைகளில் வாங்கிக் கொடுப்பது விருந்தன்று. மேலும் உணவு அளிப்பது மட்டும் விருந்தன்று. வந்தவரை வரவேற்கும் பண்பும் அதன் ஒரு பகுதியாகும். நாயனார் வரவேற்கும் முறை கவனிக்கத் தக்கது.

வந்த விருந்தினரை வீட்டுக்குள் அழைத்து வருகின்றார். வாசலில் வைத்து மிகுந்த அன்போடு அவரது பாதங்களைக் கழுவுகின்றார். பின்னர் இருக்கையில் அமரச்செய்து அருச்சனை புரிகின்றார். இங்கே அருச்சனை என்பது விருந்தினரை இறைவனாகப் பாவித்து மலர்தூவி வழிபடுதல். புத்தாடை அணிவிப்பதும் உண்டு.

இவை எல்லாம் செய்தபின்னரே உணவளிப்பு இடம்பெறும். அதுவும் சாதாரண உணவல்ல. உண்ணல், தின்னல், நக்கல், பருகல் என்னும் நால்வகை உணவை கைப்பு, புளிப்பு, இனிப்பு, துவர்ப்பு, கயர்ப்பு, உவர்ப்பு ஆகிய அறுசுவைத் திறத்தில் அண்டர் நாயகர் தொண்டராகிய மாற நாயனார் அளித்து வந்தார் என்பது இப்பாடல் தருஞ் செய்தியாகும்.

விருந்தோம்பி வேளாண்மை செய்வதெல்லாம் செல்வம் இருக்கும்வரைதான். வறுமையுற்றால் மாறனார் என்ன செய்வார்? தமது விரதத்தை எவ்விதம் தொடருவார்?

தேர்வு ஒன்றை நடத்தத் திருவுள்ளங் கொண்டார் சிவபெருமான். மாறனாரை வறியவராக்கினார். வருவாய் குன்றியவிடத்தும் மாறனார் மனம் மாறவில்லை. தம்மிடமிருந்த பொருள்களை விற்று விற்று விருந்தாளர் பசியை அன்புடன் ஆற்றினார். பொருள்களும் தீர்ந்து விட்டன. கடன்பட்டும் கடமையைச் செய்துவந்தார். எத்தனை நாளைக்குக் கடன் படலாம்? அவரும் மனைவியும் உண்ணவழியில்லாத அளவுக்குப் பஞ்சம் அவர்களை வருத்தியது.

ஒருநாள் பசிவயிற்றுடன் வயல் வேலைகளை முடித்துக்கொண்டு மாலை வீடு திரும்பினார். வயல் விளைந்தாலே இனி வாழ்வு. அன்றிரவு நல்ல மழை. பசி வயிற்றைக் கிள்ளியது. பசி வந்திடப் பத்தும் பறந்து போகும். தூக்கமும் பறந்து போயிற்று. நள்ளிரவுவரை விழித்திருந்தார். அந்த இருட்டில் யாரோ கதவைத் தட்டுஞ் சத்தம் கேட்டது. வந்தவரை மாறனார் வரவேற்ற வகை இது:

மாரிக் காலத்து இரவினில் வைகியோர்
தாரிப்பு இன்றிப் பசிதலைக் கொள்வது
பாரித்து இல்லம் அடைத்தபின் பண்புற
வேரித் தாரான் விருந்து எதிர் கொண்டனன். (3)

(ஓர் தாரிப்பு இன்றி - எவ்வித உதவியுமில்லாமல்; பசி தலைக் கொள்வது பாரித்து - மேலோங்கும் பசியைப் பொறுத்துக்கொண்டு; இல்லம் அடைத்த பின் - வீட்டைப் பூட்டியபின்; பண்புற - மிகுந்த மதிப்புடன்; வேரித்தாரான் - நறுமணம் வீசும் மாலையை அணிந்த மாற நாயனார்)

காலம் மாரிக்காலம். நேரம் அகால நேரம். வீட்டுக் கதவும் அடைக்கப்பட்டு விட்டது. வீட்டில் உணவு எதுவும் இல்லை. வீட்டுக்காரரே பல நாட்களாக உணவு அருந்தவில்லை. இந்நிலையில் ஒருவர் கதவைத் தட்டுகின்றார்.

இக்காலத்திற் பலர் கதவே திறக்கமாட்டார்கள். அல்லது, யாரது இந்த நேரத்தில்? என்று சத்தம் போட்டு அனுப்பிவிடுவார்கள். அனுப்பமுடியாது போனால் காவல்துறைக்கு அறிவிப்பார்கள்.

நாயனார் சிவதொண்டரல்லவா? அன்புடன் எழுந்து கதவைத் திறந்து, வந்தவரை எதிர்கொள்கின்றார். அடியவர் ஒருவர் மழையில் நனைந்த ஈரத்துடன் வாசலில் நிற்பதைக் காண்கின்றார். அவரை உள்ளே அழைத்து ஈரத்தைப் போக்கி அமரவைக்கின்றார்.

வந்தவருக்குப் பசியாக இருக்கவேண்டும் என்று குறிப்பால் உணர்ந்துகொண்ட நாயனார், மனைவியை நோக்கினார். வயலில் விதைத்த நெல்லை வாரிக்கொண்டு வரும்படி உரைத்தார் மனைவி. கொட்டும் மழையில் ஒரு கூடையை எடுத்துக்கொண்டு நடந்தார் நாயனார் நள்ளிரவில். தடவித்தடவி விதைநெல்லைப் பொறுக்கிச் சேர்த்துக் கொண்டுவந்தார். அவரின் வரவை எதிர்பார்த்திருந்த மனைவியார் கூடையை வாங்கி நெல்முளைகளைத் துப்புரவு செய்தார். விறகில்லையே என்றார். இதோ கொண்டுவருகிறேன் என்று வீட்டு வரிச்சுகளை வெட்டிக்கொண்டு வந்தார். கறிக்கு என்ன செய்வது என்றார் மனைவியார். வெளியிற் சென்று புன்செய் பயிர்களைப் பிடுங்கிக்கொண்டு வந்தார். சமையலில் வல்ல இல்லத்தலைவி அவற்றைச் சுவையான கறியாக்கினார்.

இந்தக் காலத்துப் பெண்கள் இந்த அளவுக்குக் கணவருடன் ஒத்துழைப் பார்களா?

சமையலை விரைந்து முடித்த மேம்படு கற்பின் மிக்கார், கணவனார் தம்மை நோக்கி, “இணையிலா தாரை ஈண்டு அமுது செய்விப்போம்” என்றார்.

மாறனார் அடியவரை அமுதுசெய்ய அழைத்தார். அவ்வேளை அடியவர் மறைந்தருளினார். மறைந்த இடத்திலே சோதி ஒன்று தோன்றியது. நாயனாரும் மனைவியாரும் வியப்புற்று நின்றனர். சோதியுள் சிவபெருமான் விடைமீது உமாதேவியாருடன் காட்சியளித்து, ‘அறுசுவை உணவை நாள்தொறும் விருந் தினருக்கு அளித்து மகிழ்வித்த ஐயனே! நீ உன் மனைவியுடன் எமது உலகை அடைந்து குபேரன் உன் ஏவல் கேட்ப இன்புற்றிருப்பாயாக’ என்று கூறி மறைந்தருளினார்.

ஒரு தொண்டை மேற்கொண்டால் அதனைத் துண்டிக்காது துணிந்து தொடருதல் வேண்டும். துன்பம் வந்தகாலத்தும் அதனை மகிழ்வோடு இத்தம்பதியர் செய்தனர். முயற்சி, மெய்வருந்தக் கூலி தரும். மாறனார் இணையருக்கு நல்ல கூலி கிடைத்தது.



இக்கட்டான காலம் வந்தால் இறைவன் சோதிக்கிறான் என்பதற்கு மாறனார் வாழ்க்கை நல்ல உதாரணம்.

-----------------

1. திருக்குறள் 9 : 1

2. திருத்தொண்டர் புராணம்: இளையான்குடி மாற நாயனார், பாடல் 4

3. திருத்தொண்டர் புராணம்: இளையான்குடி மாற நாயனார், பாடல் 9

# 29

# காரைக்கால் அம்மையாரின் காதல் வாழ்க்கை

காரைக்கால் அம்மையாரின் இயற்பெயர் புனிதவதி. அவரது தந்தையார் காரைக்காலில் பெரிய வணிகர். தனதத்தன் என்று பெயர்.

அழகும் குணமும் வாய்ந்த புனிதவதியார், சிறுவயதிலிருந்தே சிவபத்தி யுடையவராக வளர்ந்து வந்தார். திருநீறு அணிதல், சிவநாமத்தை உச்சரித்தல், சிவ தொண்டர்களைக் கண்டால் அவர்களை வணங்குதல் போன்ற ஒழுக்கங்களில் அவர் சிறந்து விளங்கினார். திருமணப் பருவம் எய்தியதும் பெரியவர்கள் பேசி ஒழுங்குசெய்த பரமதத்தன் என்பானை மணஞ்செய்து இல்லறத்தில் ஈடுபட்டார்.

பரமதத்தன், நாகப்பட்டினத்து வணிகர் நிதிபதியின் மகன். திருமணத்தின் பின் மாமனார் தனதத்தனின் விருப்பத்துக்கு இணங்கிக் காரைக்காலிலேயே புனிதவதி யாருடன் தனிமனையில் வாழ்ந்து வந்தான். வணிகத்துறையில் ஊக்கமாக உழைத்துப் பொருள் வளத்தைப் பெருக்கினான். புனிதவதியார், கணவனுக்குச் செய்யும் கடமைகளைக் காதலுடன் செய்தும் வீட்டுக்கு வரும் விருந்தினருக்குப் பொன்னும் பொருளும் கொடுத்து உதவியும் இல்லறத்தை இனிதே நடத்தி வந்தார். சிவ பெருமானைப் பத்தியுடன் நாளும் பொழுதும் பணிந்து பரவுதலையும் வழுவாது செய்து வந்தார்.

ஒருநாள் பரமதத்தனை அவனுடைய தொழில் நிலையத்திற் சிலர் காண வந்தனர். வந்த அலுவலை முடித்துக் கொண்டு இரண்டு மாங்கனிகளை அவனுக்கு அன்பளிப்பாகக் கொடுத்துவிட்டுச் சென்றனர். அவன் அம் மாங்கனிகளைத் தனது மனைவிக்கு அனுப்பி வைத்தான். புனிதவதியார் அவற்றைப் பெற்றுக்கொண்டு சமையல் வேலையில் ஈடுபடத் தொடங்கினார். அவ்வேளை அடியார் ஒருவர் பசியால் வாடியவாறு வீட்டு வாயிற் படியை அடைந்தார்.

புனிதவதியார் அடியாரை வரவேற்று, கால் கழுவ நீர் கொடுத்து, அமரச் செய்து அமுது படைத்தார். ஆனால் கறி எதுவும் இருக்கவில்லை. கறிகள் இன்னமும் சமைக்கப்படவில்லை. அம்மையார் கணவன் அனுப்பிய இரண்டு மாங்கனிகளில் ஒன்றைச் சீவி அடியாருக்குப் படைத்தார். அடியார் சோற்றை மாம்பழத்துடன் உண்டு

பசியாற்றி, அம்மையாரை வாழ்த்திச் சென்றார்.

பரமதத்தன் பகல் உணவுக்கு வீட்டுக்கு வந்தான். மனைவியார் உணவைப் பரிமாறினார். கூடவே அவன் அனுப்பி வைத்த மாங்கனியையும் கொண்டு வந்து வைத்தார். மாங்கனியைச் சுவைத்த பரமதத்தன் அதன் சுவைமிகுதியால் மற்றைய கனியையும் கேட்டான். மனைவியார் அதற்குப் பதில் சொல்லும் வகை அறியாது, பழத்தை எடுத்து வருபவர்போலச் சென்றார்.

உள்ளே சென்று உள்ளம் உருகித் தான் நாளாந்தம் வணங்கும் அகிலநாயகரை வேண்டினார். என்ன அதிசயம்! அவரது கரத்தில் மாங்கனி ஒன்று தோன்றியது. அது கண்டு மகிழ்ந்த அம்மையார் கனியைக் கொண்டு சென்று கணவனுக்குக் கொடுத்தார். அதனை உண்ட கணவன், “இது முன்னைய பழம்போல இல்லை. அதனினும் மிகுந்த சுவையாகவுள்ளது. இதனை எங்கே பெற்றாய்?” என்று கேட்டான். அம்மையார் வேறு வழியின்றி நடந்ததைச் சொன்னார்.

பரமதத்தன் பெரிய கடவுள் பத்தனல்லன். அவனுக்கு அம்மையார் சொன்ன தொன்றும் விளங்கவில்லை. சிவனருள் என்கிறாய். அப்படி என்றால் அவனருளாலே இன்னுமொரு கனி பெற்றுவா பார்ப்போம் என்றான்.

ஈசனருள் எனக் கேட்ட
இல்லிறைவன் அது தெளியான்
வாசமலர்த் திரு அனையார்
தமைநோக்கி மற்று இதுதான்
தேசுடைய சடைப் பெருமான்
திருவருளேல் இன்னமும் ஓர்
ஆசில்கனி அவன் அருளால்
அழைத்து அளிப்பாய் என மொழிந்தான். (1)

புனிதவதியார் சுவாமி அறைக்குட் சென்று இறைவனை வணங்கி மற்றுமொரு கனிபெற்று வந்தார். அதனைக் கணவனிடம் கையளிக்கையில் அது மறைந்தது. பரமதத்தன் வியப்புற்றான். உண்மையை உணர்ந்தான். ‘‘இவள் தெய்வப் பிறவி; வழிபாட்டுக்கு உரியவள்; இவளுடன் வாழுதல் நல்லதல்ல’’ என்று எண்ணிக் கொண்டான்.

சில நாட்களின் பின் பொருள் ஈட்ட வெளியூர் செல்வதாகச் சொல்லிப் புறப்பட்டான். புனிதவதியாரும் சுற்றத்தவரும் வழியனுப்பி வைத்தனர். சென்றவன் திரும்பி வரவேயில்லை.



ஊருக்குத் திரும்பிவராத பரமதத்தனை உறவினர் தேடலாயினர். அவன் பாண்டிநாட்டில் இருப்பதை அறிந்து, புனிதவதியாருடன் அவன் தொழில் நடத்தும் பட்டினத்தை அடைந்தனர். அங்கு அவன் வேறொரு பெண்ணை மணஞ் செய்து குடும்பம் நடத்தி வருவதை அறிந்தனர். அவன் தன் குடும்பத்துடன் வந்து புனிதவதியாரை வணங்கி நின்றான். 'இவர் மனிதகுலத்தினர் அல்லர். தெய்வம். அதனாலேயே இவரை விட்டுப் பிரிந்தேன். பாண்டிநாட்டில் எனக்குப் பிறந்த இந்தப் பெண் குழந்தைக்குப் புனிதவதி என்றே பெயரும் வைத்துள்ளேன்' என்றான். அவன் நிலைமையை அறிந்த புனிதவதியார்,

ஈங்கிவன் குறித்த கொள்கை
இதுவெனின் இவனுக் காகத்
தாங்கிய வனப்பு நின்ற
தசைப்பொதி கழித்திங்(கு) உன்பால்
ஆங்குநின் தாள்கள் போற்றும்
பேய்வடிவு அடியே னுக்குப்
பாங்குற வேண்டும் என்று
பரமர்தாள் பரவி நின்றார். *(2)*

கணவனுக்காகத் தாங்கிய அழகுமிகுந்த உடலை விடுத்து, இறைவனை வணங்கி அவரது தாள்களைப் போற்றுவதற்கு உகந்த பேய்வடிவை அம்மையார் பெற்றார். அத்துடன் அவரது இவ்வுலகக் காதல் வாழ்வு நிறைவுற்று மறுவுலகக் காதல் வாழ்வு மலர்ந்தது.

பேய்வடிவு அழகில்லாத வடிவு. அழகில்லாத வடிவைத் தாங்கி ஆண்களின் காமப் பார்வை படாதவாறு ஆலயங்களில் இறைவனை அமைதியாக வணங்க முடியும் என்பது அம்மையாரின் முடிவு. மேலும் தனது கணவனுக்காகத் தாங்கிய உடலைப் பிற ஆடவர் பார்ப்பதும் கற்புடைமை ஆகாது. அதனை ஆமோதிப்பவர் போல இறைவரும் அவர் கேட்ட வடிவத்தை அளித்தருளினார்.

அம்மையாரின் பிற்கால வாழ்வு இறைவனோடு உறவாடும் வாழ்க்கையாக அமைந்தது. இதனை அவர் அருளிச்செய்த அற்புதத் திருவந்தாதி, திருவிரட்டை மணிமாலை ஆகியவற்றால் நன்கு அறியலாம். திருக்கயிலையில் அவர் இறைவனிடம் வேண்டியவை இவை:

*இறவாத இன்ப அன்பு*
*வேண்டிப்பின் வேண்டு கின்றார்*
*பிறவாமை வேண்டும் மீண்டும்*
*பிறப்புண்டேல் உன்னை என்றும்*
*மறவாமை வேண்டும் இன்னும்*
*வேண்டும்நான் மகிழ்ந்து பாடி*
*அறவாநீ ஆடும் போதுன்*
*அடியின்கீழ் இருக்க என்றார்.* *(3)*

இறைவர் அருள்பாலித்து, 'அம்மையே! திருவாலங்காட்டுக்குச் சென்று அங்கு எமது நடனத்தைக் கண்டு இன்புற்றிருப்பாயாக!' என்று திருவாய் மலர்ந்தருளினார். அம்மையாரும் அவ்வாறே செய்தார். அங்கிருந்த காலத்தில் மூத்த திருப்பதிகங்கள் பாடித் திருவாலங்காட்டுப் பெருமானைத் தொழுதார்.

--------------------

1. *திருத்தொண்டர் புராணம்: காரைக்கால் அம்மையார், பாடல் 29*
2. *திருத்தொண்டர் புராணம்: காரைக்கால் அம்மையார், பாடல் 49*
3. *திருத்தொண்டர் புராணம்: காரைக்கால் அம்மையார், பாடல் 60*

30

# திருமண வாழ்த்து

1

## அகவல்

அன்பும் பண்பும் அறிவும் ஆற்றலும்
இன்பம் செய்யும் ஏற்றமும் தோற்றமும்
துன்பம் துடைக்கும் துணிவும் துலங்கும்
மன்பதை போற்றும் மணமகன் தானும் -

நற்குணம் நான்கும் நடைமுறை அறிவும்
பொற்புறு மனமும் பூமகள் அழகும்
தற்கொண் டவனைத் தாங்கிடும் திடமும்
இற்பணித் திறமும் இலங்கிடும் மகளும் -

ஒருவரை ஒருவர் விரும்பிநன் னாளில்
திருமணம் செய்தே சேர்ந்தனர் ஒன்றாய்!

இனியிவர் இருவரும் தனிமனை தன்னில்
இனியநல் இல்லற வினைகளை இயற்றி
மருந்தே யாயினும் விருந்தோ டருந்தி
அருந்தமிழ் மரபின் விழுமியம் யாவையும்
அன்புறப் பெருக்கி இன்பினில் திளைத்துப்
பண்புறு மக்களைப் பாங்குறப் பெற்றவர்
குறுகுறு நடந்து செய்யும் குறும்பிலும்
சிறுசிறு மழலைத் தேனிலும் திளைத்துப்
புவியினில் அவர்களைப் புகழ்பெற வளர்த்து
உவமையில் ஊக்கம் உழைப்பால் உயர்ந்து
சீர்சிறப் போடு சிறந்து விளங்கி
பேரிடர் வரினும் நிலைபி றழாது

அன்றிற் சோடிகள் போலவே ஒன்றாய்
இன்றுபோல் என்றும் இணைபிரி யாது
எல்லாம் வல்ல இறைவன் அருளால்
நல்லாய் நன்மைகள் நாளும் இயற்றி
வாழ்க மனம்போல் வாழ்க
வாழ்க என்றே வாழ்த்துவம் யாமே!

## 2

## வெண்பா

ஆணழகன் மன்னவனும் அன்புமகள் ஆயிழையும்
மாணெழிலார் மன்றில் மணஞ்செய்தார் - பேணியிவர்
நல்லறமாம் இல்லறத்தில் நாளும் மகிழ்ந்திருந்து
வல்லவராய் வாழ்க வளர்ந்து.

## விருத்தம்

பண்புசார் குடியில் வந்த பக்குவப் பெற்றோ ருக்கு
முன்புசெய் தவத்தால் வாய்த்த முத்தன்ன குணத்து மைந்தர்
தன்பணி தானே செய்து சாதனை நாட்டி ஆற்றல்
மன்பதை போற்ற வைக்கும் மணமகன் தானும் அன்பால் -

குணமதிற் சிறந்த மேன்மைக் குலத்துறு தந்தை தாயர்
இணையிலாத் தவத்தாற் பெற்ற எழில்மகள் அடக்கம் அன்பை
அணிகல னாகக் கொண்டாள் ஆற்றலும் அறிவும் மிக்காள்
மணமகள் தானும் நாடி மனமுறக் காதல் செய்து -

உரியநன் னாளில் உற்ற உறவினர் அறிஞர் மற்றும்
பெரியவர் சிறுவர் நண்பர் பீடுற அமர்ந்த மன்றில்
தரும்பயன் அளிக்க வல்ல தருமங்கள் ஆற்றி வாழத்
திருமணஞ் செய்து கொண்டார் திருவருள் மேவ நன்கே!

இனியிவர் ஒருவ ராக இணைபிரி யாது சேர்ந்து
தனிமனை யமைத்த றங்கள் தகவுற வளர்த்தும் இன்பம்
நனிமிகத் துய்த்தும் நல்ல மக்களைப் பெற்றும் சூழும்
இனநலம் வளர்த்தும் பெற்றோர் மகிழவும் இனிது வாழ்க!

புவியினர் போற்றப் பெற்ற மக்களைப் புரக்க வேண்டும்
தவநலம் சிறக்க வேண்டும் தருமத்தைப் பேண வேண்டும்
கவலைகள் தீர வேண்டும் கடமைகள் புரிய வேண்டும்
பவநலப் பார தத்துப் பண்பாட்டை வளர்த்தல் வேண்டும்.

பாலினைத் தேனைப் போலப் பண்புகள் துலங்க வாழ்க
ஏல்புறு செல்வம் யாவும் ஈட்டியே சிறந்து வாழ்க
வாலறி வாளன் மைந்தன் மாலவன் மருகன் வள்ளி
வேலவன் அருளி னாலே வென்றெலாம் வாழ்க வாழ்க!

## 3
## வெண்பா

அரியகுணம் வாய்ந்த அறிவறிந்த நாதன்
திருவனைய நாயகியைச் சீரார் - பெருமன்றில்
அன்பால் மணஞ்செய்தார் ஆதரவால் இல்லறத்தில்
இன்பால் இனிவாழ்க வே.

## அகவல்

ஆன்ற குலத்து தந்தையார் அன்பு
சான்ற குணத்துத் தாயார் இருவரும்
தீதில் இல்லறம் சிறக்கப் பெற்ற
ஏதமில் மைந்தர் இலங்கு சமய
அறிவிற் சிறந்தவர் அதியுயர் ஒழுக்க
நெறியில் நிற்பவர் நிதமும் கற்பவர்
அடக்கம் மிகுந்தவர் யாவரும் போற்ற
நடக்கும் இயல்புடை நாயகன் தானும் -

குணமார் நற்குலக் குடிநலப் பெரியோர்
இணையில் இல்லறம் இயற்றிப் பெற்ற
அன்புப் புதல்வி அழகுச் செல்வி
பண்பும் குலத்துப் பரிசும் அறிந்த
கன்னல் மொழியாள் கணவனைப் பேணித்
தன்னையும் காக்கும் நாயகி தானும் -

மாலைகள் மாற்றிக் கணவன் மனைவியாய்ச்
சாலவே இல்லறம் தாங்கத் துணிந்தனர்.
இல்லறம் தன்னில் இருந்திவர் ஒன்றாய்ச்
சொல்லும் அறங்களைத் தூய மனத்துடன்
அன்புற நடத்தி இன்பினில் திளைத்துப்
பண்புறு மக்களைப் பாங்குறப் பெற்றும்
அந்தமிற் செல்வம் அறவழி ஈட்டியும்
செந்தண்மை பூண்டும் திருவரு ளாலே
சால்புறு தமிழைத் தாங்கி வளர்த்தும்
ஆல்போல் தழைத்தும் அறுகுபோல் ஊன்றியும்
வாழ்க என்றும் வாழ்க நன்றே
வாழ்க என்றே வாழ்த்துவம் யாமே!

## வாழி விருத்தம்

வாழ்க வள்ளுவர் வகுத்தநல் இல்லறம்
வாழ்க செந்தமிழ் வளர்த்தபண் பாட்டியல்
வாழ்க அந்தணர் வையகம் வானகம்
வாழ்க நம்மண மக்களும் வாழ்கவே!

## 4
## வெண்பா

காதலித்துக் காதலித்துக் காலத்தை வீணாக்கிப்
பேதலித்து நிற்காது பின்னிவந்த - சோதனைகள்
வென்றுமண மன்றில் விளங்கும் மணமக்காள்
ஒன்றியினி வாழ்க உயர்ந்து.

ஒருமனமாய் ஓருயிராய் ஒன்றான உங்களுக்குத்
திருமணமும் தேவையில்லைத் தெய்வ - அருளாலே
காதலிலே வெற்றிபெற்றுக் கைப்பிடித்த காட்சியிது
சாதனைதான் வாழ்க தழைத்து.


காதலுக்குச் சாதியில்லைக் காண்சமய பேதங்கள்
ஏதுமில்லை என்பதனை ஏமுறவே - மேதினிக்குப்
போதிக்கும் உங்கள் புதுமைத் திருமணத்தின்
நீதியென்றும் வாழ்க நிலைத்து.

காதலுக்குக் கண்ணும் கருத்துமுண் டாமதனின்
வேதனைக்குச் சக்தி மிகவுண்டாம் - ஆதலினால்
தீதொன்றும் இல்லைச் சிறந்த எதிர்காலம்
ஆதவனைப் போலுதிக்கு மாம்.

பிரிந்திருந்த காலம் பெரிதுமுங்கள் அன்பு
வருந்திவலு வேறி வளர்ந்தே - பரந்தபுவி
போலப் பொறுத்தின்பப் பொன்னாளைக் காண்கிறது
ஞாலம் புகழுமுமை நன்கு.

கேழிற் செயல்செய்த கேழில் மணமக்காள்
வாழி மனம்போல மாண்புறவே - வாழ
வழிசொன்ன வள்ளுவரும் வாசுகியும் போல
எழிலாக இணைந்தென்று மே.





காந்தளகம்

தமிழீழம், சாவகச்சேரி, நுணாவிலில் 28.10.1933இல் பிறந்தவர்; வேலுப்பிள்ளை மகன் விநாயகர் தந்தையார், தம்பியையா மகள் சின்னம்மா தாயார். நுணாவில் மேற்குக் கணேச வித்தியாசாலையில் தொடக்கக் கல்வி, சாவகச்சேரி இறிபேர்க் கல்லூரியில் மேல்நிலைக் கல்வி, பின்னர், சென்னைப் பல்கலைக்கழகத்தில் புவியியற் பட்டம் பெற்றவர்.

இலங்கை கல்வி அமைச்சின் ஆசிரியர் ஆலோசகர் சான்றிதழ், இலங்கைப் பல்கலைக்கழகக் கல்வியாளர் தகைமைச் சான்றிதழ், இலங்கைப் பல்கலைக்கழக நாடகக் கல்வித் தகைமைச் சான்றிதழ் பெற்றவர்.

மாத்தளை புனித தோமையர் கல்லூரியிலும் வயாவிளான் மத்திய மகா வித்தியாலயத்திலும் ஆசிரியர்; யோகபுரம் மகா வித்தியாலயத்திலும் அளவெட்டி அருணோதயாக் கல்லூரியிலும் முதல்வர். ஈழநாடு, கூட்டுறவு இதழ்கள் நடத்திய கவிதைப் போட்டிகளில் முதன்மைப் பரிசுகள் பெற்றவர்; கவியரங்கங்கள் மூலம் தமிழ்ப் பாச்சுவையை மக்களிடையே வளர்த்தவர். ‘கவியரங்கிற்கோர் கந்தவனம்’ என இரசிகமணி கனக செந்திநாதனிடம் பட்டம் பெற்றவர்.

மாத்தளை இலக்கிய வட்டம், யாழ் இலக்கிய வட்டம் ஆகியனவற்றின் நிறுவனர், எட்டு ஆண்டுகளாக யாழ் இலக்கிய வட்டத்தின் தலைவர். 1988 முதலாகக் கனடாவில் வாழும் இவர், அங்கு, எழுத்தாளர் இணையத்தின் தலைவர்; ஆத்ம ஜோதி தியான நிலையத் தலைவர்; சமூக, சமய, இலக்கிய அமைப்புகள் பலவற்றின் காப்பாளர்.

இலக்கியம், கவிதை, புவியியல், பாடப் பயிற்சி என முப்பதுக்கும் அதிகமான எண்ணிக்கையில் நூல்களை ஆக்கியவர்; சுன்னாகம் தனலக்குமி புத்தகசாலையிற் தொடங்கி, கனடா, ஜெர்மனி, பிரித்தானியா நாடுகளிலும் சென்னை காந்தளகத்திலும் இவரின் நூல்கள் பதிப்பாகியுள்ளன. இவரது 12 Short Stories, Lasting Light ஆகிய ஆங்கில நூல்களைக் கனடிய பாடப் புத்தக சபை, மேல்நிலை வகுப்புப் பாடநூல்களாக்கியுள்ளது. ஆத்மஜோதி காலாண்டிதழின் ஆசிரியர்.

நாடகங்களில் நடித்தவர், சிறுவர் நாடகங்களை எழுதியவர். ‘புத்திமான் பலவான்’ என்ற இவரின் நாடகம், அகில இலங்கைப் பாடசாலை நாடகப் போட்டியில் முதற் பரிசைப் பெற்றது.



ISBN 978-81-89708-49-8